Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

**Restaurant Tilko**



Special Offer
Buffer
On 18th, 19th, 20th of June
(Fully Air Condationed)

Tilko Jaffna City Hotel
Wdb:www.cityhoteljaffna.com
e-mail : info@cityhoteljaffna.com
Tel : 021 720 0707 70/6 K.K.S Road, Jaffna.
TILKO (C/1615)

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 06 புதன்கிழமை (20.06.2012) பக்கங்கள் 20 ஓசை - 263


தோல்வியை நிரந்தரமாக்கும்... (05)

பச்சிலைகளின் பயன்பாடு...

(12)


அடுத்த பிறவி தமிழனாக (10)

கிளிநொச்சியில் சோளம்

(03)


வரணியில் அட்டகாசம் (07)

## இளம் பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

துன்னாலை மேற்கில் இளம் பெண் ஒருவர் தூக்கில் தொங்கி மரணமடைந்துள்ளார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஹென்றிக் ஜெயந்தினி (வயது-27) என்ற இளம்பெண் மேற்படி பகுதியில் திருமணமாகி வசித்து வந்தார்.

நேற்றைய தினம் இவர் அவரது வீட்டில் இருந்து தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (27)

# காணி சுவீகரிப்பு விவகாரம்; பாதிப்பை தவிர்க்க நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

படையினரால் பொதுமக்களது காணிகள் சுவீகரிக்கப்படுவது சம்பந்தமாகவும், வடக்கில் மீள் குடியேற்றப்பட்ட மக்களது தேவைகளை அடையாளம் கண்டு தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பது சம்பந்தமாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

தற்போது வடபகுதியில் குறிப்பாக யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களில் படையினர் தமது தேவைகளுக்காக பொது 19 ஆம் பக்கம் பார்க்க

## பால்மா விலை குறைந்தது

(கொழும்பு)

குழந்தைக்களுக்கான பால் மாவின் மீதான விலைக்கட்டுப்பாட்டை அமுல் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில், நேற்று நள்ளிரவு முதல் குழந்தைகளின் பத்தொன்பது வகையான பால் மாக்களுக்கான விலைகள் குறைக்கப்படவுள்ளதாக உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

# எங்களை ஊருக்குச் செல்ல விடுங்கள் கவனத்தை ஈர்த்த போராட்டம்

### யாழ்.செயலகத்தில் குவிந்தனர் மாதகல் மக்கள்

(யாழ்ப்பாணம்)

மாதகல் மேற்கில் தங்களை மீள்குடியேற்றம் செய்யுமாறு கோரி மாதகல் மேற்கு (ஜே/152) கிராமசேவகர் பிரிவு மக்கள் யாழ்.செயலகத்தின் முன்பாக நேற்று முற்பகல் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத் தனர்.

1992ஆம் ஆண்டு தமது கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்த தாம் யுத்தம் முடிவடைந்த சூழலில் சொந்த ஊரிலேயே அகதிகளாக வாழும் நிலை உள்ளதாகவும், அண்மையில் தமது காணிகளைத் துப்பரவு செய்தவற்கு மாதகல் மேற்குப் பகுதிக்குச் சென்றபோது கடற்படையினரினால் விரட்டியடிக்கப்பட்டதாகவும் தெரிவித்து தம்மைத் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துமாறும் கோரியே இம்மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மாதகல் மேற்கு மீள்குடியேற்றத்திட்ட கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் சுமார் 268 குடும்பங்களைச் 19 ஆம் பக்கம் பார்க்க

## மிதிவெடியில் சிக்கி இளைஞர் கால் இழப்பு

(யாழ்ப்பாணம்)

நாகர் கோவில் கிழக்குப் பகுதியில் மிதிவெடியில் சிக்கிய ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தின்போது செல்வரட்ணம் செல்வதாஸ் (வயது-27) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்து இடது காலை இழந்து யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (27)

# பணிப்பாளரை பணிநீக்கம் செய்யுங்கள் மருத்துவர் சங்கம் போர்க்கொடி

### முற்றுகிறது விவகாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரைப் பணிநீக்கம் செய்ய வேண்டுமென அரச மருத்துவ சங்கத்தின் யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவ சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் ஊழல் சம்பவங்களுடன் தொடர்பானவர்களுக்கு யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராஜா உடந்தையாக இருந்துள்ளார்.

இதன் காரணமாக பலரிடமும் பல சந்தேகங்கள் எழுந்துள்ளன.

யாழ்.போதனா வைத்தியசாலையின் 19 ஆம் பக்கம் பார்க்க

# வலி.வடக்கில் பேரணி தடுத்து நிறுத்தினர் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)



வலி.வடக்குப் பகுதியில் மக்களை மீளக்குடியேற அனுமதிக்கக்கோரி வலி. வடக்குப் பிரதேச தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி பொலிஸாரினால் தடுக்கப்பட்டபோதிலும் இறுதியில் குறிப்பிட்டளவு மக்கள் தெல்லிப்பளை பிரதேச செயலரிடம் சென்று மகஜரை கையளிக்க அனுமதி வழங்கப்பட்டது.

நேற்றுக்காலை தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலய முன்றலில் வலி. வடக்குப் பொது மக்கள் மற்றும் யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், கஜேந்திரன் மற்றும் சீ.வி.கே. 19 ஆம் பக்கம் பார்க்க

## சேகுவேராவின் மனைவியுடன் சந்திப்பு

கியூபாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, புரட்சித் தலைவர் சேகுவேராவின் மனைவியை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பு ஹவானா நகரிலுள்ள அவரது வீட்டில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடக செயலாளர் விஜயானந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன்போது இருவருக்கும் இடையில் நட்பு ரீதியிலான கலந்துரையாடல் இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# மீள்குடியமர்வில் தாமதம் அரசைச் சாடுகிறார் சுரேஷ்

(யாழ்ப்பாணம்)

நியாயமான காரணம் எதுமின்றி உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்துவதை அரசாங்கம் தாமதித்து வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று குற்றஞ்சாட்டியுள்ளது.

மிதிவெடிகளை சாட்டாகக் கொண்டு இந்த மக்களை மீளக் குடியமர அனுமதிக்காது விட முடியாது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது.

மக்கள் குடியேறவுள்ள இடங்களிலுள்ள மிதிவெடிகளை அகற்ற வேண்டும் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் மிதிவெடிகளை அகற்றிய பின்னரும் பொதுமக்களை சொந்த இடங்களுக்கு செல்ல அனுமதிக்காமல் இருப்பதை ஏற்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டிய பகுதிகள் உள்ளன என்பது உண்மையாயினும் அவை பெரும்பாலும் வன்னியில் தான் உள்ளன. ஆனால் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் எந்தவித காரணமுமின்றி மக்கள் குடியேற அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றது என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் குடாநாட்டில் சுமார் 8,000 ஏக்கர் காணியை அரசாங்கம் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

எம்மிடமுள்ள தகவல்களின் படி 50,000 வரையிலான உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் 19 ஆம் பக்கம் பார்க்க

# சர்வதேச தலையீட்டை மக்கள் விரும்பவில்லை




(கொழும்பு)

கடந்த ஐ.நா. மனித உரிமைச் சபையின் கூட்டத் தொடரில், இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஊடாக, சர்வதேசத்தின் தலையீட்டை இலங்கையில் உள்ள மக்கள் விரும்பவில்லை என, ஐ.நா. மனித உரிமைச் சபையின் இலங்கைப் பிரதிநிதி மனிசா குணசேகர தெரிவித்துள்ளார்.

ஜெனிவா - ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 20ஆவது கூட்டத்தொடர், யூன் 18 ஆம் திகதி தொடங்கியுள்ளது. இதன் தொடக்க நாள் உரையின் போதே இலங்கையின் பிரதிநிதி மனிசா குணசேகர மேற்குறித்த கூற்றினைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரதிநிதி மனிசா குணசேகர ஆற்றிய உரையில் ஐ.நா மனித உரிமைச் சபையின் 19ஆவது 19 ஆம் பக்கம் பார்க்க

# அல்பிரட் துரையப்பாவை உதாரணமாகக் கொண்டு மாநகரசபை பயணிக்க வேண்டும்



(வேலணை)

யாழ். மாநகர முன்னைநாள் மேயர் அமரர் அல்பிரட் துரையப்பா அவர்களை உதாரணபுருஷராகக் கொண்டு தமக்குரிய கடமைகளைச் செய்யவேண்டும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அமரர் அல்பிரட் துரையப்பா அவர்களது குடும்பத்தினரின் நிதியுதவியுடன் யாழ்.மாநகர சபையால் யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட சுற்றுவட்டம் மற்றும் யாழ்.நங்கை சிலை திறப்பு விழாவில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் முன்னைநாள் மேயர் சுட்டுக் கொல்லப்பட்டபோது அப்போது நாம் மௌனம் சாதித்திருந்தாலும்கூட அது ஒரு தவறான நடவடிக்கையே என்பதுடன் அல்பிரட் துரையப்பா அவர்களது கடந்த கால சேவைகளை நினைவில் கொள்ளும் அதே வேளை அவற்றை நாம் பாராட்டவும் வேண்டும்.

அத்துடன் இன்றைய இந்த நிகழ்வு அவருக்குச் செலுத்தும் மரியாதைக்குரிய நிகழ்வென்பதுடன் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடுகளுக்கப்பால் சமூக சேவையை முன்னிறுத்தி எல்லோரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் யாழ்.நங்கையின் சிலையினை திறந்து வைத்த அமைச்சர் அதற்கு மலர்மாலையையும் அணிவித்ததைத் தொடர்ந்து சுற்றுவட்டத்திற்கான நினைவுக்கல்லினை அமரர் அல்பிரட் துரையப்பாவின் மைத்துனர் செந்தில்வேல் திரைநீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து சுற்றுவட்டத்திற்கு அண்மையான யாழ்கோட்டையின் மேற்குப்புறம்பான சிவன பண்ணை வீதிக்கருகே மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டன.

யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், அல்பிரட் துரையப்பா அவர்களது சகோதரன் நவரட்ணராஜா, மைத்துனர் செந்தில்வேல், இந்தியத்துணைத் தூதுவர் மகாலிங்கம், வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்துகொண்டனர்.

# கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி பற்றிய கூட்டம்

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை மீள செயற்படுத்தல் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் கைத்தொழில் பேட்டையில் காணிக்கு விண்ணப்பித்தவர்களுடனான கலந்துரையாடல் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் காணி பெறுவதற்காக விண்ணப்பித்த கைத்தொழிலாளர்களின் கோரிக்கைகள், மத்திய வங்கி, வங்கிகள, USAID நிறுவனத்தால் கைத்தொழில் பேட்டை காணிகளுக்கு விண்ணப்பித்த கைத்தொழிலாளரகளுக்கு வழங்கக்கூடிய கடன் மற்றும் நன்கொடைகள் தொடர்பான விடயங்கள் ஆராயப்படவிருக்கின்றது.

இக்கைத்தொழில் பேட்டை தொடர்பான கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட போர் கூடத்தில் நடைபெறும். மேற குறித்த கலந்துரையாடலில் தவறாது சமுகமளித்து தொழிலை ஆரம்பிப்பதற்குத் தேவையான உதவிச் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள் பற்றி அறிந்துகொள்ளுமாறு கைத்தொழிலாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# காணி மீட்புப் பேராட்டம் அம்மன் பக்தர்களையும் பாதித்தது



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை துாக்கையம்மன் ஆலயத்திற்குச் சென்ற அடியவர்கள் பலர் ஆலயத்திற்குச் செலலாது திரும்பிச் சென்ற சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலையில் இடம்பெற்றது.

ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் அதிக எணணிக்கையான பெண் அடியவர்கள் உட்பட பல நூற்றுக்கணக்கானவர்கள் ஆலயத்திற்கு வருவது வழமையாகும்.

நேற்றுக் காலை தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்தின் முன்னாள் இடம்பெறவிருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் காரணமாக காலை முதல் ஆலய சுற்றாடல் பகுதியில் அதிக எண்ணிக்கையான பொலிஸாரும் மற்றும் கலகம் அடக்கும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுக் காணப்பட்டனர்.

இத்துடன் ஆலயத்திற்குச் சென்றவர்கள் கூட காங்கேசன்துறை வீதி எட்டாம் கட்டைச் சந்தியில் வைத்து பொலிஸாரின் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே தொடர்ந்து பயணத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். இதன் காரணமாக பலரும் பொலிஸாரின் நடவடிக்கைகளினால் ஏதும் பிரச்சினைகள் எற்பட்டலாம் என்ற பயம் காரணமாக ஆலயத்திற்குக்கூட செல்லாது திரும்பிச் சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (02)

# குருமன்காட்டில் திருடர் கைவரிசை

(வவுனியா)

வவுனியா குருமன்காட்டில் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் நேற்று அதிகாலை திருடப்பட்டுள்ளது. வற்றாப்பளை கோவில் திருவிழாவிற்குச் சென்றுவிட்டு திரும்பியவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளையிலேயே இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றதாகச் சம்பவத்தில் பாதிப்படைந்த வர்த்தகர் தெரிவித்தார்.

பல இலட்சம் பெறுமதியான நகைகள் மற்றும் பணம் என்பனவே திருடப்பட்டதாகவும் தெரிவித்த அவர் வீட்டின் முன் கதவு வழியாகவே திருடர்கள் உள் நுழைந்திருப்பதாகச் சந்தேகம் கொள்வதாகவும் தெரிவித்தார். எனினும் அவர்கள் பொருட்களைத் திருடும் வரையில் தமக்கு எவ்வித சத்தமும் கேட்கவில்லை எனவும் எனினும் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த ஒருவர் வீட்டினுள் ஒருவர் நடமாடுவதைக் கண்டு மற்றவர்களை எழுப்பியதாகவும் தெரிவித்த வர்த்தகர் தம்மால் எவரையும் பிடிக்கமுடியவில்லை எனவும் தெரிவித்தார். இதேவேளை வவுனியா பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின அடிப்படையில் சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிஸார் தேடுதலில ஈடுபட்டதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர். (160)

# சின்னம் சூட்டும் நிகழ்வு

(அளவெட்டி)

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு இன்று முற்பகல் 11.30 மணியளவில் கல்லூரி மணடபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் கே.வேல் சிவானந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தெல்லிப்பளை பிரதேச செயலர் ஸ்ரீமோகன் கலந்துகொள்ளவுள்ளார். (93)

# கத்திவெட்டு சூத்திரதாரிக்கு விளக்கமறியல்

(திருநெல்வேலி)

ஒருவரை கத்தியால் வெட்டிப் படுகாயப்படுத்திய நபரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நேற்று உத்தரவிட்டார். பொனனம்பலம் நல்லை நாதன் என்பவர் நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் திருநெல்வேலி கிழக்கில் புவனேந்திரன் ரஜீவன் என்பவரை கத்தியால் வெட்டிக் காயப்படுத்தியிருந்தார் என கோப்பாய் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டார். இவரைப் பொலிஸார் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்தபோது இவரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் மா.கணேசராசா உத்தரவிட்டார். (137)

# தீர்மானத்தை மீறிச் செயற்படும் கல்வி நிறுவனங்களுக்கு நடவடிக்கை

(கரவெட்டி)

கரவெட்டிப் பிரதேசத்தில் தீர்மானங்களை மீறி மாலை நேர வகுப்புக்களை நடத்தும் தனியார் கல்வி நிலையங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதென வடமராட்சி தெற்கு, மேற்கு, கரவெட்டிப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கரவெட்டிப் பிரதேச செயலக பிரிவில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்கள் மாலை 6.00 மணிக்குப் பின்னர் இரவு நேர வகுப்புக்களை நடாத்திவந்ததால் மாணவர்களிடையே வேண்டாத பழக்க வழக்கங்கள், ஒழுக்கக் கட்டுப்பாடுகள் போன்ற விடயங்களை மீறக்கூடிய அபாயங்கள் ஏற்படும் என்ற அச்சத்தினாலும் பெற்றோரின் வேண்டுகோளினால இரவுநேர மாலை வகுப்புக்களை நடாத்தக்கூடாது என கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இத்தீர்மானத்தை ஒருசில தனியார் கல்வி நிலையங்கள் நடைமுறைப்படுத்தாமல் உதாசீனம் செய்ததையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (1i6)

# வவுனியாவில் சிரமதானம்



(வவுனியா)

வவுனியா நகரசபையும் வவுனியா பொலிஸாரும் இணைந்து நேற்று மாபெரும் சிரமதானப் பணியினை வவுனியா நகரசபை எல்லைக்குள் மேற்கொண்டிருந்தனர்.

சுமார் 400 பொலிஸ் உத்தியோகத்தர்கள், சிவில் பாதுகாப்பு குழுப்பிரதிநிதிகள், நகரசபை ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்ட இந்த சிரமதானப் பணியில் வவுனியாவினஅனைத்து வீதிகளும் துப்பரவு செய்யப்பட்டதுடன் கழிவுகள் உடனடியாக உழவியந்திரங்களில் ஏற்றப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டிருந்தன.

இச்சிரமதானப் பணி பற்றி நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் தியாகலிங்கம் தெரிவிக்கையில் வவுனியா நகர மக்கள் வீதிகளிலும் வெற்றுக்காணிகளிலும் குப்பைகளைப் போடுவதை வழக்கமாக்கியுள்ளனர். பல தடவை இது தொடர்பில் விழிப்புணர்வு வழங்கப்பட்டபோதிலும் மக்கள் காலத்திற்கு காலம் தெளிவற்றுச் செல்லும் நிலை காணப்படுகின்றது. எனவே பொலிஸார் மற்றும் நகரசபையினருடன் இணைந்து மேற்கொளளப்படும் சிரமதானத்திற்குப் பின்னர் வீதிகளில் குப்பைகளை இடுபவர்கள் மற்றும் வீதியையும் சூழலையும் அசுத்தப்படுத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுககப்படும் என தெரிவித்தார். (160)

# வடமாகாணத்திற்கு இரண்டு .பிராந்திய ஆணையாளர்கள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திற்கு இரண்டு பிராந்திய ஆணையாளர்கள் வடமாகாண ஆளுநர் சந்திரசிறியினால் நியமிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். நேற்று யாழ். செயலகத்தில் அரச அதிபரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற படையினர் பொதுமக்களது காணிகளைச் சுவீகரிப்பது மற்றும் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான சேமநலன்களை இனம்கண்டு நிவர்த்தி செயவதற்கான கூட்டத்திலேயே அமைச்சர் இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பிராந்திய ஆணையாளராகத் தியாகராசாவும், கிளிநொச்சி மாவட்டப் பிராந்திய ஆணையாளராக பத்மநாதனும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அலுவலகம் யாழில் திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

காணி சீர்திருத்த ஆணைக்குழு கடந்த காலங்களில், இயங்கிய போதிலும் கடந்த கால யுத்தம் காரணமாக ,இயங்க முடியவில்லை.

தற்போது யாழ்ப்பாணத்தில் காணி சீர்திருத்த ஆணைக்குழு அமைக்கப்பட்டுளளதன் மூலம் வட பகுதியில் குறிப்பாக கிளிநொச்சி, யாழ்ப்பாணம் பகுதிகளைச் சோந்த மக்கள் கொழும்புக்கு தமது காணி சம்பந்தமான விடயங்களை பூர்த்தி செய்ய அலைய வேண்டிய நிலையில் மாற்றம் கொண்டுவரப்பட்டதுடன் சுலப மாக்கப்பட்டுள்ளது என காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் புஞ்சி ஹேவா தெரிவித்தார்.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அலுவலகம் கடந்த இருபத்தைந்து ஆண்டுகால இடைவெளியின் பின்னர் மீண்டும் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் செயலக மேல் மாடியில் வட மாகாண ஆளுநர் ஜீ.எ.சந்திர சிறியினால் இவ் அலுவலகக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டபின்னர் யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுக்கையில், கடந்த காலத்தைப் போலல்லாது காணி சீர்திருத்த ஆணைக்குழுவானது ஜனாதிபதியின் ஆலோசனையின் பெயரில் வழிகாட்டலுடன் இயங்குகின்றது.

காணி இல்லாத மக்களுக்கு 20 பேர்சி காணிகளை வழங்குவதுடன் விவ சாய நடவடிக்கைகளுக்கும் பயிர்ச் செய்கைக் காணிகள் குத்தகை அடிப்படையில் வழங்கப்படும்.

அத்துடன் உல்லாசப் பயணத்துறைக்கும் காணிகள் பகிர்ந்தளிக்கப்படும். யாழ்ப்பாணத்தில் சுமார் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமாக காணப்படுகின்றது.

எதிர் காலத்தில் இந்தக்காணியும் கூட நல்ல முறையில் பராமரிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

யாழ். அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் மற்றும் அதிகாரிகள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

## கட்டண அதிகரிப்பு

(யாழப்பாணம்)

ஏ-9 வீதிப் பயணிகள் பெரும்பாலும் சிரம பரிகாரம் செய்வதற்கு நாடும் முறிகண்டியில் உள்ள கட்டணச் மலசலகூடத்தில் சலம் கழிப்பதற்கான கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை ஐந்து ரூபாவாக இருந்த சலம் கழிப்பதற்கான கட்டணம் கடந்த வாரத்தில் இருந்து பத்து ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் தென்னிலங்கையிலிருந்து வரும் சுற்றுலாப்பயணிகள் மற்றும் பிற மாவட்டங்களில் இருந்து வரும் பயணிகளும் குறித்த தொகையை வழங்கியே செல்லவேண்டியிருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.


## சேவையில் ஓய்வு

(யாழ்ப்பாணம்)

சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய துரை. எங்கரசு கடந்த 12 ஆம் திகதியிலிருந்து தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

ஆசிரியராக அதிபராக கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பணி களாற்றித் தற்போது இளைப்பாறியுள்ளார். நீர்வேலியில் பிறப்பிடமாகக்கொண்ட இவர் அங்கு முன்னெடுக்கப்படும் சமூக நலப் பணிகளிலும் ஆர்வத்துடன் பங்கேற்று வரும் இவர் ஆசிரியராக, அதிபராக, கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய இவர் தற்போது ஓய்வு பெற்றுள்ளாா.

## எந்தன் மனம் ஆறும் கந்தவனம் சென்றால்!



நந்தன வருடமதில் தொடங்குங்கள்
கந்தவன வாசல் [illegible] சேருங்கள்
எண்ணிவர வன்னி மரம் நாடுங்கள்
நந்தவன போலிருந்த புதுமை கேளுங்கள்
பன்னிரு கரத்தான் கழல் போற்றிடுங்கள்
வந்தனங்கள் பாடி உள்ளமதை உருகிடுங்கள்
செல்லன்னா துயர் தமை கூறுங்கள்
பல்லின மக்கள் வாழ வரம் கேளுங்கள்

*- பொலிகையூர் விசிந்தன்*

வலி அறியோம் வாதை அறியோம்
பொலிகண்டி முருகன் பாதம் பணிந்தால்
கந்தவனம் கண்ட கருணை முருகா
எந்த மனமும் ஆறும் கந்தவனம் சென்றால்

*- தும்பளையூர் சிவா*

பொலிகண்டி கந்தவன கல்யாண வேலவசுவாமி மஹோற சவம் இன்று இரண்டாம் திருவிழா

# செல்வச் சந்நிதி ஆலய சூழலிலுள்ள தற்காலிக கடைகள் உரிமம் பெற வேண்டும்

### நகர சபை தீர்மானம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை நகர சபையின் எல்லைக்குட்பட்ட வரலாற்று சிறப்பு மிக்க ஆலயமாக திகழும் தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகள் தவிர விசேட தினங்களில் போடப்படும் கடைகளின் உரிமையாளர்கள் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டையும் பெற்று உரிமம் பெறவேண்டும் என வல்வெட்டித்துறை நகர சபையால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சபைத் தலைவர் ந. அனந்தராஜ் தலைமையில் நடைபெற்ற 10 ஆவது மாதாந்தக் கூட்டத்திலே இத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த நகரசபையின் கண்காணிப்பில் உள்ள மீன் சந்தைகளின் இறைச்சிக் கடைகளிலேயே கோழி இறைச்சிகளை விற்க முடியும் ஏனைய வீடுகளில் மற்றும் இடங்களில் விற்பவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மீன்சந்தை குத்தகைக்காரர்கள் ஒருவார காலத்துக்குள் குத்தகைப பணத்தை செலுத்தி பற்றுச்சீட்டையும் பெற்றுக் கொள்ளுமாறும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சபை நிதியிலிருந்து மயிலியதனை இந்து மயானத்துக்கு சுற்றுமதில் அமைத்தல் பொலிகண்டி குடியேற்றத்திட்ட வீதி ஆதிகோவிலடி ஒழுங்கை ஆகியவற்றைத் திருத்தி அமைத்தல் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி வடிகால்களைச் சீர்செய்தல் போன்ற வேலைத்திட்டங்களும் நடைபெறுவதற்கு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

(116)

# கிளிநொச்சியில் சோள அபிவிருத்தி செயலகத்தில் கலந்துரையாடல்



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் சோள உற்பத்தி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கமநல அபிவிருத்திகள் வனஜ்வ்ராசிகள் அமைச்சர் எஸ.எம்.சநதிரசேன கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் வட மாகாணத்தில் அதிகளவு சோள உற்பத்திகளை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடலை மேற்கொண்டார்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் ஏற்றுமதிகளை நோக்காக கொண்டு சோள உற்பத்திகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் அதற்கான வசதிவாய்ப்புக்களை தாம் ஏற்படுத்தி தருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கிளிநொச்சி பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் நீல் தலுவத்த மேலதிக அரச அதிபர் பிரதேச செயலர்கள் கமநல சேவை நிலைய அதிகாரிகள் கிராம அலுவலர்கள் மற்றும் திணைக்களங்களின் உயரதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகிறது.

இதில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தேவி பாகவதம் என்றும் விடயம் பற்றி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் சொற்பொழிவாற்றுவார். (116)



கிளிநொச்சியில் பொலிஸாரின் மக்கள் தொடர்பாளர் அலுவலகம் ஏ - 9 வீதியில் பழைய வைத்தியசாலைக்கு முன்பாக நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. வட மாகாண சிரேஸ்ட பொலிஸ் மா அதிபர் காமினி சில்வா கட்டடத்திற்கான பெயர்பலகையை திரைநீக்கம் செய்து வைப்பதையும் திறந்துவைக்கப்பட்ட அலுவலகத்தின் தோற்றத்தையும் காணலாம். (29)

ஒருவன் எதை விதைக்கிறானே அதையே அறுப்பான்.
நல்லதைச் செய்தால் நன்மையே விளையும்.
- இயேசுநாதர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, . பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
விளம்பரப் பணிமனை : 0212220188
thinamurasu@live.com

## எனக்குச் சரி உனக்குப் பிழை!

நாம் சரி என்று நம்பிக் கொண்டிருப்பவை மட்டுமே சரியா? அல்லது வேறு சரிகளும் இருக்கலாம் என்பதை தெரிந்திருக்கிறோமா? நாம் சரி என்று கருதுவது இன்னொருவருக்கு தவறாகப் படலாம் என்பதும், அவர் சரி என்று கருதுவது நமக்குத் தவறாகத் தெரிவதையும் நாம் அனுபவத்தில் உணர்ந்திருக்கிறோம் அல்லவா!

இந்த சரி, தவறு என்பவைகளை பெரும்பான்மை சிறுபான்மைக் கணக்கெடுப்பில் ஜனநாயக ரீதியாகக் கூடத் தீர்மானித்துவிட முடியாது என்றும் அறிவோம். பூமி தட்டையானது என்றும், சூரியனே பூமியைச் சுற்றுகிறது என்றும் ஜனநாயகப் பெரும்பான்மையோடு நம்பிய காலம் இருந்ததை அறிவோமல்லவா!

இப்போது கூட ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் வேறு வேறு சரிகள் இருப்பதையும், அமெரிக்காவுக்கும் அல்கொய்தாவுக்கும் வேறு வேறு நியாயங்கள் இருப்பதையும் அவர்களில் ஒவ்வொரு தரப்புக்கும் உலகம் முழுவதிலும் கணிசமானளவு மக்கள் பேராதரவு இருக்கிறது என்பதும் நமக்குத் தெரியுமல்லவா!

நாயகன் திரைப்படத்தில், வேலு நாயக்கர் தன்னிச்சையாக நியாயத்தைக் கையிலெடுத்துக் கொலைகள் செய்வதைத் தவறென்று உணர்த்த அவரது மகள், நாயக்கரின் தோழரான பெரியவருக்கு கன்னத்தில் அறைவாள். அவர் தன் கண்முன்னால் செய்த கொலை தனக்குத் தவறாகத் தெரிவதால் தானும் அவருக்குத் தண்டனை கொடுக்கலாமல்லவா என்கிறாள். நாயக்கர் கோபப்பட்டு அவளை அடிக்கக் கை ஓங்குகிறார். "நான் சரி என்று நினைத்துச் செய்தது உங்களுக்குத் தப்பாகத் தெரிகிறதல்லவா அப்பா" என்று அவருக்கு உணர்த்துகிறாள் மகள்.

இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எல்லாத் தரப்பும் எல்லா மனிதர்களும் தாம் சரியானவர்கள் என்றே நம்பிக்கை கொண்டுள்ளனர். அதனால், நாம் மட்டுமே சரி நம்மிடம் மட்டுமே சரி இருக்கிறது என்று முறுக்கிக் கொண்டு நிற்பது ஒருபோதும் பிரச்சினை தீரப் போதுமானதில்லை. மற்றவர்களின் சரி என்ன என்பது பற்றிய கவனிப்பும் கணிப்பும் நமக்கு வேண்டியிருக்கிறது. வெறுமனே குறை கண்டு பிடிக்கும் வாதங்களினால் வாழ்க்கையை சீர்செய்து கொள்ள முடியாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒவ்வொருவரும் தாம் கண்ட ஒளியில் செல்வதையே விரும்புவர். அதையே சரி என்றும் மனப்பூர்வமாக நம்புவர். இதைத் தெரிந்து கொண்டாலே – அவர்களையும் புரிந்து கொண்டாலே நமக்கு அவர்களுடன் உரையாடலைத் தொடர முடியும். நமது சரியே ஒரே சரி என்ற எண்ணமே மற்றவரோடு உரையாட முடியாத நிலையில் நம்மை நிறுத்துகிறது.

நம் தவறுகளைக் கண்டுகொள்ள மறுத்து மற்றவர் தவறுகளுக்காய் முறுக்கிக்கொண்டு நேராய் நிற்பதில் நாம் பெருமைப்பட முடியாது. அப்படி நிற்பவர்களிடமும், நாம் தணிந்து அவர்களையும் தளர்த்தி வழிக்குக் கொண்டுவர முயல்வதில் இழிவெதுவுமில்லை. பலருக்குமான வாழ்வைச் செய்துதரும் மேன்மைச் செயலே அது.

மக்களிடமும் மனிதத்திடமும் நாம் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் எவரிடமும் பேச நமக்குத் தடை இல்லை. எல்லாத் தரப்புடனும் எல்லாச் சமூகங்களுடனும் நாம் பேச முடியும். நம்மிடம் மட்டுமே முழுச் சரியும் இருப்பதாக நினைத்துக் கொள்வதால்தான் இணக்கத்தைப் புறந்தள்ளும் இறுமாப்பு வெல்கிறது. வாழ்வு தோற்றுப் போகிறது.

– ஆசிரியர்

# புனர்வாழ்வு பெற்றவர்கள் மீது வழக்குத் தாக்கல்செய்ய முடியாது

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நீண்ட காலமாக சிறையில் இருந்தவர்களை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பி அவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கினால் மீண்டும் அவர்கள் மீது வழங்குத் தாக்கல் செய்ய முடியாது என்று உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சிராணி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கிருஷ்ணபிள்ளை அமலதாஸ் என்பவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணையின் போதே இந்தக் கருத்தை அவர் தெரிவித்தார். மனுதாரர் 2010 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டபோதிலும், அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் எதனையும் அரசாங்கத் தரப்பு இதுவரை தாக்கல் செய்யவில்லை என்று மனுதாரரின் சட்டத்தரணி குற்றஞ்சாட்டினார்.

ஆனால், யுத்தம் நடைபெற்றபோது அரசபடைகளுக்கு எதிராக தாக்குதல்களை நடத்தியதாக 3 குற்றச்சாட்டுக்களை சட்டமா அதிபர் சுமத்துவதாக அரச சட்டவாதி நீதிமன்றத்தில் கூறினார்.

இதில் ஒரு குற்றச்சாட்டில் இருந்து சந்தேக நபரை விடுதலை செய்வதற்கும், அடுத்த குற்றச்சாட்டுக்காக அவரை 6 மாதங்கள் புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பவும் சட்ட மா அதிபர் முடிவு செய்துள்ளதாகவும், அவர் கூறினார். அதேவேளை மூன்றாவது குற்றச்சாட்டு குறித்து மேலதிக விசாரணைகளை நடத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

ஆனால், புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட ஒருவர் மீது மீண்டும் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்று கூறினார் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்க இவ்வாறான நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது என்று கூறிய நீதிபதி கே. சிறிபவன், சிறைச்சாலைகளில் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு எதிரான வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறும் அரச சட்டவாதிக்கு உத்தரவிட்டார். வழக்கு மீண்டும் அடுத்த மாதம் 20 திகதி விசாரணைக்கு வரும் போது, மனுதாரர் குறித்த இறுதி முடிவை அறிவிக்குமாறும் சட்டமா அதிபருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

## தனியாருக்கு அனுமதி

(வவுனியா)

டெங்கு நோய்க்கு எதிரான மருந்துப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு தனியார் துறையினருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த மாதம் 25 ஆம் திகதியிலிருந்து ஜுலை மாதம் 25 ஆம் திகதி வரையில் டெங்கு ஒழிப்பு மாதமாக அமுலாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கட்டுவன தாக்குதலை விசாரிக்க அரசியல் அழுத்தங்கள் இல்லை

## பொலிஸ்மா அதிபர் கூறுகிறார்

(கொழும்பு)

கட்டுவன ஜே.வி.பி.யின் கூட்டத்தின் மீது தாக்குதல் நடத்தி இரண்டு பேரை சுட்டுக்கொன்ற சம்பவத்தின் சந்தேக நபர்களை கைதுசெய்ய வேண்டாம் எனவும் அரசியல் அழுத்தங்கள் எதுவும் வரவில்லை எனவும் பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்ககோன் தெரிவித்துள்ளார்.

இந்த இரட்டைக் கொலை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஜுலம்பிட்டியே அமரேவை கைதுசெய்வதற்காக சில பொலிஸ் குழுக்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

கட்டுவன துப்பாக்கிச் சூட்டுச் சமபவத்தில், இரண்டு பேர் கொலலப்பட்டதுடன், மேலும் இருவர் காயமடைந்தனர். 5 மோட்டார் சைக்கிள்களில், சுமார் 10 பேர் சென்று, இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

சம்பவம் குறித்து இதுவரை கட்டுவன பொலிஸார் 25 பேரிடம் வாக்குமூலங்களைப் பதிவு செயதுள்ளனர். இந்த விசாரணைகள் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. புலனாய்வுப் பிரிவினர் 23 பேரிடம் விசாரணை நடத்தி, வாக்குமூலங்களை பதிவுசெய்துள்ளனர்.

இந்தத் தாக்குதலை நடத்த ஜுலம்பிட்டியே அமரே என்ற நபர் வந்ததாக ஒருவர் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமரே உட்பட ஏனைய சந்தேக நபர்களை கைதுசெய்வதற்காக குற்றப்புலனாய்வுப் பிரிவினருடன், அரசபுலனாய்வு சேவை, விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட பொலிஸ் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

# மாலபே மருத்துவக் கல்லூரிக்கு எதிராக பொது அணி அமைப்பு

(கொழும்பு)

மாலபே மருத்துவக் கல்லூரிக்கு எதிராக பொது அணி நாட்டிலுள்ள மருத்துவ வாண்மையாளர்கள், அறிஞர்களின் சங்கங்களான அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம், பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்மேளனம் மற்றும் பல் வைத்தியர்கள் சங்கம் ஆகியன மாலபேயிலுள்ள தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிரான அணியொன்றை அமைத்துள்ளதாக அறிவித்துள்ளன.

ஒரு மருத்துவக் கல்லூரியை அமைப்பதற்கான தகுதியை கொண்டிராத இக்கல்லூரியை மூடுவதற்கான தமது பேரம்பேசும் ஆற்றலை அதிகரிப்பதற்காக சங்கங்கள் ஒரு அணியில் சேர்ந்துள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் சந்திகா எபிட்டகடுவ தெரிவித்தார்.

இக்கல்லூரிக்கு எதிரான தமது போராட்டத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் ஆதரவைத் திரட்டும் முகமாக அவர்களுடன் பேசவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தத் தனியார் மருத்துவக் கல்லூரி, பாதி மூளையுள்ள சிசுவைப் போன்றது. இது நீண்ட காலம் உயிர்வாழ முடியாதது. 2009 இல் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இதன் அத்திவாரம் ஆட்டங்கண்டு வருகின்றது என அவர் கூறினார்.

இந்தத் தனியார் மருத்துவக் கல்லூரி இதுவரை ஆறு தொகுதி மாணவர்களை உள்வாங்கியுள்ளது. ஆனால் இதில் ஒரு தொகுதி மாணவர்களுக்குக் கூட மருத்துவப் பயிற்சி வழங்கப்படவில்லை. அவர்கள் ஓர் அனர்த்தத்தை நோக்கிப் போய்க்கொண்டுள்ளனர்.

உயர்க்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா கூறுவது போலவன்றி, இந்தக் கல்லூரி அடிப்படைத் தேவைகளைக் கொண்டதல்ல என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் தலைவர் ரஞ்சித் நிர்மல் தேவசிறி கூறினார்.

இவ்வருடம் மார்ச் 30ஆம் திகதியளவில் போதனா வைத்தியசாலையை அமைப்பதாக மாலபே கல்லூரி கூறியபோதும் அது இதுவரை நடக்கவில்லை. வைத்தியக் கல்வியில் சரியெனத் தெரிந்ததையே செய்ய வேண்டும்.

பட்டுத் தெளியும் தீர்மானங்களை எடுப்பது கூடாது. இது பெரும் ஆபத்தான காரியம். உயிர் இழப்புகளுக்கும் இட்டுச் செல்லும் என அரசாங்க பல் வைத்திய சங்கப் பொதுச் செயலாளர் டாக்டர் ஆனந்த ரத்நாயக்க கூறினார்.



# தோல்வியையே நிரந்தரமாக்கும் உணர்ச்சிகரத் தமிழ் அரசியல்!

- மதியழகன் கட்டுரையிலிருந்து

அரசியலில் உணர்ச்சிகரமான அணுகுமுறை ஏற்படுத்துகின்ற விளைவுகள் எப்போதும் பயங்கரமானவையாக - பாதக மானவையாகவே அமைவதுண்டு. அறிவுபூர்வமாக அணுகப்படும் விசயங்கள் நன்மைகளையும் வெற்றியையுமே தருவன. உலக அரசியல் வரலாறு இந்த இரண்டு பிரிகோடுகளில் தான் இயங்குகிறது. எதை நாம் விதைக்கின்றோமோ அதுவே பயிராகவும் விளைச்சலாகவும் நமக்கு மீண்டும் கிடைக்கும்.இது அடிப்படைவிதி.

இந்த விதியை எப்படிப் புறந் தள்ளிவிட முடியும்?

ஆனால், தமிழர்கள் இந்த விதியைப் புறந்தள்ளியே வருகிறார்கள். அவர்கள் வரலாற்றின் எதிர்த்திசையிலேயே நெடுங்காலமாகப் பயணிக்கிறார்கள். அதனாலேயே அவர்கள் தொடர்ந்தும் தோல்விப் பரப்பில் நின்று விம்ம வேண்டியுள்ளது. தங்களால் வெற்றியடைய முடியாத போதெல்லாம் எதிரியைச் சபிக்கிறார்கள். எப்போதுமே எதிர்த்தரப்பை வசைபாடுவோரும் எல்லை கடந்த அளவுக்கு எதிர்ப்போரும்தோல்வியை நிரந்தரமாக்கியோராகவே இருப்பர்.

தோல்வியை நிரந்தரமாகவே தங்களிடம் கொண்டுள்ள சமூகங்கள், எதிர்த்தரப்பின் மீதான சபித்தலிலும் கடிந்து கொள்ளுதலிலும் ஒருவித சுகத்தைக் காண்கின்றன. அதுவும் உணர்ச்சி மயப்பட்டே நிகழ்கிறது. அவை மேற்கொள்கின்ற எதிர்ப்பு நடவடிக்கைகள் கூட உணர்ச்சிகர மானவையாகவே உள்ளன.

வெற்றிதோல்வி என்பதற்கு அப்பால் எதிர்த்தரப்பை வசைவதிலேயே தமிழர்களும் சமனிலை அடைகிறார் கள் அல்லது திருப்தியடைகிறார்கள். யதார்த்தத்தில் தோல்வியின் மீதே அவர்கள் வாழ்கிறார்கள் உறங்கிக் கொண்டிருக்கின்றனர்.

உணர்ச்சிகரமாக அணுகப்படும் அரசியலானது அழிவிலும் பின்னடைவிலுமே போய்ச் சேர்கிறது. ஆனால், அந்த அரசியலுக்கு ஒரு கட்டம்வரையில் மக்களிடம் கிடைக்கின்ற பேராதரவு மிகப்பெரிது. இது ஒரு விளங்கிக் கொள்ளக் கடினமான விசயந் தான். ஆயினும் அப்படித்தான் யதார்த்தம் உள்ளது.

இன, மதக் கலவரங்கள் எல்லாம் உணர்ச்சிகரமான அணுகுமுறையின் விளைவுகள். இந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும் யுத்தமும் சரி, அரசியலும் சரி மயானத்திலேயே போய் முடிகின்றன.

பிரிட்டிஷ் மகாராணி இரண்டாம் எலிசபெத் பதவியேற்று 60 ஆண்டு நிறைவு பெற்றதையடுத்த கொண்டாட்டத்துக்காக கடந்த 03.06.2012 இல் இலங்கை ஜனாதிபதி லண்டனுக்குச் சென்றவேளை அங்கே புலம்பெயர் தமிழர்கள் மிகப்பெரிய அளவில் தீவிர எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளால் மகிந்த ராஜபக்ஷ மிகுந்த நெருக்கடிக்குள்ளாகியுள்ளார். இது இலங்கைக்கு மேலுமொரு நெருக்கடியாக அமைந்துள்ளது. ஏற்கனவே போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற குற்றச்சாட்டுகளால் துவண்டு போயிருக்கும் இலங்கைக்கு இந்த எதிர்ப்பு மேலும் ஒரு சங்கடமான நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் புலம்பெயர் தமிழர்கள் உட்பட ஏனைய தமிழர்களுக்கும் வெற்றியாக அமைந்துள்ளதாக ஒரு தோற்றமுண்டு.இவை தமக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி என வாதிடுவோரும் உள்ளனர். அவர்கள் அதை அப்படித்தான் நம்புகின்றனர்.

ஆனால், அது அத்தகைய வெற்றியைப் பெற்றுள்ளதா? அல்லது அது நிர்ணயிக்கத் தக்க வெற்றியைத் தரக்கூடிய அணுகுமுறையாக அமைந்துள்ளதா என்பதே இங்கே உள்ள கேள்வியாகும். அதாவது, இதன் இறுதி விளைவுகள் எப்படி அமைந்துள்ளன? மேலும் எவ்வாறு அமையவுள்ளன? என்பதே அந்தக் கேள்விகளாகும்.

இதை மேலும் விவாதிப்பதற்கும் விளங்கிக் கொள்வதற்கும் முன்னர் இதற்குப் பொருத்தமான நாமறிந்த இன்னொரு உதாரணத்தைப் பார்ப்போம்.

இலங்கை - இந்திய உடன்படிக்கையை எதிர்த்து புலிகளுக்கும் இந்தியப் படைகளுக்கும் இடையில் நடந்த போரின் பின்னர் இந்தியப் படைகள் வெளியேறிச் சென்றன. "உலகத்தின் நான்காவது வல்லரசுடன் மோதி வெற்றிபெற்றோம்" என்று பகிரங்கமாகவே புலிகள் கூறிவந்தனர். ஆனால், இறுதியில் (பத்தொன்பது ஆண்டுகளின் தாமதத்தின் பிறகு) இந்தியா புலிகளைத் தோற்கடித்தது.

ஆகவே, வெளித்தெரிந்த வெற்றித் தோற்றப்பாடுகளின் இறுதி விளைவுகள் பயங்கரமானவையாக - பாதகமானவையாகவே அமைந்தன.

மகிந்த ராஜபக்ஷவின் லண்டன் விஜயத்தை ஒட்டி புலம்பெயர் தமிழர்கள் மேற்கொண்ட நடவடிக்கையும் உணர்ச்சிகரமாகவே அமைந்துள்ளது.

புலிக்கொடிகளைத் தாங்கியவாறு, மிக ஆக்ரோஷமாகத் தங்களின் எதிர்ப்பை ஜனாதிபதிக்கு காட்டியுள்ளனர். இந்தச் செய்திகளை உலகத்தின் பல திசைகளிலும் இருக்கும் பெரும்பாலான தமிழ் ஊடகங்கள் முக்கியத்துவமளித்து வெளிப்படுத்தியுள்ளன.

ஆனால் புலம்பெயர் தமிழர்களின் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் எதிர்பார்ப்பதையும் விட எதிர்நிலை அம்சங்களையே அதிகமாக உருவாக்கக் கூடியனவாக உள்ளன.

1. இந்த எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டவர்கள் புலிகளின் ஆதரவாளர்கள் மட்டுமே. ஆகவேதான் அவர்கள் புலிக்கொடிகளை ஏந்தியிருந்தனர். எனவே இது தோல்வியைச் சந்தித்த புலிகளின் ஆதரவாளர்கள் மேற்கொண்ட ஒரு நடவடிக்கை என இலங்கை அரசு சிங்கள மக்களுக்கும் உலகத்துக்கும் சொல்லிச் சமாளித்துக் கொள்ள வாய்ப்பை அளித்துள்ளது.

2. புலிகளின் ஆதரவாளர்கள் இன்னும் இலங்கை அரசுக்கும் அமைதிக்கும் எதிராகவே செயற்படுகின்றனர். ஆகவே இதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அவசியம் என்ற பேரில் இலங்கையில் படைத்துறைக்கான முக்கியத்துவத்தை மேலும் வழங்கவும் அதிகரிக்கவும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

3. விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் இன்னும் உள்ளது. தப்பியோடிய புலிகளும் வெளிநாடுகளில் உள்ள புலிகளுமாக அவர்கள் இன்னும் அபாய நிலையை உருவாக்குதற்காக முயற்சிக்கிறார்கள் என்ற தோற்றப்பாட்டைச் சிங்களச் சமூகத்துக்கு காட்டமுறப்படும்.

4. இதேவேளை தமிழ்ப் பிரதேசங்களிலும் புலிப்பயத்தைக் காரணம் காட்டி அவற்றை இறுக்கமான சூழலுக்குள் தொடர்ந்தும் வைத்திருக்க முயற்சிப்பதற்கான காரணத்தையும் இதன் மூலமாக அரசாங்கம் பெற்றுக்கொண்டதாகும்.

5. தமிழ்ப்பிரதேசங்களில் படைக் குறைப்பைச் செய்யாமல் அதை நியாயப்படுத்துவதற்கான ஒரு காரணத்தை அரசாங்கத்துக்கு இந்த எதிர்ப்பு நடவடிக்கை வழங்கியுள்ளது.

6. மறுபக்கத்தில் வெளிநாட்டில் புலிகளின் ஆதரவாளர்களால் ஜனாதிபதிக்கு எதிர்ப்புக் காண்பிக்கப்பட்டது, அவமரியாதை செய்யப்பட்டது என்ற கோபத்தை ஏற்படுத்தி, மேலும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான சிங்கள மக்களின் ஆதரவுப் பலத்தை மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கும் சாத்தியங்களை உருவாக்கியுள்ளது.

7. முன்னர் தமிழர்களைச் சிங்களத் தரப்புக்கு எதிராகச் செயற்படத்தூண்டி, அதன் மூலம் உருவாகிய இடைவெளியைப் பயன்படுத்தித் தன்னுடைய நலன்களை எவ்வாறு இந்தியா பெற்றுக் கொள்ள முயன்றதோ அதைப் போன்ற ஒரு அணுகுமுறையை இப்போது பிரிட்டன் கையாள்கிறது. இதற்குத் தமிழர்கள் பலியாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே இந்த எதிர்ப்பு நடவடிக்கையானது அதனுடைய உள்ளடக்கத்தில் எதிர்த்தரப்புக்கான அனுகூலங்களை நீண்டகால அடிப்படையில் வழங்கியுள்ளது.அந்த அளவுக்கு அதுதமிழர்களுக்குப் பலவீனங்களைத் தந்துள்ளது.

இந்த எதிர்ப்பானது புலிக்கொடியுடன் நடத்தப்பட்டிருப்பதற்குப்பதிலாக கறுப்புக் கொடிகளை ஏந்தி நடத்தியிருந்தால் இதன் பெறுமதி மிக அதிகமாக இருந்திருக்கும். கறுப்புக்கொடிகளோடு, உலக மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் சொல்ல வேண்டிய சேதிகளையும் சேர்த்து அவர்கள் ஏந்தியிருந்தால் இந்த எதிர்ப்படையாளம் இன்னும் வலுப்பெற்றிருக்கும்.

இந்தச் சேதியானது -

"அன்பான சிங்கள மக்களே, சர்வதேச சமூகத்தினரே, நாங்கள் பிறந்த நாட்டிலிருந்து அதன் தலைவர் இங்கே (லண்டனுக்கு) வருகை தரும்போது அவரை மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்க வேண்டிய நாம், கறுப்புத் துணிகளுடன் அணிவகுத்திருக்க வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளோம். இது வருத்தத்திற்குரியதே. ஆனாலும் இதை எங்களால் தவிர்க்க முடியவில்லை. இந்த நிலையை உருவாக்கியது இனவாத அரசியல் நடவடிக்கைகளும் அரசாங்கத்தின் பொறுப்பற்ற நடவடிக்கைகளுமே.

இன ஒதுக்கல் நடவடிக்கைகளால் எங்களின் உறவுகளும் இனத்தவரும் கண்ணீரின் மத்தியிலும் காயங்களின் மத்தியிலும் இன்னும் இருக்கும்பொழுது, அங்கே இன நல்லிணக்கத்தையும் நிவாரணத்தையும் இன்னும் முறையாக வழங்காதபோது, பிரச்சினைகளுக்கான தீர்வைக் காணாதபோது எப்படி அவரை நாம் மனப்பூர்வமாக வரவேற்க முடியும்? அது எந்த அளவுக்கு ஏற்புடையதாகும்? அப்படி நாம் அவரை வரவேற்பதாக இருந்தால், அது எங்களின் மனச்சாட்சிக்கு நாங்கள் இழைக்கின்ற தவறாகுமல்லவா!

எனவேதான் நாங்கள் இத்தகைய எதிர்ப்புப் போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது. இதைத்தவிரவேறு மார்க்கங்கள் எங்களுக்கு இல்லை. எங்களுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதற்கும் எங்கள் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு அழுத்தம் கொடுப்பதற்கும் இதை ஒரு அடையாளமாக நாங்கள் வெளிப்படுத்துகிறோம். ஒரு அழுத்தத்தைக் கொடுப்பதற்கு இத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம். இந்தப் போராட்டத்தின் தாற்பரியத்தைச் சர்வதேச சமூகமும் சிங்கள மக்களும் புரிந்து கொள்ள வேண்டும். நீதிக்கும் நியாயத்துக்கும் பதிலாற்ற வேண்டிய கடப்பாட்டை வலியுறுத்துமாறு கேட்பதே இந்தப் போராட்டத்தின் நோக்கமாகும்" என்றவாறு கேட்டிருந்தால், அதற்கான அரசியற் பெறுமானம் மிக உச்சமாக இருந்திருக்கும்.

இத்தகைய அரசியற் கோரிக்கையையும் வெளிப்பாட்டையும் அணுகுமுறையையும் யாரும் புறந்தள்ளவும் முடியாது. இதைக் குறுகலாக்கி ஒதுக்கவும் முடியாது. இதற்குப் புலி அடையாளத்தைப் பூசியிருக்கவும் முடியாது. பதிலாக இது சிங்களச் சமூகத்தினரையும் சிந்திக்க வைத்திருக்கும். அவர்களிடம் பகைமையைத் தோற்றுவிப்பதற்குப் பதிலாக இதைக் குறித்த சிந்தனையை உருவாக்கியிருக்கும்.

(17ஆம் பக்கம் பார்க்க)

**எதிர்த்தரப்பை வசைவதிலேயே தமிழர்கள் திருப்தியடைகிறார்கள். யதார்த்தத்தில் தோல்வியின் மீதே அவர்கள் வாழ்கிறார்கள், உறங்கிக் கொண்டிருக்கின்றனர். உணர்ச்சிகரமாக அணுகப்படும் அரசியலானது அழிவிலும் பின்னடைவிலுமே போய்ச் சேர்கிறது. ஆனால், அந்த அரசியலுக்கு ஒரு கட்டம் வரையில் மக்களிடம் கிடைக்கின்ற பேராதரவு மிகப் பெரிது.**



# வடக்கு மாகாண சபைத்தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும்



## வலியுறுத்துகிறார் அமைச்சர் வாசு

(கொழும்பு)

வடமாகாணசபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும் என தேசிய மொழிகள மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சரும், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் செயலாளருமான வாசுதேவ நாணயக்கார வலியுறுததியுள்ளார்.

வடமாகாணசபைத் தேர்தலை காலம் தாழ்த்ததாது நடத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை அரசுக்கு முக்கிய பிரமுகர்கள் விவரித்துவரும் நிலையிலேயே அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேற்கண்ட கருத்தை முன்வைத்துள்ளார். வடமாகாணசபைத் தேர்தல் விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கை, மீள் குடியேற்றம் ஆகிய விடயங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில்தான் வடக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. அப்படியானால் ஏன் மாகாணசபைத் தேர்தலை நடத்தமுடியாது என்ற கேள்வி எழுகின்றது அல்லவா?

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடு. அது விரைவில் நடத்தப்பட வேண்டும் என்ற நிலையிலேயே நாம் உள்ளோம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை வடக்கில் நடத்த முடியும் என்றால் மாகாணசபைத் தேர்தலையும் நடத்தலாம். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமிருக்க முடியாது என வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

# ஆட்கடத்தலை பிடிக்கச்சென்ற இரண்டு பொலிஸார் மாயம்

(கொழும்பு)

சட்டவிரோதமாக படகில் அவுஸரேலியாவிற்கு ஆட்களைக் கடத்தும் முயற்சியொன்றை முற்றுகையிடச் சென்ற இரண்டு பொலிஸாரைக் காணவில்லை என பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன.

சிலாபம், கருக்குபனை பிரதேசத்தில் இந்த முற்றுகை மேற்கொள்ளப்பட்டது. இந்த முற்றுகையின் பின்னர் இந்த இரண்டு பொலிஸாரும் பணிக்குத் திரும்பவில்லை எனவும், சிலாபம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆட்கடத்தல்காரர்கள் இந்த இரண்டு பொலிஸாருக்கும் அனர்த்தம் எதனையும் ஏற்படுத்தியிருக்கலாம் என ஒரு தரப்பினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

எனினும், ஆட்கடத்தல்காரர்களுடன் இந்த இரண்டு பொலிஸாரும் படகில் அவுஸ்ரேலியா சென்றிருக்கலாம் என இன்னுமொரு தரப்பினரும் ஊகம் தெரிவித்துள்ளனர்.

# 15 வயது சிறுமிமீது துஷ்பிரயோகம்

## 5 இளைஞர்களுக்கு வலை வீச்சு

15 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த 5 இளைஞர்களை கைதுசெய்ய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. களுபோவில வைத்திசாலையில் தற்போது சிகிச்சை பெற்று வரும், பாதிக்கப்பட்ட சிறுமி, கொழும்பில் வைத்து பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகியுள்ளார்.

சந்தேக நபர்கள், சிறுமியை மிரட்டி அடிக்கடி பாலியல் துஷ்பிரயோகம் செய்துவந்துள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரிய்வந்துள்ளது என அதிகார சபை தெரிவித்துள்ளது. சிறுமியின் தாய் வெளிநாட்டில் தொழில்புரிந்து வருவதுடன், தந்தை வேறு திருமணம் செய்துகொண்டுள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது



டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்ற போது அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன மற்றும் குமார் வெல்கம உட்பட பலர் கலந்துகொண்டனர். இதன்போது சமயலறை உட்பட பல இடங்களை அமைச்சர்கள் சோதனையிட்டதனைக் காணலாம்.

# இலங்கையில் 1503 பேர் எயிட்ஸ் நோயாளிகள்

(கொழும்பு)



இலங்கையில் இவ் வருடம் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்குள் 1,503 பேர் எச்.ஐ.வி நோயினால் பாதிக்கப்பட்டனர் என இது தொடர்பான நோயியல் நிபுணர் டாக்டர் வீரசிங்க தெரிவித்துள்ளார். இதேவேளை, இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர் எண்ணிகை இதனை விட அதிகமானது என்ற தகவல்களும் தற்போது தெரிய வந்துள்ளன.

இலங்கையில் தவறான உடலுறவுகள், பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வரும் நிலையில் இந்த நோயின் அதிகரிப்பும் பல மடங்காக உயரும் எனவும் தகவல்கள் தெரிவிக்கினறன.

# குண்டர்களின் அனுமதியுடனேயே அரசியலில் ஈடுபடவேண்டிய நிலை

## கருஜயசூரிய எம்.பி. கவலை



(கொழும்பு)

குண்டர் குழுக்களின் அனுமதியினைப் பெற்றே அரசியல் நடவடிக்கைளில் ஈடுபட வேண்டிய பின்புலம் நாட்டில் உருவாகியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி.கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கட்டுவன பகுதியில் அண்மையில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அச்சுறுத்தல்களை விடுக்க கடந்த காலங்களில் நடவடிக்கைகளை மேற்கொண்ட சில குழுவினர், அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பையும் ஆசீர்வாதத்தையும் பெற்று செயற்படுகின்றமை மறைக்க முடியாத உண்மை.

இந்தக் குழுவினர், தமது தலைவர்களின் அரசியல் நடவடிக்கைகளுக்கு எதிராக செயற்படுகின்றவர்களை அச்சுறுத்துவதற்காக துப்பாக்கிகளை உபயோகிப்பது பிரசித்தி பெற்றுள்ளது.

கட்டுவன தாக்குதல் குறித்து போலியான கதைகளைக் கூறாமல் தாக்குதலை மேற்கொண்ட நபர்களைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு உரிய தரப்பினருக்கு அரசாங்கம் எப்போது அனுமதி வழங்கும் எனவும் கரு ஜயசூரிய கேள்வி எழுப்பியுள்ளார்.

# கல்விசார ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு உயர் கல்வி அமைச்சும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் தீர்வு வழங்காது அசமந்தப் போக்கைக் கடைபிடிப்பதால் எதிர்வரும் நாட்களில் ஆர்ப்பாட்டம், பேரணி என்பவற்றை நடத்த தீர்மானித்துள்ளதாக அனைத்து பல்கலைக்கழக ஒன்றிணைந்த தொழிற்சங்க குழுவின் ஊடக தொடர்பாளர் விஜயதிலக ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

தங்களுடைய பிரச்சினை குறித்து சம்பள சபை, திறைசேரி, உயர்கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உள்ளிட்ட பல தரப்பினருடன் கலந்துரையாடியதோடு இறுதியில் தொழில் ஆணையாளருடன் கலந்துரையாடியுள்ள போதும் பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவும், அமைச்சரும் தொழில் ஆணையாளருடன் ஒத்துழைக்காது செயற்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த 6 ஆம் திகதி முதல் கோரிக்கையை முன்வைத்து பணிறுத்தம் செய்வதாகவும் எதிர்வரும் நாட்களில் தீர்வு கிடைக்காவிட்டால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

# வெலிக்கடை சிறையிலிருந்து தப்ப முயன்ற கைதிகள் கைது

வெலிக்கடை சிறையிலிருந்து தப்பிச் செல்ல முயற்சித்த கைதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய மூன்று முக்கிய குற்றவாளிகள் இவ்வாறு தப்பிச் செல்ல முயற்சித்துள்ளனர்.

சிறைச்சாலையின் மரவேலைப் பகுதியின் சுவர் கற்களை நுட்பமாக அகற்றி, அதன் வழியாக வெளியேறி, மதில் வழியாக தப்பிச் செல்ல இவர்கள் முயற்சித்துள்ளனர். சிறைச்சாலை பாதுகாப்பு உத்தி யோகத்தர்களின் திறமை காரணமாக குறித்த கைதிகள் சுற்றி வளைக்கப்பட்டனர்

முன்னாள் உயர் நீதிமன்ற நீதவான் சரத் அம்பேபிட்டிய படுகொலை வழக்குடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான பொட்ட நவுபரை சிறைச்சாலையில் கொலை செய்ய முயற்சித்த மோல் சூட்டி என்ற பாதாள உலகக் குழு உறுப்பினர் உள்ளிட்ட மூன்று பேர் இவ்வாறு தப்பிச் செல்ல முயற்சித்துள்ளனர்.

கைதிகளை தடுப்பதற்கு சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்ததாகவும், இதன் போது இரு தரப்பினருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.சம்பவத்தில் கைதிகள் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

# இரட்டைக் குடியுரிமைக்கு புதிய சட்டங்கள் அறிமுகம்



(கொழும்பு)

இரட்டைக் குடியுரிமை தொடர்பில் புதிய சட்டங்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் காலங்களில் இரட்டைக் குடியுரிமை தொடர்பிலான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் போது புதிய நடைமுறைகள் பின்பற்றப்பட உள்ளதாக குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்தார்.

வேறு ஓர் நாட்டில் குடியுரிமை உடைய நபர் ஒருவர் இலங்கையில் இரட்டைக் குடியுரிமைக்காக விண்ணப்பம் செய்தால், முதலில் ஐந்து ஆண்டுகள் வதிவிட உரிமை வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஐந்து ஆண்டுகளின் பின்னரே குறித்த நபருக்கு இரட்டைக் குடியுரிமை அந்தஸ்து வழங்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாடுகளில் குடியுரிமை பெற்றுக் கொண்ட இலங்கையர்கள் எவ்வாறு குடியுரிமை பெற்றுக் கொண்டார்கள் என்பது பற்றிய விபரங்களை வெளியிட வேண்டும்.

என்ன காரணத்திற்காக இலங்கையில் குடியுரிமை கோரப்படுகின்றது என்பது பற்றியும் விளக்கப்பட வேண்டும்.

இரட்டைக் குடியுரிமை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிப்போர் கட்டணமாக இரண்டு தவணைக்குள் 200,000 ரூபாவினை செலுத்த வேண்டுமென குறிப்பிடப்படுகிறது.

சட்டத் திருத்தங்கள் கொணடு வரும் நோக்கில் இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடவடிககை இந்த ஆண்டு ஆரம்பம் முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொடிவாரத்தில் திரட்டப்பட்ட நிதி கல்வி வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படும்

## - யாழ்.மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் எஸ்.சிவசிறி

(வடமராட்சி)

சமுர்த்தி சமூக மட்டத்தினால் மது மற்றும் போதைப் பொருள் ஒழிப்போம் என்ற தொனியில் இடம் பெற்ற கொடி வார தினத்தில் சேகரிக்கப்பட்ட நிதி யாழ். மாவட்டத்தில் உள்ள குடும்பங்களின் அதுவும் வறுமையில் வாழும் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக பயன்படுத்தப் படவுள்ளதாக யாழ்.மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் எஸ். சிவசிறி தெரிவித்துள்ளார்.

வடமராட்சி பெலிகண்டிப் பகுதியில் கடமை புரியும் சமுர்த்தி பெண் உத்தியோகத்தர்கள் ஆயிரம் ரூபா தரும்படி வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சமுர்த்தி பயனாளிகளிடம் வற்புறுத்தி வருவதாக பயனாளிகளால் தெரிவிக்கப்பட்ட முறைபாடு தொடர்பாக எமது செய்தியாளர் அவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

கொடிவாரத்தை முன்னிட்டு சமுர்த்தி சமூக அமைப்புக்களால் மேற்கொள்ளப்படும் நிதி சேகரிப்பானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தாய் தந்தையரை இழந்து கல்வி வளர்ச்சிக்காக பிரிவு வங்கிகள் ஊடாக அந்தந்த பகுதி மாணவர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா வழங்கப்படவுள்ளது.

ஒவ்வெருவரும் வழங்கும் பணமும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கே அன்றி வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்படமாட்டாது.

புண்ணியமான செயலுக்காக உணர்ந்து ஒவ்வொருவருக்கும் வழங்கும் நிதிக்கு மாறாக வற்புறுத்தி பணம் கேட்கும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் யாராவது எமது உத்தியோகத்தர்களால் வற்புறுத்தி வாங்கப்பட்ட நிதியை பெற விரும்பினால் தம்முடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் இவ்வாறான முறைப்பாடுகள் தமக்கு கிடைக்கப்பட்டதுடன் வற்புறுத்தி வாங்கப்பட்ட பணம் மீளளிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (116)



வடமாகாண பண்பாட்டுத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலைஞர் வேல் ஆனந்தனின் தாண்டவ உதையம் கீழைத்தேய ஆடற் கலை நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்.திருமறைக்கலாமன்றத்தில் நடைபெற்ற போது வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கலைஞர் வேல் ஆனந்தனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதனைக் காணலாம். (படம் - நந்தகுமார்)

# அனுமதியின்றி மாடுகளை ஏற்றிய மூவர் கைது

தொண்டைமானாறு பகுதியில் வைத்து அனுமதிப் பத்திரம் இல்லாமல் மாடுகளை ஏற்றிவந்த மூவரை வல்வெட்டித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர். கடந்த சனிக்கிழமை இரவு 8.00 மணிக்கு அச்சுவேலி பகுதி வாசிகள் உழவு இயந்திரத்தில் எவ்வித ஆதாரம் மற்றும் அனுமதிப் பத்திரம் இல்லாமல் இரு மாடுகளை தொண்டைமானாறுக்கு கொண்டு வந்த வேளை மூவரை அப்பகுதியில் வைத்தே வல்வெட்டித்துறை பொலிஸார் கையும்மெய்யுமாக பிடித்துள்ளனர்.

இதன்போது லான்மாஸ்ரரும், இரு மாடுகளும் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்ட நபர்களை மிருகவதைச்சட்டத்தின் கீழ் இன்று புதன்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (116)

# 800 கிராம் போதைப் பொருளுடன் மன்னாரில் இருவர் கைது

(கொழும்பு)

இந்தியாவின், ராமநாதபுரம் பிரதேசத்திலிருந்து படகு மூலம் இலங்கைக்கு கடத்திவரப்பட்ட சுமார் 8 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் இந்தியர் ஒருவர் உட்பட இருவர் மன்னார் பொலிஸாரால கைது செய்யப்பட்டுள்ளனர்.

புலனாய்வுப் பிரிவினருக்கு இந்தியாவிலிருந்து கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலொன்றுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே 800 கிராம் போதைப்பொருளுடன் மேற்படி இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.


# வரணியில் குரங்குகள் அட்டகாசம்

வரணி இடைக்குறிச்சிப் பகுதியில் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஒரு தொகுதியாக வரும் குரங்கு கூட்டங்கள் பயன்தரு மரங்களை குறிப்பாக மாமரங்களின் மாங்காய்ப் பிஞ்சுகளை உண்பதுடன் வீடுகளுக்கு மேலால் செல்வதால் ஓடுகள் உடைந்து நாசமாக்கப் படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் திறந்திருக்கும் வீடுகளுக்குள்ளும் உள்நுழைந்து சமையல் பாத்திரங்களை எடுத்து அட்டகாசம் புரிவதாகவும் தெரிவிக்கும் மக்கள் அண்மையில் பாடசாலை மாணவன் குரங்குக் கடிக்கு இலக்காகி சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளதாக தெரிவிக்கின்றனர். (150)

## பரமர் சங்கமம்



'இலவசம் எண்டால் இளக்காரம தான்' தர்மாஸ் பத்திரி எண்டோடனை அந்தக் காலங்களில் நோயாளர் எட்டிப் பாக்கப் பஞ்சிப்பட்டனர்.

ஏனெண்டால் வைத்தியம் அப்படி இப்படி இருக்குமெண்டு. ஆனா இண்டைக்கு அந்தத் தர்மாஸ்பத்திரிக்குத்தான் கியாதி கூட.

இல்லாமலும் பெயரளவில் இலவசம். செயற்பாடுகளேல்லாம் பணம்தான். இந்த நிலைமை எமது நாட்டில் இலவசக் கல்விக்கும், பொருந்தும்.

இதனால் இலவச வைத்தியம் கல்வி ஆகியவற்றைப் பெற வேண்டிய அடிப்படை ஏழைகளின் வாழ்வில் இவை இரண்டும் எட்டாக்கனியாகி விட்டது.

யாழ்.போதனா வைத்திய சாலை ஐம்பதுகளில் தர்மாஸ்பத்திரியாக தோற்றம் பெற்றதாகக் கூறப்படுகின்றது. அந்தக் காலங்களில் ஆங்கில மருத்துவத்திற்கு கியாதி கிடையாது. சித்த மருத்துவத்தையே பெரும்பாலான மக்கள் நாடினர்.

இப்பொழுது யாழ்.போதனா வைத்தியசாலையில் மருத்துவம் பெற வேண்டுமாகில் வெளியாக இயங்கும் வைத்திய பரிசோதனை நிலையங்களில் பணம் செலுத்தி டாக்டரிடம் காட்டித்தான் வைத்தியம் பெற வேண்டுமென்ற நிலைமை வளர்ந்துள்ளது.

அதனை ஆக்கிக் கொண்டவர்கள் வசதி படைத்த நோயாளர்கள். ஆரம்பத்தில் 'சனல்' பண்ண 50 ரூபாவாக இருந்த கட்டணம் இன்றைக்கு அறுநூற்றி ஐம்பது ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதனால் யாருக்காக இலவச வைத்தியம் தொடங்கப் பட்டதோ அந்த ஏழைகள் பெற முடியாத நிலையே யாழ்.போதனா வைத்திய சாலையில் நிலவுகின்றது.

சமீபத்தில் தகப்பனாரைப் பறிகொடுத்த மகள் இழவு வீட்டில் ஒப்பாரியில் கூட அந்நிலையை எடுத்துக் கூறி அழுததாக சுப்பையா தோழர் தெரிவித்தார்.

"பெரிய டாக்டர் வந்து பார்ப்பார் பார்ப்பாரெண்டு ஐந்து தடவைக்கு மேல் காத்திருந்த அந்தப் பெண் என்னிடம் அறுநூற்றைம்பது இல்லாமல் போயிட்டுதே! சாகவிடாமல் தடுத்திருப்பேனே" என ஒப்பாரி வைத்துள்ளார்.

அதே வேளை இன்னொருவர் இப்படிக் கூறுகின்றார். அறுநூற்றைம்பது றூவரக் கட்டிப் போட்டு பகல் 12.00 மணி தொடக்கம் காவல் இருந்தம்.

பிற்பகல் 3 மணிக்கு வருகை தந்த டாக்டர்; நோயைச் சொல்லி முடிக்கும் முன்பாகவே துண்டெழுதித் தந்திட்டு மற்றவரைக் கூப்பிட்டிட்டார்.கட்டின காசுக்காவது ஒரு பத்து நிமிடம் பாக்கக் கூடாதா? இவ்விதம் அங்கலாய்க்கிறார் அவர்

"பனையால் விழுந்தவனை மாடேறி மிதிச்ச மாதிரி" வசதி படைத்தவர்கள் இலவச வைத்தியர்கள் நுழைந்து பாடாய் படுக்கையில் அடிப்படை ஏழைகளின் நிலை எப்படி இருக்குது சொல்லுங்க பாப்பம்...

# மகா கும்பாபிஷேகம்

(வடமராட்சி)

வல்வை நகர் ஸ்ரீ சுந்தரா மனோன்மணி (சுந்தரேஸ்வரி) அம்பாள் சமேத ஸ்ரீ சுந்தரப் பெருமான் ஆலய புனராவர்த்தன நவகுண்டபஷ மகா கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் இன்று புதன்கிழமை காலை 10.00 மணி முதல் 5.00 மணிவரையும் எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவம் இடம்பெறவுள்ளதுடன் நாளை காலை .30 மணிக்கு மகா கும்பாபிஷேக பூசை இடம்பெற்று மாலை 6.00 மணிக்கு திருக் கல்யாண உற்சவமும் இடம் பெறவுள்ளது.

ஆகம சிற்ப சாஸ்திர விதிகளுக்கமைவாகப் புதுப்பொலிவுடன் வர்ணம் தீட்டி அமைக்கப்பட்ட இவ்ஆலயத்தின் பரிவார மூர்த்திகளின் தூபி அபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளதாக ஆலய ஆதின கர்த்தா அறிவித்துள்ளார். (116)

# சிகரெட், பீடி வகை விற்பனை நிறுத்தம்

(வரணி)

வரணி வர்த்தக நிலையங்கள் பலவற்றில் வர்த்தக உரிமையாளர்கள் புகைத்தல் சிகரெட், பீடி போன்றவற்றை விற்பனை செய்வதை முற்றாக நிறுத்தியுள்ளனர்.

தற்போது 21 வயதிற்குட்பட்டவர்களுக்கு சிகரெட் மற்றும் போதைப் பொருள் விற்பது முற்றாக தடை செய்யப்பட்டு இருப்பதனாலேயே தாமும் இதனை நிறுத்தியுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக சட்ட விரோத மான முறையில் சிறுவர்களுக்கு சிகரெட் போதைப் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (150)

# முரசின் இன்றைய பலன்

(20.06.2012 -புதன்கிழமை)

நந்தன வருஷம் ஆனி மாதம் 06 ஆம் திகதி. பிரதமை முன்னிரவு 10.04 வரை. நட்சத்திரம் திருவாதிரை. பின்னிரவு 2.45 வரை. சித்தயோகம், கரிநாள் இராகுகாலம் 11.54 - 1.24 வரை. சுபநேரம் 4.24 - 5.54 வரை. எமகண்டம் 7.24 - 8.54 வரை. குளிகைகாலம் 10.24 - 11.54 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | முயற்சியில் வெற்றி, போட்டி பொறாமை நீங்கும், எதிர்ப்பு தானாக மறையும், அரச நன்மைகள். |
| ரிஷபம் | எதிர்பாராத செலவுகள், வியாபாரத்தில் போட்டி, வழக்குகளில் வெற்றி, உடல் ஆரோக்கியம். |
| மிதுனம் | காரியானுகூலம், தேவைக்கேற்ப பணவரவு, எதிர்பாராத வீண் விரயம், வெளியூர் தொடர்பு. |
| கடகம் | மனச்சோர்வு, உறவினர்களை அனுசரிக்கவும், அலைச்சல், வாக்கு வாதங்களைத்தவிர். |
| சிம்மம் | கௌரவம், புதிய முயற்சிகளில் வெற்றி, சிறப்பான குடும்ப வாழ்க்கை, அற்புதமான ஆரோக்கியம். |
| கன்னி | கடவுள் பக்தி, குடும்பத்தில் கருத்து வேறுபாடு, புத்திரர் வழியில் மகிழ்ச்சி, உறவினர் ஆதரவு. |
| துலாம் | சேமிப்பு உயரும், சொத்துக்களால் இலாபம் பண விஷயத்தில் அவதானம், தெய்வ வழிபாடு. |
| விருச்சிகம் | சந்திராட்டமம் பயணம் தவிர்க்கவும், பண வரவில் நெருக்கடி, மறைமுக எதிர்ப்பு. |
| தனுசு | ஞாபக மறதி, திருமணம் கூடிவரும், தேக ஆரோக்கியம் நன்று, குடும்ப ஒற்றுமை இறுக்கம். |
| மகரம் | உறவினர் சகாயம், வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு, புத்திர வழியில் சுப காரியம், |
| கும்பம் | பொருள் விருத்தி, வழக்குகளில் வெற்றி, பொன்பொருள் சேரும், பணவரவுகள். |
| மீனம் | நற்கீர்த்தி, உறவினரால் கலகம், வரவுக்கு மீறிய செலவுகள், தொழிலில் போட்டி. |





# ஒலிம்பிக்கில் தங்கம் சாய்னா நம்பிக்கை

(புதுடில்லி)

எதிர்வரும் லண்டன் ஒலிம்பிக் போட்டியில் என்னால் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை அதிகரித்துள்ளது என இந்தியாவின் பட்மின்ரன் வீராங்கனை சாய்னா தெரிவித்தார்.

கடந்த மூன்று தொடர்களில் அடுத்தடுத்து சம்பியன் பட்டம் வென்றமை மகிழ்ச்சி அளிக்கின்றது. இது போன்ற வெற்றிகள் பாராட்டுக்களைத் தரும் அதேவேளை, தோல்விகளைச் சந்திக்கும் இடத்தில் விமர்சனங்களை அதிகளவில் எதிர் நோக்கவேண்டியிருக்கும் என்பதையும் நாம் மறந்து விடவில்லை.

இந்தோனேசியன் ஓப்பன் பட்டம் வென்றமையை மிகவும் பெருமையாகக் கருதுகிறேன். இந்த வெற்றி மூலம், லண்டன் ஒலிம்பிக் போட்டியிலும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை வலுவடைந்துள்ளது. என்றார்.

இதேவேளை, சாய்னாவின் பயிற்சியாளர் கோபி சந்த் கூறுகையில், சாய்னாவின் ஆட்டம் மிக பிரமாதமாக இருந்தது. அவரை வீழ்த்துவது என்பது சுலபமல்ல. இதனால், லண்டன் ஒலிம்பிக்கிலும் சாய்னா பதக்கம் வெல்வார் என நிச்சயம் எதிர்பார்க்கலாம். அவரின் ஆட்ட முறையிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது. கடந்த சில தோல்விகளால் அவர் மனம் தளராவில்லை என்றார்.

# சாதனை வீரர்களுக்கு கௌரவம்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் அகில இலங்கை மாகாணங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் தேசிய மட்டத்தில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியையும் இரண்டாம் இடத்தைப் பெற்ற பெண்கள் கூடைப்பந்தாட்ட அணியையும் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலர் வி.வினோதினி தலைமையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட வீர வீராங்கனைகள் யாழ்ப்பாணம் கண்டி வீதியில் அமைந்துள்ள வை.எம்.சி.எ.கட்டிடச் சந்தியில் இருந்து மேளவாத்தியம் சகிதம் கண்டி வீதி வழியாக ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். தொடர்ந்து இடம் பெற்ற பாராட்டு நிகழ்வில் உதவிப்பணிப்பாளர் எஸ்.ஈஸ்வரராஜா மற்றும் வீடமைப்புத்திணைக்கள யாழ். மாவட்ட அலுவலக முகாமையாளர் ஜெயரெட்னம் நெபெல் ஜெயச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு பாராட்டினார்கள்.

# பயஸுடன் இணைவதற்கு போபண்ணாவும் மறுப்பு

(புதுடில்லி)

லண்டன் ஒலிம்பிக் போட்டியின் ஆண்கள் இரட்டையர் பிரிவு ரென்னிசில் லியாண்டர் பயசுடன் இணைந்து விளையாட முடியாது என்று மகேஷ் பூபதியைத் தொடர்ந்து ரோகன் போபண்ணாவும் பகிரங்கமாக அறிவித்திருப்பதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இது குறித்து அகில இந்திய ரென்னிஸ் சங்கத்துக்கு போபண்ணா எழுதியுள்ள கடிதத்தில், "ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவுக்காக களமிறங்குவது எனது நீண்ட நாள் கனவு. ஆனால், பயசுடன் இணைந்து விளையாட வேண்டும் என வற்புறுத்துவதை ஏற்க முடியாது. லண்டன் ஒலிம்பிக் போட்டிக்காக பூபதியுடன் இணைந்து நீண்ட நாட்களாகப் பயிற்சி செய்து வரும் நிலையில், திடீரென வேறு ஒரு வீரருடன் ஜோடி சேர்ந்து விளையாடினால் வெற்றி வாய்ப்பு பாதிக்கப்படும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தில் மத்திய விளையாட்டுத் துறை அமைச்சகம் தலையிட வேண்டும் என்று கோரி பூபதி, போபண்ணா இருவரும் கூட்டாக கடிதம் அனுப்பியுள்ளதால் பிரச்சினை மேலும் தீவிரமாகி உள்ளது. ஒலிம்பிக் போட்டியில் பயசுடன் இணைந்து விளையாட முடியாது என்று பூபதி, போபண்ணா மறுத்துவிட்ட நிலையில், இந்த சர்ச்சை குறித்து அகில இந்திய ரென்னிஸ் சங்கம் விளக்கம் அளிக்க வேண்டும் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் அஜய் மாக்கன் உத்தரவிட்டுள்ளார். அளிக்க வேண்டும். லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு 2 அணிகளை அனுப்ப முயற்சி மேற்கொள்ள வேண்டும். பயசுடன் இணைந்து விளையாட இளம் வீரர் ஒருவரை தேர்வு செய்யுங்கள். இவ்வாறு அமைச்சர் மாக்கன் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# எஸ்.எல்.பி.எல். போட்டிகளுக்கான அணிகளின் விலைகள் அறிவிப்பு

(கொழும்பு)

மிகவிரைவில் இடம்பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ள எஸ்.எல்.பி.எல். போட்டிகளுக்கான அணிகளை விற்பனை செய்யத் தீர்மானித்துள்ள இலங்கைக் கிரிக்கெட் சபை, அணிகளுக்கான விலைகளையும் அறிவித்துள்ளது. இதன்படி அணியொன்றை வாங்குவதற்கான அடிப்படை விலையாக 3 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. 7அணிகளையும் இலங்கைக் கிரிக்கெட் சபை 7 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கவுள்ளதாகவும், அதனை அடிப்படையாக வைத்து எஸ்.எல்.பி.எல்.இன் திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ள தாகவும் இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இதற்கான ஏலங்கள் வரவேற்கப்படுவதாகவும் இலங்கைக் கிரிக்கெட்சபை அறிவித்துள்ளது. ஏலத்தொகையினை அறிவிப்பதற்கான இறுதித்தினமாக ஜூன் 25ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளதுடன், ஏலத்தில் வெற்றிபெற்றவர்களது விபரங்கள் அந்தன்றே அறிவிக்கப்படும் எனவும் இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. விருப்பமுள்ளவர்கள் 3 அணிகளுக்கு அதிகபட்சமாக ஏலத்தொகையை அறிவிக்கலாம் எனவும் இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. முதலாவது எஸ்.எல்.பி.எல். போட்டிகள் எதிர்வரும் ஓகஸ்ட் 10ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை கொழும்பிலும், பல்லேகலவிலும் இடம்பெறத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் மாகாணங்களை அடிப்படையாகக் கொண்ட 7 அணிகள் பங்குபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

SLPL

# ஒலிம்பிக் ஆரம்ப விழாவில் இளையராஜாவின் பாடல்?



லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஆரம்ப விழாவில் தென்னிந்தியாவின் பிரபல இசையமைப்பாளர் இசைஞானி இளையராஜா இசையமைத்த பாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிகழ்வில் நடைபெறவுள்ள பல்வேறு கலாசாரங்களை பிரதிபலிக்கும் நிகழ்வுகளில் ஒன்றான உலக பாடல்கள் பகுதியில் இளையராஜாவின் பாடல் இடம்பெறணும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் இடம்பெறவுள்ள 86 பாடல்களுள் தமிழ்த் திரைப்படப் பாடலும் ஒன்று என பிபிசி செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது.

பிரித்தானிய இசைக் கலைஞர்களின் பாடல்களே பெருமளவில் இடம்பெறும். இந்த நிகழ்வில் ஒரு சில வேற்றுமொழிப் பாடல்கள் இடம் பிடித்துள்ளன.

எனினும் இது தொடர்பான உத்தியோகபூர்வ கருத்துக்கள் எதனையும் ஒலிம்பிக் ஏற்பாட்டுக் குழு வெளியிடவில்லை.

ஒஸ்கார் விருது வென்ற ஸ்லம் டக் மிலியனெயார் திரைப்படத்தை இயக்கிய டொனி போய்ல் ஒலிம்பிக் தொடக்க விழாவை நெறிப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. இது சிறப்பு வாய்ந்த நாள் என இளையராஜா தெரிவித்தார்.



## குயின்ஸ் கிளப் ரென்னிஸ் நல்பாண்டியன் தகுதி இழப்பு

குயின்ஸ் கிளப் ரென்னிஸ் போட்டி இறுதி ஆட்டத்தில் குரேஷிய மாரிக் கிலிக் - ஆர்ஜன்ரீனா வீரர் டேவிட் நல்பாண்டியன் ஆகியோர் மோதினர். முதல் செட்டை நல்பாண்டியன் 7-6(7-3) என்ற கணக்கில் வென்றார். 2ஆவது செட்டில் 4-3 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்த போது ஒரு புள்ளியை இழந்ததால் எல்லைக் கோட்டில் இருந்த விளம்பரப் பலகையை எட்டி மிதித்தார். இதில் லைன் நடுவர் அன்ட்ரூ மெக்டெக்கால் சரிந்து விழுந்தார். அவரது காலில் காயம் ஏற்பட்டு இரத்தம் வழிந்தது. இதையடுத்து நல்பாண்டியன் தகுதி இழப்பு செய்யப்பட்டார். கிலிக் பட்டம் வென்றதாக அறிவிக்கப்பட்டது.

# யூரோ கிண்ண கால்பந்தாட்டம் காலிறுதியில் ஸ்பெயின், இத்தாலி





யூரோ கிண்ண கால்பந்துத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு நடப்புச் சம்பியன் ஸ்பெயின் மற்றும் இத்தாலி அணிகள் தகுதி பெற்றுள்ளன. அத்துடன் குரோகூஷிய அணி தொடரிலிருந்து வெளியேறியுள்ளது. 14ஆவது யூரோ கோப்பை கால்பந்து போட்டிகளை போலந்தும், உக்ரைனும் இணைந்து நடத்துகின்றன. இத்தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற சி பிரிவு லீக் ஆட்டத்தில் நடப்பு உலக சம்பியனும், நடப்பு யூரோ சம்பியனுமான ஸ்பெயின் அணி குரோஷிய அணியை சந்தித்தது. ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணியினரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இரு அணியினரும் ஒருவருக்கொருவர் சளைக்காமல் ஆடியதுடன், கோல் அடிக்கும் முயற்சியிலும் மும்முரமாக ஈடுபட்டனர். எனினும் முதல் பாதியின் முடிவில் இரு அணி வீரர்களாலும் கோல் அடிக்க முடியவில்லை. விறுவிறுப்பான இரண்டாவது பாதி ஆட்டத்தில் 1-0 என்ற கோல் கணக்கில் குரோஷியாவை வீழ்த்தி ஸ்பெயின் அணி வெற்றிபெற்றதுடன், காலிறுதியிலும் நுழைந்தது. ஸ்பெயின் அணி தான் ஆடிய 3 ஆட்டங்களில் 2 வெற்றி, ஒரு சமனிலையுடன் 7 புள்ளிகளைப் பெற்று சி பிரிவில் முதலிடம் பெற்றுள்ளது. அதேசமயம் மறறொரு போட்டியில் வென்று காலிறுதிக்கு தகுதிபெறும் முனைப்புடன் களமிறங்கிய குரோஷிய அணி ஒரு வெற்றி, ஒரு சமனிலை, ஒரு தோல்வி என மொத்தம் 4 புள்ளிகளுடன் அப்பிரிவில் 3ஆம் இடத்துக்கு தள்ளப்பட்டதுடன், தொடரிலிருந்தும் வெளியேற்றப்பட்டுள்ளது. இதேவேளை, சி பிரிவில் நடைபெற்ற லீக் ஆட்டம் ஒன்றில் இத்தாலி அணியும், அயர்லாந்து அணியும் மோதின. இப் போட்டியில் வென்றால் மட்டுமே காலிறுதி வாய்ப்பைப் பெற முடியும் என்ற கட்டாயத்துடன் இத்தாலி அணி களமிறங்கியது. மறுபுறம் அயர்லாந்து அணி ஏற்கனவே தொடரிலிருந்து வெளியேறிவிட்டதால் ஆறுதல் வெற்றிபெறும் முனைப்பில் களமிறங்கியது. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய இத்தாலி அணி 2-0 என்ற கோல் கணக்கில் அயர்லாந்தை தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளது. 3 அயர்லாந்து அணி தான் ஆடிய 3 போட்டிகளிலும் தோற்று புள்ளிகள் எதுவும் பெறாமல் சி பிரிவில் கடைசி இடம் வகிப்பதுடன், தொடரிலிருந்தும் வெளியேற்றப்பட்டுள்ளது.



புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி



தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டித் தொடரின் ஆண்கள் பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி அணியையும், பெண்கள் பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியையும் காணலாம். (படம் : கனக்ஸ்)

விளையாட்டு செய்திகள்

## இன்று மாகாண மட்ட எல்லே

(மன்னார்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டிகள் இன்றும் நாளையும் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில், மன்னார் சென். சேவயர் மகளிர் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, முல்லைத்தீவு றெட்பானா மகா வித்தியாலம், கல்மடு மகா வித்தியாலயம், கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, வவுனியா பரக்கும்பா மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம், முல்லைத்தீவு மகா வித்தியாலயம், முல்லைத்திவு பாலிநகர் மகா வித்தியாலயம், கிளிநொச்சி பூநகரி மகா வித்தியாலயம், மன்னார் பெரியமடு மகா வித்தியாலயம், வவுனியா கணேஸ்வரா மகா வித்தியாலயம், மன்னார் அடம்பன் மகா வித்தியாலயம், கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகள் போட்டியிட உள்ளன.

இரண்டாம் சுற்றில் இருந்து இளவாலை மெய்கண்டாண் மகாவித்தியாலயம் போட்டியிட உள்ளது.

இதேவேளை, இப்போட்டிகளில் முதலிடம் பிடிக்கும் அணிகள் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றும் தகுதியைப்பெற்றுக்கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது. (12)

## பிறிமியர் லீக் காலபந்து

(பருத்தித்துறை)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படவுள்ள பிறிமியர் லீக் பிரிவு 3இற்கான காலபந்தாட்டப் போட்டிகள் அடுத்த மாதம் நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டித் தொடரில் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் பொம்மேர்ஸ், மணற்காடு சென். அன்ரனீஸ் அணிகள் பங்குகொள்ளும் என பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டித் தொடரில் ஒவ்வொரு லீக்கிலும் அங்கம் வகிக்கும் அணிகளிலிருந்து முதல் நிலை அணிகளே பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பீமா, அரவிந்தன் சிறப்பாட்டம் கிண்ணம் வென்றது டயமன்ஸ்

(நெல்லியடி)

பீமா, அரவிந்தன் ஆகியோரின் ஆக்ரோஷமான ஆட்டத்தின் மூலம் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டகால்பந்தாட்டத்தொடரின் வெற்றிக் கிண்ணத்தை வதிரி டயமன்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினால் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 17ஆம் திகதி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து வதிரி பொம்மேர்ஸ் அணி மோதியது.



ஆட்டம் தொடங்கிய போதே பந்தை தன்வசப்படுத்திய டயமன்ஸ் அணி வீரர்கள் முற்பாதியாட்டத்தில் மிக வேகமாக தமது விளையர்ட்டை வெளிப்படுத்தினர். இதனால், ஆட்டம் தொடங்கி 8ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணி வீரர் பீமா முதல் கோலைப் போட்டார். அதன் பின்னர் டயமன்ஸ் அணி மேலும் ஆட்டத்தை வேகப்படுத்த அவ்வணி வீரர் அரவிந்தனால் 13ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோல்போடப்பட்டது.அதன் பின்னர் பொமேர்ஸ் அணியினர் எதிரணியின் கோல்களைக்கட்டுப்படுத்தமுனைந்த போதும் டயமன்ஸ் அணி வீரர்களான பீமா, அரவிந்தன் ஆகியோர் 21 ஆவ்து, 28ஆவ்து நிமிடங்களில் மேலும் ஒவ்வொரு கோல்களைப் போட்டு அசத்தினர். இத்னால் இடைவேளைக்கு முன்னார் 4 - 0 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் அணி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கியபோது பீமா, அரவிந்தனின் ஆட்டங்களை மிகச் சிறப்பாக பொம்மேர்ஸ் அணியினர் தடுத்தனர். பொம்மேர்ஸ் அணி வீரர் சாதங்கன் 16ஆவது நிமிடத்தில் தமது அணிக்காக ஒரு கோலைப் போட பொம்மேர்ஸ் உற்சாகமடைந்தது. இருந்தபோதிலும் 20ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணி வீரர் பீமா மேலும் ஒரு கோலைப் போட்டு தமது அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார். இதனால் இறுதியில் டயமன்ஸ் அணி 5:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டத்து.

இப்போட்டியிலும், சுற்றுப் போட்டியிலும் சிறப்பான முறையில் விளையாடி 11 கோல்களைப்போட்ட டயமன்ஸ் அணி வீரர் பீமா ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதினைப் பெற்றுக் கொண்டார்.

டயமன்ஸ் அணி வீரர்களின் ஒருங்கிணைந்த ஆட்டம் கால்பந்து இரசிகர்களிடையே நல்ல பாராட்டைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (12)

## இறுதிப் போட்டியில் ஞானமுருகன்

(உரும்பிராய்)

ஈ.கே. குமரையா ஞாபகார்ந்த கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு மயிலங்காடு ஞானமுருகன் அணி தகுதி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் ஈ.கே. குமரையா ஞாபகார்த்த கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் கட்ந்த 17ஆம் திகதி உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியும், யாழ். பல்கலைக்கழக அணியும் மோதின. இரு அணிகளும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் ஆட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தினர். முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் போட்டு சமநிலையில் இருந்தனர்.

இந்நிலையில் பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளுமே தமது வியூகங்களை மாற்றி அமைத்து வேகமான ஆட்டமுறையில் ஈடுபட்டனர். இரு அணிகளின் பிற்கள வீரர்களின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் கோல் எல்லையை இரு அணிகளாலும் நெருங்க முடியவில்லை. இறுதியில் 1-1 என்ற கோல் கணக்கில் இரு அணிகளும் இருந்த நிலையில் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இந்நிலையில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இப்போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஊரெழு றோயல் அணி ஆனைக்கோட்டை யூனியன் அணியை 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# தனித்து நிற்க பலமில்லாததால் உடைப்பை நினைக்க முடியாது!

- கே.சஞ்சயன் கட்டுரையிலிருந்து.

தமிழரசுக் கட்சியை, இரா.சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா போன்றோர் முன்னிலைப்படுத்தி வருவதாக சிலர் அடிக்கடி குற்றம் சுமத்துவதும் பின்னர் அடங்கிப் போவதும் வழக்கமானது தான்.

தமிழரசுக் கட்சியின் மாநாடு முடிந்ததும் அதுபற்றி தனது அதிருப்தியை சுரேஷ். பிரேமச்சந்திரன் வெளிப்படுத்தினார். ஆனால், இரா.சம்பந்தன் அதை "சீரியசாகவே" எடுத்துக் கொள்ளவில்லை.

தமது கட்சி ஜனநாயகக் கட்சி என்பதால் யாரும் தமது கருத்தை சொல்லும் உரிமை உள்ளதாக அவர் ஒரு போடு போட, அந்த விவகாரம் அத்தோடு அடங்கிப் போனது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமது கட்சிகளுக்கு முக்கியத்துவம் தரப்படுவதில்லை என்று ஈ.பி.ஆர்.எல்.எவ்., டெலோ போன்ற கட்சிகளைச் சேர்ந்தோர் கவலைப்படுவது உண்மையே.

இப்படியே, போனால் தமது கட்சியும் அதன் அடையாளங்களும் இல்லாமல் போய் விடும் என்ற பயம் அவர்களுக்கு உள்ளது.

ஆனந்தசங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணியும் சித்தார்த்தனின் புளொட்டும்கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் குடிபுகுந்து விட்டன. இவர்களுக்கும் இதே வருத்தம் இருக்கவே செய்கிறது.

ஆனால், இவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் வந்ததும் கூட, வேறு வழியின்றித் தான் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் முணுமுணுத்துக் கொண்டிருந்தாலும், தமிழரசுக் கட்சி மட்டும் எதைப் பற்றியும் கண்டு கொள்ளாமல் தன்னைப் பலப்படுத்திக் கொள்வதிலேயே உன்னிப்பாக இருக்கிறது.

இது ஏனைய கட்சிகள் மத்தியில் புகைச்சலை ஏற்படுத்தியுள்ளது. இதை வைத்துக் கொண்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடையப் போகிறது என்று சில சிங்கள, ஆங்கில ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒழுங்காகச் செயற்படாது போனால், மாற்றுத் தலைமையை மக்கள் தெரிவு செய்ய நேரிடும் என்று ஒருதரப்பு தமிழ் ஊடகங்களும் எச்சரிக்கின்றன.

'ஆனால் என்ன நடந்தாலும் அதைப் பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கவனத்தில் கொள்வதாக இல்லை. அதற்குக் காரணம் இத்தகைய உடைப்பு முயற்சிகள் பெரிதாக வெற்றிபெறாது என்ற அசட்டு நம்பிக்கை தான்.

இன்றைய நிலையில்,



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள எந்தவொரு கட்சியாலும், தனித்து நின்று தேர்தல்களில் போட்டியிடவோ வெற்றி பெறவோ முடியாது.

வடக்கில், மாற்றுத் தலைமைக்கான போட்டியில் உள்ள ஈபிடிபியுடன் வலுவாக மோத வேண்டுமானால் - அரசாங்கச் செல்வாக்குடன் உள்ள அதனை எதிர்கொண்டு வெற்றி பெற வேண்டுமானால் இந்தக் கூட்டமைப்பு அவசியம்.

இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள அனைவருக்கும் தெரிந்த உண்மை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கு யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் உள்ள சிறியளவிலான ஆதரவு, நாடாளுமன்ற ஆசனங்களை தனித்துக் கைப்பற்றும் அளவுக்கு இருக்குமா என்பது சந்தேகம் தான்.

ரெலோவுக்கு வவுனியா, மன்னார் தவிர வேறு இடங்களில் அதிக செல்வாக்கு கிடையாது.

யாழ்ப்பாணத்தில் இருந்த சொற்ப செல்வாக்கும் கூட சிவாஜிலிங்கத்தின் செயற்பாடுகளால் பறிபோய் விட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வாக்கு வங்கியெல்லாம், ஆனந்தசங்கரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து எப்போது தனித்துப் போட்டியிட்டாரோ அத்தோடு உடைந்து போய்விட்டது.

புளொட் முன்னர் வவுனியா, மன்னாரில் பலமாக இருந்தாலும் இப்போது அங்கெல்லாம் அதன் செல்வாக்கு உடைந்து விட்டது.

தமிழரசுக் கட்சி யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலையில் பலமாக இருந்தாலும் வன்னி தேர்தல் மாவட்டத்தில் அது பலவீனமாகவே உள்ளது.

ஆக மொத்தத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் எதனாலும் தனித்து நின்று அரசியல் நடத்த முடியாது. அப்படி நடத்த முனைவது, தமக்குத் தாமே தலையில் மண் அள்ளிப் போடுவதற்குச் சமமானது.

2010 நாடாளுமன்றத் தேர்தலின் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் விலக்கிக் கொண்டது.


முன்னர் யாழ்ப்பாணத்தில் தனித்துப் போட்டியிட்டு ஆசனத்தை வென்ற இந்தக் கட்சியால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மோதி ஒரு ஆசனத்தைக் கூட வெல்ல முடியவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றான அணியை உருவாக்கப் போவதாகக் கூறி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார், கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் போன்றோர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை உருவாக்கிய போதும், எந்த மாற்றத்தையும் அவர்களால் செய்ய முடியவில்ல

குறுகிய காலத்தில் மாற்றுத் தலைமையை உருவாக்கும் முயற்சிகளோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்து சிதறி விடும் என்ற எதிர்பார்ப்பு நிறைவேறவோ இப்போதைக்கு வாய்ப்பில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகிச் செல்வதால் எந்தக் கட்சியாலும் அரசியல் ஆதாயங்களைப் பெற முடியாது. அந்தத் துணிச்சலில்தான், தமிழரசுக் கட்சி தனித்துவமாக நடைபோடப் பார்க்கிறது.

# காதை முறுக்கி தலையில் குட்டு!



காது குத்தல் விழா என்ற வைபவம் தமிழன் மட்டுமே ஒரு தெய்வ வழிபாடாகக் கொண்டாடும் வைபவம்.

தனக்குக் குழந்தை பிறந்தவுடன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்து தன் குழந்தையின் முகமண்டலத்தைப் பார்க்கிறான் மூக்கை பார்க்கிறான் அழகான வாயைப் பார்க்கிறான்.

அதே சமயம், குழந்தையின் காதைப் பார்க்கிறான் அதன் வடிவத்தைப் பார்க்கிறான். தனக்கு இந்த குழந்தைப் பாக்கியத்தை அளித்த இறைவனின் ஓங்கார வடிவமாக காது அமைந்திருப்பதை எண்ணி மகிழ்கிறான்.

ஓங்கார வடிவமாக அமைந்துள்ள ஆண்டவனுக்கு நன்றி செலுத்த எண்ணி, தன் குழந்தைக்கு முதன், முதலாக கொண்டாடும் வைபவத்தை, காது குத்து கல்யாணமாக நடத்தி, ஓங்கார வடிவத்திற்கு நிரந்தர காணிக்கையாக, தங்கத்தாலான ஒரு ஆபரணத்தை காதில் அணிவித்து, அதையே ஒரு விழாவாக நடத்துகிறான்.

இந்துக்களின் நம்பிக்கையில் கடவுள் நாத வடிவமமானது. அந்த நாதத்தை அறிவது காது தான். காதின் வழியாகத் தான் ஆதிகாலத்தில் மனிதன் ஞானம் பெற்றான். அதை உணர்ந்து காதணி வைபவத்தை இறைவனுக்குச் செய்யும் தொண்டாக எண்ணினான் தமிழன்.

விநாயகரை வணங்கும் போது, "துங்கக் கரிமுகத்துத் தூமணியே, நீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா!" என்று வணங்குகிறான். பிள்ளையாரை ஞானக் கடவுளாகத் தமிழன் உணர்ந்து, தான் வணங்கும் போது, இரு காதுகளையும் இழுத்து வணங்கி, தலையில் குட்டிக் கொள்கிறான், ஏன்?

காதின் வழியாகச் செல்லும் சிறு நரம்புகள் இயங்கித் தான், தலையில் இருக்கும் மூளைக்கு ஞானம் செல்கிறது என்னும் உடற்கூறு சாத்திரத்தை அவன் உணர்ந்திருந்திருக்க வேண்டும். பழங்காலத்தில் ஆசிரியரிடம் படிக்க, குழந்தையை சேர்க்கும் தாய், "ஐயா, நல்லா காதை திருகி, தலையில் குட்டி சொல்லிக் குடுங்க..." என்பாள். ஏன் காதை திருகச் சொல்ல வேண்டும்? தலையில் குட்டச் சொல்ல வேண்டும்?

காதிற்கு சுறுசுறுப்பு ஏற்படுத்தி, தூங்கும் மூளையை எழுப்பி விடத்தான் காதை முறுக்கி, தலையில் குட்டச் சொல்கின்றனர். மூக்கைத் திருகவோ, கையை முறுக்கவோ சொல்வதில்லை!

- காதணி விழாவொன்றில் முத்துராமலிங்க தேவர் பேசியது.

## ஓலைச் சுவடிகளின் பாடவரிசை

- அரிச்சுவடி
- எண்சுவடி
- குழிப்பெருக்கல்
- வருஷப்பிறப்பு
- மூதுரை
- கதிர்காமாலை
- செல்விமாலை
- ராஜகோபாலமாலை
- கருவையந்தாதி
- நிகண்டு




தமிழகத்தில் பொங்கல் பண்டிகையின்போது நடத்தப்படும் ஜல்லிக்கட்டு போட்டிகளைப் போல், ஏமன் நாட்டில், "கமெல் ஜம்பிங்" என்ற போட்டி நடத்தப்படுகிறது. பண்டிகை காலங்கள், திருமணங்கள் போன்ற நாட்களில், இந்த ஒட்டகம் தாண்டும் போட்டி நடக்கிறது. முதலில் ஒரு ஒட்டகத்தை தாண்ட வேண்டும். அதற்கு அடுத்ததாக, இரண்டு ஒட்டகங்கள், அதன்பிறகு மூன்று ஒட்டகங்கள் என, ஒவ்வொரு முறையும், ஒட்டகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். அதிகமான ஒட்டகங்களை யார் தாண்டுகின்றனரோ, அவர்கள் போட்டியில் வெற்றி பெற்றவர்களாக அறிவிக்கப்பட்டு, பரிசு வழங்கப்படும். ஏமன் நாட்டில் வசிக்கும் "ஜரானிக்" என்ற பழங்குடியினத்தை சேர்ந்தவர்கள் தான், இந்தப் போட்டிகளை நடத்துகின்றனர். பல நூறு ஆண்டுகளாக நடத்தப்படும் இந்தப் போட்டிகளுக்கு, சமீப காலமாக விலங்குகள் நல ஆர்வலர்களின் நெருக்கடி காரணமாக, தடை விதிக்கப்படுவதாக கவலைப்படுகின்றனர், இந்த பழங்குடியின மக்கள்.




# அடுத்த பிறவி தமிழனாக!

திருக்குறளை ஆங்கிலமொழி பெயர்ப்பு செய்தவர் இந்திய சுதந்திர போராட்ட வீரரும் தமிழ் சிறுகதை முன்னோடியுமான வ.வே.சு. அய்யர். திருக்குறளை ஆங்கிலத்தில் ஆர்வமாகப் படித்த காந்தியடிகள், "திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பே அருமையாக உள்ளதே! திருக்குறளை அதன் மூலமொழியாகிய தமிழிலேயே படித்திட அடுத்த பிறவியிலாவது தமிழனாகப் பிறக்க விரும்புகிறேன்" என்றாராம்.



# அடைகாக்கும் ஆண்!



நெருப்புக் கோழிக்கு அடுத்த பெரிய பறவை ஈமு •கோழி தான். இது பறக்க முடியாத பறவை. அவுஸ்திரேலியாவில் அதிகம் காணப்படும். (இப்போது நம் நாட்டிலும் வளர்க்கப்படுகிறது) பொதுவாக பறவைகளில் ஆண் பெரியதாகவும், பெண் கொஞ்சம் சிறியதாகவும் இருக்கும். ஆனால், ஈமு இனத்தில் ஆண் சிறியதாகவும், பெண் அதைவிடப் பெரியதாகவும் இருக்கும். ஈமு குடும்பத்தில் முட்டையை அடைகாக்கும் வேலையை பெண் பறவை செய்வதில்லை. அதை ஆண் பறவை தான் செய்யும்.

- "பறவைகள் பலவிதம்" நூலிலிருந்து...

# யார் இந்த சில்க்?



சில்க் ஸ்மிதா - இந்த சினிமா உலகிற்குள் நுழைந்தது ஒரு மேக்-அப் உதவியாளராக என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கும். அன்று அவர் எவ்வளவு சம்பளம் வாங்கினார் என்பது தெரியவில்லை.

ஆனால் "வண்டிசக்கரத்தில்" அறிமுகமாகி தென்னிந்திய உலகை அவர் ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த நேரத்தில் அவருடைய ஒரு நாள் படப்பிடிப்பு சம்பளம் என்ன தெரியுமா??? அப்போதே - ஐம்பதாயிரம் ரூபாய்.

சில்க் - காலத்தைய ஹீரோயின்கள் மொத்த படத்திற்கும் வாங்கிய சம்பளம் இதைவிட மிகவும் குறைவுதான் என்கிறார்கள் சினிமா உலகைச் சேர்ந்தவர்கள்.

*** ***

AVM - நிறுவனத்தின் 50ஆவது வருடத்தை ஒட்டி, அதைப் பற்றி ஒரு டொக்குமெண்ட்ரி படம் எடுக்க முடிவு செய்தனர் நிர்வாகத்தினர். இதை அடுத்து AVM பேனரில் நடித்த அத்தனை பேரிடமும் ஒரு சின்ன பேட்டி எடுக்கவும் முடிவு செய்யப்பட்டது. இந்த டொக்குமெண்ட்ரியை எஸ்.பி.முத்துராமன் தான் மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தார்.

இதன் ஒரு பகுதியாக, AVMஇன் பெரும்பாலான படங்களில் நடித்த சில்க் ஸ்மிதாவிடமும் பேட்டி எடுக்க முடிவு செய்யப்பட்டு, அவரது வீட்டிற்கு போன் செய்திருக்கிறார்கள். போனை எடுத்த சில்க்கின் அம்மா "பாப்பா குளிச்சுட்டு இருக்கு... வந்தவுடனே சொல்றேன்" என்று சொல்லி இருக்கிறார். இதே போல மூன்று நான்கு தடவை போன் செய்தும் சில்க் மட்டும் லைனில் வரவேயில்லை. இதற்கு சில நாட்களுக்குப் பின் ஒரு திருமண வீட்டில் வைத்து சில்க் ஸ்மிதாவை சந்திக்கும் வாய்ப்பு எஸ்.பி.எம்முக்கு கிடைத்திருக்கிறது. எஸ்.பி.எம்-மை பார்த்தவுடன் ஓடி வந்து வணக்கம் சொன்ன சில்க்கிடம் சட்டென்று கோபப்பட்டிருக்கிறார் எஸ்.பி.எம் "வணக்கம் எல்லாம் நல்ல வைமா" ஆனா ஒரு உதவி, கேட்டா மட்டும் போனையே எடுத்துடாதீங்க" என்று.

அதிர்ந்து கூட பேசாத எஸ்.பி.முத்துராமனின் கோபத்தை பார்த்த சில்க் அங்கேயே அழுது விட்டாராம். அப்புறம் "தனக்கு இந்த விஷயமே தெரியாது என்றும், தனக்குத் தெரியாமல் தன்னுடைய அம்மா இது போல் பல விஷயங்களை மறைப்பதாகவும்" வருத்தப்பட்ட சில்க், அதற்கடுத்த வாரத்தில் வந்த ஞாயிற்றுக் கிழமையை, தன்னுடைய ஓய்வில்லாத படப்பிடிப்புக்கிடையிலும், AVM-ன் பொன் விழா டொக்குமெண்ட்ரிக்காக முழுதுமாக ஒதுக்கி கொடுத்தாராம்.

*** ***

சில்க் ஸ்மிதா அளவுக்குப் பிரபலமாக இருந்த நடிகை தமிழ் சினிமாவில் இன்றளவுக்கும் வேறு யாரும் இல்லை. ஒருமுறை இந்திரா காந்தி "யார் இந்த சில்க்?" என்று சிரித்துக்கொண்டே கேட்கும் அளவுக்கு சில்க் ஸ்மிதாவின் பெயர் இந்தியா முழுவதும் பரவியிருந்தது.

- சாரு நிவேதிதா.

# காட்டுப்பகுதி சுற்றுலாப் பயணிகள் கவனத்திற்கு!

- ஆர்.ஜி.ஜெகதீஷ் -




மனிதர்களாகிய நாம் தினம் சுவாசிக்கும் காற்றை யாராவது தடைசெய்தால், நம்முடைய நிலைமை என்னவாகும்? நம் உடலின் ஒவ்வொரு முக்கிய உறுப்புகளும் செயலிழந்து கடைசியாக நம்மால் இறுதி மூச்சுக்கூட விட முடியாமல் பரிதாபமாக மாய்ந்து போவாம்.

மனிதன் சுவாசிப்பதற்குத் தேவையான பிராண வாயு காடுகளில் உள்ள மரங்களில் இருந்துதான் கிடைக்கிறது. ஆனால், அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காடுகளின் தற்போதுள்ள நிலைமை வருத்தமளிக்கும் நிலையில் இருக்கின்றது. மனிதனின் நுரையீரலைப் பிளாஸ்டிக் பையால் அடைத்தால் எப்படிச் சுவாசிக்க முடியாதோ அதே மனிதனால் காடுகளில் வீசப்படும் பிளாஸ்டிக்கால் மரங்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

முக்கியமாக மனிதர்களால் வீசப்படும் பிளாஸ்டிக் பொருள்களால் காடுகள் கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்புகளைச் சந்தித்து வருகின்றன. காடுகளில் ஒவ்வொரு நூறடி தொலைவிலும் நூற்றுக் கணக்கான தாவரங்களும், ஆயிரக்கணக்கான பூச்சிகளும் உள்ளன.

அதேபோல் பறவை இனங்களும் மிகுந்து காணப்படும். விலங்குகளுக்கும் பஞ்சமில்லை. இப்படிப்பட்ட அடர்காடுகளைப் புற்றுநோயைப் போல கொஞ்சம் கொஞ்சமாக அரித்து வருகின்றன பிளாஸ்டிக் பைகள்.

காட்டுப் பகுதிக்குச் சுற்றுலா செல்பவர்கள் அந்தக் காட்டிற்கான மரியாதையைத் தருவதில்லை. அவர்கள் வீசிவிட்டுச் செல்லும் பிளாஸ்டிக்குகள் வனத்திற்கும் வன உயிரினங்களுக்கும் அச்சுறுத்தலாக உள்ளன. இது இன்னும் சில ஆண்டுகளில் மனிதனின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாகும் நிலையை உண்டாக்கும்.

பிளாஸ்டிக் கழிவுகள், அணு ஆயுதங்களைவிட ஆபத்தானது என காட்டுயிர் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.



அதேபோல வனப் பகுதிகளில் வனத்துறையினர் வைத்துள்ள அறிவிப்புப் பலகைகளும் மிகவும் யோசிக்க வைப்பவை. அதாவது, "குரங்குகளுக்குத் தேவையான உணவுகள் வனத்தில் கிடைக்கின்றன. சுற்றுலாவுக்கு வரும் மக்கள் தங்களுடைய தின்பண்டங்களைக் கொடுத்து குரங்குகளின் உணவுப் பழக்கத்தை மாற்றாதீர்கள்" என்று எழுதி வைத்துள்ளனர்.

குரங்குகளின் உணவுப் பழக்கத்தையும் மனிதர்கள் நாம் மாற்றி, அவற்றின் வாழ்க்கை முறைகளையும் மாற்றி வருகிறோம்.



இதுவும் வனத்தின் பாதுகாப்புக்கு ஒரு விதத்திலான அச்சுறுத்தலேயாகும்.

ஒரு மரம் தன் வாழ்நாளெல்லாம் வெளியிடும் ஒட்சிசனின் மதிப்பு முப்பத்தைந்து இலட்சம் ரூபாவுக்கும் மேலானது எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

காடுகளை நாம் பெருமளவு அழிப்பதால் பூமி தொடர்ந்து வெப்பமயமாகிறது. மரங்களை வெட்டுவதால் காடுகள் அழிவது ஒருபக்கம் இருந்தாலும் இதுபோன்ற பிளாஸ்டிக் பொருள்களைக் காட்டின் வளம் மிக்க மண்களை மங்க வைக்கின்றது. இவையெல்லாம் நாமாக உணர்ந்து செயல்படாதவரை இவற்றை தடுக்க முடியாமலே போய்விடும்.

# சுற்றுகின்ற உலகைச் சுற்றிவர ஆசை!



ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த இளைஞர் பெர்னாண்டோ பெர்னாண்டஸ். இவர், அரசாங்க உத்தியோகத்தில் இருந்தார். இவரது மனைவி பெலூர். இருவருக்குமே உலகத்தை சுற்றிப் பார்த்து, இயற்கை அழகை இரசிப்பதில் ஆர்வம் அதிகம். இரண்டு குழந்தைகள் இருப்பதாலும், வேலைப் பளு காரணமாகவும், இவர்களின் ஆசை நிறைவேறவில்லை. "இப்போதே இந்த ஆசையை நிறைவேற்றா விட்டால், பின் எப்போதும் நிறைவேற்ற முடியாது..." என, நினைத்த இந்த ஜோடி, அதிரடியாக ஒரு முடிவை எடுத்தது.

வீடு, வாகனங்கள் என, தங்களுக்கு சொந்தமான அனைத்து சொத்துகளையும் விற்று விட்டனர். பெர்னாண்டோ, தன் வேலையையும் ராஜினாமா செய்து விட்டார். அனைத்து வசதிகளுடன் கூடிய, வான் ஒன்றை வாங்கி, அதில், குடும்பத்துடன் உலகம் சுற்ற கிளம்பி விட்டனர். தேவையான உடைகள், உணவு, புத்தகங்கள், குழந்தைகள் விளையாடும் பொம்மைகள் ஆகியவற்றை மட்டும், தங்களுடன் எடுத்துக் கொண்டனர்.

பிரான்ஸ், அமெரிக்கா, பிரிட்டன் என, ஒவ்வொரு நாடாக, இந்தக் குடும்பத்தினர், உற்சாகம் சிறகடிக்க பறந்து கொண்டிருக்கின்றனர். ஊர் சுற்றுவதற்காக வேலையை விடலாமா என, பெர்னாண்டோவிடம் கேட்டால், "வாழ்க்கை ஒரு முறைதான். அதற்குள் அனைத்து ஆசைகளையும் அனுபவித்துவிட வேண்டும். வேலையாவது, மண்ணாங்கட்டியாவது..." என, தத்துவம் பேசுகிறார். "நாம் வந்து பிறந்திருப்பது வாழ்வைக் கொண்டாடுவதற்காகவே" என்ற ஓஷோவின் தத்துவம்.

# கடல்மட்ட உயர்வும் நிலத்தடி நீரின் சரிவும்!

- இரா. நந்தகுமார் -

புவி வெப்பமடைதல் காரணமாக வட, தென் துருவங்களில் உள்ள பனிப்பாறைகள் உருகுவதும், அதன் காரணமாக கடல் நீர் மட்டம் உயர்ந்து கொண்டிருப்பதும் சாதாரண மக்கள் மத்தியில்கூட இப்போது விவாதப் பொருளா கியிருக்கிறது.

இன்னும் சில பத்தாண்டுகளில் ஏறக்குறைய 25 செ.மீ. வரை கடல்மட்டம் அதிகரிக்கும். இதே வேகத்தில் போனால், 2100 - இல் ஏறக்குறைய 6 அடி வரை அதிகரிக்கும். அவ்வாறு நடந்தால் மாலைத்தீவு உள்ளிட்ட பல பகுதிகள் உலக வரைபடத்தில் இருந்தே காணாமல் போகும்.

உலக மக்கள்தொகையில் ஆறு பேரில் ஒருவர் அகதியாகும் நிலை ஏற்படும். ஆறுகளின் கழிமுகப் பகுதிகளில் கடல் நீர் புகுவதால், தண்ணீரின் உப்புத் தன்மை அதிகரிப்பதுடன், நிலத்தடி நீரும் மாசுபடும். இதனால் உயிர்ச்சமநிலை பாதிக்கப்பட்டு, விரும்பத்தகாத பல்வேறு விளைவுகள் ஏற்படும்.

இவ்வளவு பாதகமான அம்சங்கள் இருப்பதால்தான், புவி வெப்பமடைதல் பிரச்சினை இவ்வளவு தீவிரமாக விவாதிக்கப் படுகிறது. ஆனால், கடல் மட்டம் உயர்வதற்கு புவியின் வெப்பநிலை உயர்வது மட்டுமே காரணமல்ல என்கிறார்கள் ஜப்பானிய விஞ்ஞானிகள்.

தண்ணீரை வரைமுறையின்றிப் பயன்படுத்துவதும், நிலத்தடி நீரை அதிகப்படியாக உறிஞ்சுவதும் கடல் மட்டம் உயர மிக முக்கிய காரணம் என்கின்றனர்.

கிரீன்லாந்து மற்றும் அன்டார்டிகா பகுதிகளில் உள்ள உலகின் மிகப்பெரிய பனிப்பாறைகளில் இருந்து உருகும் நீரைக் காட்டிலும் 5 மடங்கு அதிகமாக இப்போது நிலத்தடி நீர் உறிஞ்சப்படுகிறது.

பொதுமக்களின் பயன்பாட்டுக்குப் பின் கழிவு நீராக மாறும் இந்த நீரின் பெரும்பகுதி சாக்கடைகள் மூலம் ஆறுகளிலும், ஓடைகளிலும் கலந்து பின்னர் கடலில் விடப்படுகிறது. குறைந்த அளவு நீரே மீண்டும் பூமிக்குள் போகிறது.

இதனால் ஆறுகள் மூலமாக இயல்பாகச் சேருவதைவிட அதிகமான தண்ணீர் கடலில் கலந்து கொண்டிருக்கிறது. புவி வெப்பமடைவதன் காரணமாக எந்த அளவு உயர்ந்து கொண்டிருக்கிறதோ, அதே அளவுக்குச் சராசரியாக ஆண்டுக்கு 1 மி.மீ. நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதாலும் கடல்மட்டம் உயர்கிறது என்கிறது ஜப்பானிய விஞ்ஞானிகளின் ஆய்வு.

- மனிதனால் வீணடிக்கப்படும் இயற்கை வளங்களில் நீரே பிரதான இடம்பிடிக்கிறது. நிலத்தடி நீராக இருந்தாலும், நன்னீராக இருந்தாலும் அதை மாசுபடுத்துவதையும், வீணடிப்பதையும் பற்றி நாம் அதிக அளவில் கவலைப்படுவதில்லை.

- கோதுமை உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற நாடுகளில் ஒன்றான சவூதி அரேபியாவில் இப்போது, ஏறக்குறைய நிலத்தடி நீரே இல்லாமல் போய்விட்டது. இப்போது தனது தேவைக்கான கோதுமையை அந்நாடு இறக்குமதி செய்து வருகிறது. 2016-ஆம் ஆண்டளவில் அங்கு கோதுமை விவசாயம், முற்றிலுமாக முடிவுக்கு வந்து விடும் என்று எச்சரிக்கின்றனர் விஞ்ஞானிகள்.


- பெருநகரங்களில் நிலத்தடி நீரின் பயன்பாடு அண்மைக் காலங்களில் மிக வேகமாக அதிகரித்து வருகிறது. இவ்வளவு வேகமாக நீர்த்தேவை பெருகுவதற்கான காரணங்கள் என்ன? பொதுச் சொத்தான நிலத்தடி நீர் தனிச் சொத்தாகக் கருதப்படுவதே அதன் வரைமுறையற்ற பயன்பாட்டுக்கான காரணம் என்கிறது ஆய்வு.

- மக்கள்தொகை உயர்வால் நீருக்கான தேவை பெருகுகிறது என்பது உண்மைதான். ஆனால், அதனை மட்டுமே இதற்குக் காரணம் காட்ட முடியாது. பெரும் தொழிற்சாலைகளின் அபரிமிதமான வளர்ச்சியும் இன்று நீர்த்தேவை மிக அதிகமாகப் பெருக வழிவகுத்துள்ளது.

- நீர் மட்டுமல்லாமல், காடுகளும், கனிமங்களும் தொழிற்சாலைகளின் இலாப வேட்டைகளுக்காக தாரை வார்க்கப்படுகின்றன. இதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தாலே, மனிதகுலத்தை அச்சுறுத்தும் பல்வேறு சிக்கல்களுக்குத் தீர்வு கிடைத்து விடும்.

# பச்சிலைகளின் பயன்பாடு

# கோவை





தாவரவியற் பெயர்: Coccinia grandls

ஆங்கிலப் பெயர்: Ivy gourd

இது ஒரு கொடி இனம். எங்கும் கிடைக்கும். இதில் இனிப்பு, கைப்பு என இரு வகையுண்டு. கருங் கோவை என மற்றோர் இனமு முண்டு. கோவையிலையின் உருவத் தையும் நிறத்தையும் கொண்டு மூவி ரல் கோவை, ஐவிரல் கோவை, நாமக்கோவை என மூன்று விதமா கப் பிரித்திருக்கிறார்கள்.

இதன் இலையினால் கண்கு ளிர்ச்சி உண்டாகும். பெரும்புண், சிறுசிரங்கு, உடல் வெக்கை நீர டைப்பு தீரும்.

**உணவு முறையாக வாய்ப்புண், வயிற்றுப் புண்ணிற்கு**

**கோவை இலை மசியல்**

கோவை இலையைப் பொடியாக அரிந்தது 2கப், பூண்டு 6 பல், துவரம்பருப்பு 100கி. சின்னவெங்கா யம் பொடியாக அரிந்தது ஒரு கைப்பிடி. பச்சை மிளகாய் 2, உப்பு தேவையான அளவு, தேங் காய் 1 மூடி. துவரம் பருப்பை வேக விடவும். பருப்பு முக்கால் பாகம் வெந்ததும் கீரையை அள்ளி போட்டு வேகவிடவும். பூண்டை தோலுரித்து தட்டிப் போடவும்.வெங் காயத்தையும் போட்டு இவைகள் அனைத்தும் வெந்ததும் இறக்கி வைக்கவும். உப்பைப் போட்டு கரண்டியால் கடைந்து எடுக்கவும். தேங்காய்த் துருவலை அம்மியில் வைத்து அரைத்து இத்துடன் மிளகு வைத்து கரகரப்பாக அரைக்கவும். பச்சை மிளகாய் 2 வெங்காயம் வைத்து கரகரப்பாக தட்டிப்போட வும். அரைத்த தேங்காயைப் போட வும். இதனை சோற்றுடன் சேர்த்துப் பிசைந்து சாப்பிடலாம்.

கோவை இலையில் இரும்புச் சத்து அதிகம் உள்ளது. வாய்ப்புண், வயிற்றுப்புண் ஆறுவதுடன் மலச்சிக் கல் தீரும். கண்கள் குளிர்ச்சி அடையும் உடற்சூடு தணியும்.

**தொந்தி, உடல் எடை குறைய கோவைக் கொடி இரசம்**

கோவைக் கொடியை தேவை யான அளவு எடுத்துக் கொள்ளவும். தக்காளி 6, வெங்காயம் ஒரு சிறுகப் நீர் 2 கப், உப்பு தேவையான அளவு, எலுமிச்சைப்பழம் 4, பெருங் காயம் 1 துண்டு, சீரகம் 2 தே.க., பசுநெய் 10 மி.லி. கொத்தமல்லி 2 தே.க, தேங்காய் கீற்று 2, கற்சட்டி யில் வெங்காயம் பொடியாக நறுக் கியதை பாதி போடவும்.தக்காளியை பாதி அளவு அரிந்து போடவும். காய்ந்த மல்லி, தேங்காய் கீற்று இவற்றை அரைத்துப் போடவும் 1தே.க. சீரகத்தை கரகரப்பாக அரைத்துப் போடவும். கோவைக் கொடியை சிறு துண்டுகளாக நறுக்கிப்போட்டு நன் றாக கொதிக்க விடவும். சட்டியில் நெய்யை ஊற்றி ஒரு தே.க. சீரகம் போட்டு தாளித்து வெங்காயம் தக்காளியைப் போட்டு தாளித்து கொதித்த ரசத்தையும் விட்டு தாளிக் கவும். இறக்கி வைத்து பெருங்காயத் தைப் பொரித்து தூள் செய்து போடவும். எலுமிச்சைப்பழத்தை பிழிந்து ஊற்றவும். உப்பைப் போட்டு பயன்படுத்தலாம். இதனால் உடல் எடை குறைவதுடன் தொந்தியும் குறையும்.

**நீரிழிவு நோயாளர்கட்கு மிகவும் சிறந்தது கோவைக்காய் வற்றல்**

கோவைக்காயை கழுவி சிறுசிறு வட்ட வில்லைகளாக அரியவும். ஒரு நாள் வெய்யிலில் காயப் போடவும். அன்று இரவு மோரில் உப்பு, மஞ்சட் பொடி, மிளகுத் தூள் போட்டு நன்கு கலக்கி காயை ஊறப் போடவும். 2 நாள் ஊறியதும் வெய்யிலில் காயப்போடவும். காயைத் தினம் காயவைத்து எடுத்து இரவில் மேற்கூறியவாறு மோரில் ஊறப்போடவும். இது போன்று மோர் சுண்டும் வரை போட்டு காய வைக்கவும். நன்கு ஈரமின்றி காய் காய்ந்ததும் எடுத்து 4 மாதங்கள் கழித்து வறுத்துச் சாப்பிடலாம். மது, மேகநோயாளிகள் மட்டுமின்றி வாய்ப்புண், வயிற்றுப்புண் உடைய வர்களும் பயன்படுத்தலாம்.

**இருமலினால் பாதிப்படைந் தோர்க்கு கோவை இலைக் கூட்டு**

கோவை இலையை அரிந்து கொள்ள வேண்டும். வாணலியில் 100கிராம் பாசிப்பயறுடன் 1 தே.க. மஞ்சள் பொடி சேர்த்து வேக விடவும். கீரையைவேகவிடவும் வாண லியில் எண்ணெய் விட்டு கடலைப் பருப்பு 2 கரண்டி போட்டு சிவந்த தும் வெங்காயம் போட்டு வதக்கி 1காய்ந்த மிளகாயை கிள்ளிப் போடவும். கீரையைத் தாளிக்கவும் உப்பு, தேங்காய், சோம்பு, மிளகு இவற்றை அரைத்து ஊற்றி ஒரு கொதி வந்ததும், இறக்கி வைத்து பாசிப்பயறைப்போடவும். சோற்றுடன் போட்டுப் பிசைந்து சாப்பிடவும். இருமல் தணிவதுடன், உடற்சூட்டை யும் தணிக்கும். கண்கள் குளிர்ச்சி அடையும். வாய்ப்புண், வயிற்றுப் புண், வாதவலியும் கூட குணமாகும்.

**மருத்துவ உபயோகங்களாக சொறி, சிரங்கு, புண்கள் ஆற**

ஒரு கைப்பிடி இலையை கொதிக் கின்ற வெந்நீரில் இட்டு சற்றுநேரம் சென்ற பின் வடிகட்டி 30 மி.லீ. காலை மாலை பருகலாம் அல்லது இலையை உலர்த்திப் பொடிசெய்து அரை தே.க. அளவு காலை மாலை உட்கொள்ளலாம். இலையை எண்ணெ யில் கொதிக்க வைத்து வடிகட்டி மேற்பூச்சாகப் பூச சொறி, சிரங்கு, கொடிய புண்களும் குணமாகும்.

**நீரிழிவு நோய் அகல**

கோவைக்கீரை 25 கிராம் அளவு எடுத்து மைபோல அரைத்து இரண்டு பாகமாக்கி காலை மாலை 2 வேளை வீதம் 100 மி.லீ. மோரில் கலந்து தொடர்ந்து பருகலாம்.

**சிறப்பு உபயோகம்**

கபம் கோவையைப் போக்கும். உடலிற்கு வெப்பத்தைக் கொடுக் கும் வியர்வையை உண்டாக்கி சூட்டைக் குறைக்கும். வெள்ளை, சிறுநீர்த் தடை நீங்கும். கண்ணிற்கு குளிர்ச்சி உண்டாகும்.

"கோழைக்கட்டுக்கு கோவைக் கிழங்கு

கோபத்தை தடுக்க தூதுவளைக் கீரை" என்பது மருத்துவப் பழமொழி.

**டாக்டர் திருமதி T.குமுதரஞ்சன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்த ஆயுர்வேத அலகு
யாழ். பல்கலைக்கழகம்.

# சிறுநீரகக் கல்லைத் தவிர்க்க சில ஆலோசனைகள்

**தலைவலி,** பல்வலி போல பல ரையும் பரவலாக தாக்கக்கூடிய ஒரு பிரச்சினையாக உருவெடுத்துக் கொண் டிருக்கிறது சிறுநீரகக்கல். இந்த நோய் வருவதற்கான அறிகுறிகள், பின்னணி, சிகிச்சைகள்,தவிர்க்கும் முறைகள் பற்றி சிறுநீரகவியல் மருத் துவர்கள் தெரிவித்துள்ள ஆலோச னைகள்.

சிறுநீரகத்தில்,சிறுநீரில் உள்ள கிரிஸ்டல் எனப்படுகிற உப்புகள் ஒன்று திரண்டு, சிறுநீர்ப் பாதையில் பல்வேறு அளவுள்ள கற்களை உருவாக்கலாம். சிறுநீரானது சிறுநீரகத்தில் உற்பத்தி யாகி, சிறுநீர்க் குழாய் வழியே சிறு நீர்ப் பைகளுக்கு வ்ந்து பிறகு வெளி யேறுகிறது.. சிறுநீரகத்தில்தான் கல் லும் உற்பத்தியாகிறது.


முதுகில் வலியில் ஆரம்பித்து, முன்பக்க அடிவயிற்றில் வலித்தாலோ அல்லது தொடைகள்,அந்தரங்க உறுப் புகளுக்குப் பரவினாலோ, காய்ச்சல், சிறுநீரில் இரத்தம் வெளியேறுதல் போன றவை இருந்தாலோ சிறுநீரகக்கல் லாக இருக்கலாம்.

பரம்பரையாக சிறுநீரகக்கல் பிரச் சினை ஒருவரைத் தாக்கலாம். சிறுநீர் போகிற பாதையில் அடைப்பிருந் தாலோ பாரா தைரொய்ட் எனப்படு கிற சுரப்பியின் அதீத இயக்கம் கார ணமாகவோ கூட சிறுநீரகத்தில் கல் வரலாம். அலட்சியப்படுத்தினால் கல் கொஞ்சம் கொஞ்சமாக பெரிதாகி, மான் கொம்பு அளவுக்கு வளர்ந்து நிற்கும்.

5 மில்லிமீற்றரை விட சிறிய கல் எனில் சிறுநீரிலேயே வெளியேறி விடும். 8 மி.மீ. என்றால் 80 சதவிகித வாய்ப் புண்டு. 1 செ.மீ. அளவுக்கு வளர்ந்து விட்டால் சிரமம். சரியான நேரத்தில் சிகிச்சை எடுக்காவிட்டால் சிறுநீரகம், சிறுநீரைப் பிரிக்க முடியாது செயலி ழக்கும்.

இரத்தப்பரிசோதனை மூலம் கல் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். பிறகு ஸ்கான் உதவியு டன், கல் இருக்கும் இடம், அதன் அளவைத் தெரிந்து கொள்ளலாம். அய்.வி.பி. எக்ஸ்ரே மூலம் சிறுநீரகம் எப்படி இயங்குகிறது என்பதையும், அதில் அடைப்புள்ளதா, வேலை செய யும் திறனை இழக்குமா என்பனவற் றைக் கண்டுபிடிக்கலாம்.

மருந்துகளால் முடியாத பட்சத்தில், அதிர்வலை சிகிச்சை மூலம் கல்லை




மட்டும் உடைத்தெடுக்கலாம்.

பெரிய கல் என்றால் முதுகுவழியே துளையிட்டு, டெலஸ்கோப் வழியே பார்த்து உடைக்கலாம். சிறுநீர் பாதை வழியே டெலஸ்கோப்பை செலுத்தி உடைக்கிற யூரெத்ரோஸ்கோப்பியும் பலனளிக்கும். ஒருமுறை கல்லை அகற்றினால் மறுபடி வருவதற்கான வாய்ப்புகள் உண்டு.

சிறுநீரகக் கல்லை வெளியேற்ற வீட்டிலேயே மருந்து உள்ளது என்கின் றனர் மருத்துவர்கள். தினசரி மூன்று முதல் நான்கு லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும். கோடை காலத்தில் தின மும் ஒரு இளநீரும், ஏனைய காலங் களில் வாரத்திற்கு 2 முறையாவது இளநீர் குடிப்பது நல்லது.

அகத்தி கீரையுடன் உப்பு, சீரகம் சேர்த்து வேகவைத்து, அந்த நீரை அருந்தலாம்.

முள்ளங்கிச் சாறு 30 மி.லீ.அளவு குடித்து வந்தால் சிறுநீரக கோளாறு நீங்கும். சிறுநீர் நன்றாக பிரியும். வெள்ளரி, வாழைப்பூ, வாழைத் தண்டு ஆகியவற்றை அதிகம் உட் கொள்ள வேண்டும்.

வெள்ளரிப்பிஞ்சு, நீராகாரம் சிறு நீரக பிரச்சினைகளுக்கு அருமருந்து. பரங்கிக்காய் சிறுநீர் பெருக்கி. அதை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள ளலாம். புதினாக் கீரையை தொடர்ச் சியாக சாப்பிட்டு வந்தால் சிறுநீரகங் கள் பலப்படும்.

சிறுநீரக கல் பிரச்சினை உள்ளவர கள் உப்பு பிஸ்கட், சிப்ஸ், கடலை, பொப்கோன், அப்பளம், வடகம், வற்றல், ஊறுகாய், கருவாடு, உப்புக்கண்டம், முந்திரிப்பருப்பு, பாதாம், பிஸ்தா, கேசரி பருப்பு, கொள்ளு, துவரம் பருப்பு, சோடியம் பைகுகார்பனேட் உப்பு, சீஸ் ஆகிய உணவுகளை தவிர்க்க வேண்டும் என்று மருத்துவர் கள் தெரிவித்துள்ளனர்.

கோக்கோ, குளிர்பானங்கள்,மது மற்றும் புகையிலை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

(கிரு- சிகரம்)

# நெல் குற்றும் ஆலைகள் இன்மையே அரிசியின் விலையுயர்வுக்கு காரணம்

(கிரு-சிகரம்)

செறிவான மக்கள் வசிக்கும் யாழ்ப்பாணத்தில் நெல்லைத் தவிர ஏனைய எல்லா விவசாய உற்பத்திகளுக்கு பற்றாக் குறை நிலவுகின்றது. எனினும் அரிசியை கூட உயர்ந்த விலை கொடுத்தே வாங்க வேண்டிய நிலையினை தற்போது உள்ள சந்தைப்பொறி முறை உருவாக்கியுள்ளது. இதனால தற்போது காணப்படும் சந்தைப் பொறி முறை தமக்குப் பொருத்தமானதாக இல்லை என யாழ்ப்பாண மக்கள் தெரிவிக்கின்றனர்

யாழ்ப்பாண மரக்கறிகள் தம்புள்ள மற்றும் வவுனியா சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, மீண்டும் யாழ்ப்பாண சந்தைகளிற்கு தம்புள்ள மற்றும் வவுனியாவில் உள்ள தரகர்களினால் உயர்ந்த விலையுடன் கொண்டு வரப்படுகின்றன. இதே போல, யாழ்ப்பாணத்தில் சுமார் 50 சதவீதம் அளவு மிகையாக நெல் உற்பத்தி செய்யப்படுகின்ற போதும், அரிசியை உயர்ந்த விலையில் வவுனியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதாக யாழ்ப்பாண வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு விசித்திரமான சந்தைப் பொறி முறை யாழ்ப்பாணத்தில் நிலவுவதற்கு, தங்கு தடையின்றி தம்புள்ள, வவுனியா மரக்கறிகள் வந்து குவிவதும், எல்லா வகையான மரக்கறி மற்றும் பழங்களும் உள்ளூர் விவசாயிகளிடம் இருந்து தொடர்ச்சியாக பெற முடியாமையினால் உயர்ந்த விலைக்கேனும் தம்புள்ள போன்ற பிற மாவட்ட சந்தை தரகர்களிடம் இருந்து கொள்வனவு செய்வதாக யாழ்ப்பாண சந்தை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தமது மரக்கறிகளை கொள்வனவு செய்ய யாழ்ப்பாண வியாபாரிகள் தயங்குவதால், வீட்டு வசலுக்கே வந்து எடுத்துச் செல்லும் தம்புள்ள மற்றும் வவுனியா போன்ற சந்தை தரகர்களிற்கு குறைந்த விலைக்கேனும் விற்க வேண்டி உள்ளதுடன் இதனால் மரக்கறி செய்கையில் ஊக்கம் இழந்து வருவதாக யாழ்ப்பாண மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் தேவையான அளவு அரிசி ஆலைகள் இல்லாமையால், சுமார் 75 சதவீதமான நெல் வவுனியா அரிசி ஆலைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, உயர்ந்த விலையுடன் அரிசியாக்கி யாழ்ப்பாணத்திற்கு இறக்குமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அகலமாகும் ஆடியபாதம் வீதி

(பகீ-சிகரம்)

யாழ்.திருநெல்வேலி ஆடியபாதம் வீதியின் அகலிப்பு பணிகள் ஆரம்பிக்கபட்டு மிக வேகமாக நடைபெற்று வருகின்றது.

வடக்கின் வசந்தம் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி அபிவிருத்திகளின் ஒரு அங்கமாகவே திருநெல்வேலி சந்தியில் இருந்து கல்வியக்காட்டு சந்திவரையான வீதிகள் அகலமாக்கப்பட்டு வருகின்றன.

இதன்முதற்கட்டமாக வீதிகளின் அருகாமையில் வடிகால்அமைக்கும் பணியில்10இற்கும் மேற்பட்ட தொழிளாலர்கள் ஈடுபட்டுள்ளனர், இந்த வடிகால்அமைக்கும் பணிகள் நிறைவடைந்தவுடன் குறித்த வீதி காப்பெற் இடப்படவுள்ளது. வீதிஅகலிக்கும் பணியினை நிறுவனமே மேற்கொண்டு வருகின்றது.

# சிகரம் ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி

(சிகரம்)

வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கு எல்லையற்ற துறையாக ஹோட்டல் துறை காணப்படுவதாகவும், இந்தத் துறையில் ஏராளமான வேலை வாய்ப்புகள் குவிந்து கிடப்பதாகவும், யாழ். ஞானம்ஸ் ஹோட்டல் முகாமையாளர் புஸ்பன் தெரிவித்தார்

இரண்டாவது தடவையாகவும் யாழ்ப்பாணத்தில்நடைபெற்றமலேசியாவில் வருமானத்துடனான ஹோட்டல் தொழிற் துறைப் பயிற்சியினைத் தொடர்வது தொடர்பான கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமையும் நேற்று முன்தினம் திங்கட்கிழமையும் யாழ்.ஞானம்ஸ் ஹோட்டல் நடைபெற்றது.

12இக்கும் மேற்பட்ட மலேசியப பல்கலைக்கழகங்களை இலங்கையில் பிரதிநிதித்துவப்படுத்தும் சிகரம் ஊடக இல்லத்தின் பணிப்பாளர் கோ.றுஷாங்கன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு ஹோட்டல் தொழிற் பயிற்சியைப் பெறுவதனால் கிடைக்கக் கூடிய தொழில் வாய்ப்புகள் மறறும் பயன்கள் தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் இதுதொடர்பாக தெரிவிக்கையில்,

ஹோட்டல் வேலை செய்வதை நமது சமூகம் இழிவாக நினைக்கின்றனர்.இது தவறு. இந்தத் துறையில் மாதம் 50,000 இக்கு மேல் வருமானத்தை ஈட்டிக கொள்ள முடியும், ஆனால் இது பலருக்குத் தெரிவதில்லை.

ஹோட்டல் துறையில் வேலை செய்வது என்பது இலகுவான விடயம் அல்ல ,முறையான பயிறசியைப் பெற்றவர்களே இதனைத் திறம்படச் செய்ய முடியும்.இதற்கான ஒரு சிறந்த வாய்பபாகவே சிகரம் ஊடக இல்லகல்வி வழிகாட்டல் பிரிவு படிக்கும் போதே வருமானம் பெறக் கூடிய ஹோட்டல் தொழில் துறைப் பயிற்சியை மலேசியப் பல்கலைக்கழகத்தில் தொடர்வதற்கான வழிகாட்டல்களை வழங்கி வருகின்றது. என்றார்.


இதன்போது மலேசிய சேயி பல்கலைக்கழகத்தின் பிரதிநிதி றயான், ஹோட்டல் தொழிற் துறைப் பயிற்சி நெறியானது தொடர்வதன் மூலம் சிறந்த வேலை வாய்ப்பைப் பெறுவதற்கும்,



சிறந்த தெரிவு,அத்துடன் பயிற்சி நெறி முடிவில் சுயதொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கான தகைமைகளை விருத்தி செய்யவும் இங்கு பயிற்சியளிக்கப்படும. அந்நவகையில்1992ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் 10,000இற்கும் மேற்பட்டவர்கள் இந்தப் பயிற்சிநெறியை முடித்து வெளியேறியுள்ளனர் எனவும் மலேசியப் பிரதிநிதி றயான் கூறினார்.

கருத்தரங்கின் நிறைவில் பயிற்சிநெறிக்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகத் தேர்வும் நடைபெற்று, தகுதியான மாணவர்களுக்கு அந்த இடத்திலேயே உடனடி அனுமதியும் வழங்கப்பட்டது.

# கந்தர்மடம் ஸ்ரீசித்திவிநாயகருக்கு சிறப்புற நடைபெற்ற இரதோற்சவம்



(கிரு.சிகரம்)


யாழ். கந்தர்மடம் பழம் வீதி அருள்மிகு ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தின் இரதோற்வசம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் எழுந்தருளி இருக்கும் தான்தோன்றி மூர்த்தியாகிய அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த 8ஆம்திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் திருவிழா இடம்பெற்றது.

நேற்றைய தினம் தீர்த்தோற்சவம் இடம் பெற்றுள்ளதுடன் இன்று புதன்கிழமை வைரவர் மடையும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

# மெய்தான் பாருங்கோ...

## குருமாரும் - சிஷ்யர்களும்



அந்த நாளேலே நாங்கள் பள்ளிக்கூடம் போய்படிக்கேக்கை குரு-சிஷ்ய பக்தி நிலையெண்டது எவராலும் குறை சொல்லக்கூடிய அளவுக்கு இருக்கேல்லைப் பாருங்கோ! அந்தநாளேப் படிப்புகளும், படிப்பு நேரத்தில மட்டுமில்லாமல் தனிப்பட்ட இடங்களிலும் தங்கட குருநாதர்களைக் கண்டால் படிக்கிறபொடி பொட்டையள் அவையளுக்கு காட்டின மரியாதையளைப் போல இப்பவருமே?

எங்களுக்குப் படிப்பிச்ச வாத்திமாருடைய உருவத்தோற்றங்களும், அவையள் உடுத்துக்கொண்டுவாற வெள்ளைவேட்டி, நஷ்னல், தோளில உத்திரியம்(சால்வை) சகிதம் நிமிர்ந்த நடையும், நேர்கொண்டபார்வையுமாக' 'ஒருவித மிடுக்கோடு' எட்டத்தே வருகினமெண்டால் எங்களையறியாமலே நாங்கள் இருக்கையை விட்டு எழும்ப, "வணக்கம் வாத்தியார்" எண்டு எங்கட வாய்கள் வேறு உரத்துச் சொல்லும் பாருங்கோ!

ஆனா இன்டைக்கு நடக்கிற குரு - சிஷ்ய சங்கதியளைப் பாக்கேக்கை எங்களுக்கு அந்தநாளே வாத்தியார், தையலம்மா (ஆசிரியை) ஒவ்வொருவருடைய முகங்களும்தான் ஞாபகத்துக்கு வந்து போகுது.

ஆளுமை விருத்தி நிறைந்தவர்களாய்... அன்போடை கூடினகண்டிப்பாய்... பிள்ளையளின்ர எதிர்கால நலனில மிகுந்த அக்கறை உடையவர்களாய்.. ஒவ்வொரு பிள்ளைகளையும் தன பிள்ளைகளாக நினைச்சு வகுப்பு நடத்தி, பாடம் சொல்லிக் குடுத்த அந்தக்காலத்து வாத்திமார், தையலம்மாக்களோடை இண்டைய காலத்து ஆட்களை ஒப்பிடமுடியுமே? ஏதோ விரல் விட்டு எண்ணக்கூடியதாக அங்கினேக்கை; இங்கினேக்கை ரண்டொருவர் சேவைமனப்பான்மையோடை, தியாக மனப்பான்மையோட பாடம் சொல்லிக்குடுக்கினம்... எண்டதையும் எவராலையும் மறுத்துரைக்க முடியாது கண்டியளே!

இண்டைக்கு ஊருல உள்ள பள்ளிக்கூடங்களிலையும் சரி, தனியார் ரியூட்டரிலையும் சரி அங்கை நடக்கிற சிலசங்கதியளை உந்தப் பேப்பர் வழியவும், சனங்கள் கதைக்கிறதிலையிருந்தும் கேள்விப்படேக்கை, இப்பத்தேப் பிள்ளையளின்ர எதிர்காலத்தைக்குறிச்சு யோசினையும் கவலையுமாக்கிடக்குது பாருங்கோ.

குரு - சிஷ்ய பக்திமுறை ஏன் இப்படித் தேய்மானமாப் போனது எண்டதுக்கு பலபேர் பலகாரணங்களைச் சொல்லிக்கொண்டிருக்கினம். ஒருசாரர் இன்னொரு சாரரிலையும், பொதுச்சனங்கள் இந்த இரு சாரரையும் பாத்து சுட்டுவிரல் நீட்டி விமர்சனங்களைச் செய்து கொண்டிருக்கினம்.

குரு சிஷ்ய முறைமை காலப்போக்கில தடம்மாறிப்போனதுக்கு அந்திய நாட்டு வேலை மோகத்திலயிருந்து ஆயுதப் போராட்ட வரையறைக்குள்ள நிலவிய சூழ்நிலையள் ஒரு புறமிருக்க, போர்ஓய்ஞ்ச பிற்பாடு, போருக்கை அம்பிட்ட வையள் இப்ப புதுசாக்காணுற ஒரு உலகத்தின்ர போக்குகளுக்கை உந்தப்பட்டுப் போச்சினம் பாருங்கோ!

அறிவு ரீதியாக விஞ்ஞான வளர்ச்சியில ஒவ்வொருதுறையளும் வளர்ந்து 'அந்நியம்' எண்டு சொல்லப்பட்ட தெல்லாம் கிட்டவாகிப் போனதால; போய்க்கொண்டிருக்கிறதால, எல்லாம் ஒண்டுக்கை ஒண்டு ஊடுருவி நெருக்கமாப்போக, சிஷ்யன் குருமீது கொண்டதான 'பயபக்தி'யும், குரு சிஷ்யன் மீது கொண்டதான 'போதனை வழி'களும் இப்ப போனஇடம் தெரியாமல் போச்சுது பாருங்கோ!

படிக்கிற பொடியனுக்கு வாத்தியார் கண்மண் தெரியாமல் அடிக்கிறதும்,ஒற்றை, ரட்டை சடையளை உடல் ரீதியாகத் துன்புறுத்துறதும், பள்ளிக்கூட வரவுப் பதிவேட்டில வாத்தியார் 'சைன்' வைச்சிட்டு பக்கத்தில கிடக்கிற ரியூசன் கிளாசுக்கு கள்ளத்தனமாய் போய் பாடம் சொல்லிக்குடுக்கிறதும், சில பள்ளிக்கூடங்களில வாத்தியின்ர தோளுக்கு மேலாக கை போடாத ஒரு குறையாக வாத்தியோடை பொடி, பொட்டையள் பம்பலடிச்சு சிரிச்சுப்பேசிக்கதைக்கிறததும் குரு - சிஷ்ய முறைமையை நல்லாக் குப்புறவிழுத்திப்போட்டுது எண்டதை நான் இப்ப இதில சொல்லவாறன்.

எண்டாலும், நஷ்னல், வேட்டி சால்வையோடை போதிக்கிற ரண்டொரு ஆட்கள், இன்னமும் அந்த நாளேக் குரு - சிஷ்ய முறைமையைக் கைவிடாத நிலையில, அங்கினேக்கை, இங்கினேக்கை பாடம் சொல்லிக்குடுக்கிறதைப்பாக்க மனசுக்கு கொஞ்சம் ஆறுதலாக்கிடக்குது பாருங்கோ!

"குருவைக் கனம்பண்ணி கல்வி கற்பது எப்படி...?" எண்ட விசயத்தை இந்தக் 'குருமார்' வாழைப்பழத்தில ஊசி ஏத்துற மாதிரி... தங்கட சிஷ்யருக்கு அன்பான கண்டிப்போடை, மிகுந்த சிரத்தை யோடை பாடம் சொல்லிக்குடுத்தினமெண்டால், உந்த அறிவுச்சாலைகள் இனிவாற காலத்தில அவமானத்திற் குள்ளாகாமல் காப்பாத்தலாமல்லோ!

பணிதல்பண்பெண்டது படிக்கிற இடத்தில வந்தால்தான், எவர்க்கும் குனியாத ஒரு குலம் உருவாகும் எண்டதை இப்பத்தேக் 'குருமாரும் - சிஷ்யர்களும்' புரிஞ்சு நடந்தினமெண்டால் நல்லது கண்டியளே! - **சின்னக்குட்டி சின்னச்சாமி.**

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2012

## (புதிய பாடத்திட்டம்) நேர அட்டவணை

| ஆகஸ்ட் 06 ஆம் திகதி திங்கட்கிழமை | |
|---|---|
| முற்பகல் | பிற்பகல் |
| 8.30 - 11.30<br>10 இணைந்த கணிதம் I<br>8.30 - 10.30<br>78 அரபு I | 12.30 - 14.30<br>09 உயிரியல் I<br>21 பொருளியல் I<br>79 மலாய் I |

| ஆகஸ்ட் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை | |
|---|---|
| 8.30 - 10.30<br>52 நாட்டியம் (தேசிய) I<br>53 நாட்டியம் (பரதம்) I<br>54 சங்கீதம் (கீழைத்தேயம்) I<br>55 சங்கீதம் (கர்நாடகம்) I<br>56 சங்கீதம் (மேலைத்தேயம்) I | 12.30 - 15.30<br>09 உயிரியல் II<br>21 பொருளியல் II<br>79 மலாய் II |

| ஆகஸ்ட் 08 ஆம் திகதி புதன்கிழமை | |
|---|---|
| 8.30 - 11.30<br>10 இணைந்த கணிதம் II<br>52 நாட்டியம் (தேசிய) II<br>53 நாட்டியம் (பரதம்) II<br>78 அரபு II | 12.30 - 14.30<br>08 விவசாய விஞ்ஞானம் I<br>48 கிரேக்க உரோம நாகரிகம் I<br>83 ருசியன் I |

| ஆகஸ்ட் 09 ஆம் திகதி வியாழக்கிழமை | |
|---|---|
| 8.30 - 10.30<br>32 வணிகக்கல்வி I<br>82 ஜேர்மன் I<br>86 சீனமொழி I<br>8.30 - 11.30<br>51 சித்திரக்கலை I | 12.30 - 15.30<br>54 சங்கீதம் (கீழைத்தேயம்) II<br>55 சங்கீதம் (கர்நாடகம்) II<br>56 சங்கீதம் (மேலைத்தேயம்) II |

| ஆகஸ்ட் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை | |
|---|---|
| 8.30 - 10.30<br>01 பௌதிகவியல் I<br>8.30 - 11.30<br>32 வணிகக் கல்வி II<br>51 சித்திரக்கலை II<br>82 ஜேர்மன் II | 14.00 - 17.00<br>71 சிங்களம் I<br>72 தமிழ் I |

| ஆகஸ்ட் 11 ஆம் திகதி சனிக்கிழமை | |
|---|---|
| 8.30 - 11.30<br>08 விவசாய விஞ்ஞானம் II<br>48 கிரேக்க உரோம நாகரிகம் II<br>83 ருசியன் II<br>85 சீனமொழி II | 12.30 - 14.30<br>28 மனைப்பொருளியல் I |

| ஆகஸ்ட் 13 ஆம் திகதி திங்கட்கிழமை | |
|---|---|
| 8.30 - 11.30<br>01 பௌதிகவியல் II<br>51 சித்திரக்கலை III | 12.30 - 15.30<br>71 சிங்களம் II<br>72 தமிழ் II |

| ஆகஸ்ட் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை | |
|---|---|
| 8.30 - 10.30<br>24 அளவையியலும் விஞ்ஞான முறையும் I | 12.30 - 15.30<br>28 மனைப்பொருளியல் II |

| ஆகஸ்ட் 15 ஆம் திகதி புதன்கிழமை | |
|---|---|
| 8.30 - 10.30<br>02 இரசாயனவியல் I<br>75 சமஸ்கிருதம் I<br>81 பிரெஞ்சு I | 12.30 - 15.30<br>24 அளவையியலும் விஞ்ஞான முறையும் II |

| ஆகஸ்ட் 16 ஆம் திகதி வியாழக்கிழமை | |
|---|---|
| 8.30 - 10.30<br>14 குடிசார்த் தொழினுட்பவியல் I<br>15 பொறிமுறைத் தொழினுட்பவியல் I<br>16 மின், இலத்திரன், தகவல் தொழினுட்பவியல் I<br>17 உணவுத் தொழினுட்பவியல் I<br>18 விவசாயத் தொழினுட்பவியல் I<br>19 உயிர்வளத் தொழினுட்பவியல் I<br>74 பாளி I | 12.30 - 15.30<br>25 A வரலாறு (இந்திய) II<br>25 B வரலாறு (ஐரோப்பிய) II<br>25 C நவீன உலக வரலாறு II |

| ஆகஸ்ட் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை | |
|---|---|
| 8.30 - 11.30<br>02 இரசாயனவியல் II<br>75 சமஸ்கிருதம் II<br>81 பிரெஞ்சு II | 14.00 - 16.00<br>23 அரசியல் மூலத்துவங்கள் I |

| ஆகஸ்ட் 18 ஆம் திகதி சனிக்கிழமை | |
|---|---|
| 8.30 - 11.30<br>13 பொது ஆங்கிலம் I | 12.30 - 15.00<br>13 பொது ஆங்கிலம் II |

| ஆகஸ்ட் 20 ஆம் திகதி திங்கட்கிழமை | |
|---|---|
| 8.30 - 11.30<br>41 பௌத்தம் I<br>42 இந்து சமயம் I<br>43 கிறிஸ்தவம் I<br>44 இஸ்லாம் I<br>45 பௌத்த நாகரிகம் I<br>46 இந்து நாகரிகம் I<br>47 இஸ்லாமிய நாகரிகம் I<br>49 கிறிஸ்தவ நாகரிகம் I | 12.30 - 14.30<br>29 தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I |

| ஆகஸ்ட் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை | |
|---|---|
| 8.30 - 11.30<br>73 ஆங்கிலம் I | 12.30 - 15.30<br>25 வரலாறு I |

| ஆகஸ்ட் 22 ஆம் திகதி புதன்கிழமை | |
|---|---|
| 8.30 - 11.30<br>14 குடிசார்த் தொழினுட்பவியல் II<br>15 பொறிமுறைத் தொழினுட்பவியல் II<br>16 மின் இலத்திரன், தகவல் தொழினுட்பவியல் II<br>17 உணவுத் தொழினுட்பவியல் II<br>18 விவசாயத் தொழினுட்பவியல் II<br>19 உயிர்வளத் தொழினுட்பவியல் II<br>74 பாளி II (பகுதி II) | 12.30 - 14.30<br>22 புவியியல் I |

| ஆகஸ்ட் 23 ஆம் திகதி வியாழக்கிழமை | |
|---|---|
| 8.30 - 11.30<br>23 அரசியல் விஞ்ஞானம் II | 12.30 - 15.30<br>73 ஆங்கிலம் II |

| ஆகஸ்ட் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை | |
|---|---|
| 8.30 - 10.30<br>33 கணக்கீடு I<br>84 ஹிந்தி I | 14.00 - 17.00<br>22 புவியியல் III |

| ஆகஸ்ட் 25 ஆம் திகதி சனிக்கிழமை | |
|---|---|
| 8.30 - 11.30<br>41 பௌத்தம் II<br>42 இந்து சமயம் II<br>43 கிறிஸ்தவம் II<br>44 இஸ்லாம் II<br>45 பௌத்த நாகரிகம் II<br>46 இந்து நாகரிகம் II<br>47 இஸ்லாமிய நாகரிகம் II<br>49 கிறிஸ்தவ நாகரிகம் I | 12.30 - 15.30<br>29 தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் II |


| ஆகஸ்ட் 27 ஆம் திகதி திங்கட்கிழமை | |
|---|---|
| 8.30 - 11.30<br>33 கணக்கீடு I<br>84 ஹிந்தி II | 12.30 - 14.30<br>20 தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் I |

| ஆகஸ்ட் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை | |
|---|---|
| 8.30 - 10.30<br>31 வணிகப் புள்ளிவிபரவியல் I<br>8.30 - 11.30<br>57 நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) I<br>58 நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I<br>59 நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) I | 12.30 - 15.30<br>07 கணிதம் I<br>11 உயர் கணிதம் I<br>12.30 - 14.30<br>87 யப்பானிய மொழி I |

| ஆகஸ்ட் 29 ஆம் திகதி புதன்கிழமை | |
|---|---|
| 8.30 - 11.30<br>31 வணிகப் புள்ளிவிபரவியல் II<br>57 நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) II<br>58 நாடகமும் அரங்கியலும் (தமிழ்) II<br>59 நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) II | 12.30 - 15.30<br>07 கணிதம் II<br>11 உயர் கணிதம் II<br>87 யப்பானிய மொழி II |

| ஆகஸ்ட் 30 ஆம் திகதி வியாழக்கிழமை | |
|---|---|
| 8.30 - 11.00<br>12 பொதுச் சாதாரண பரீட்சை | 12.30 - 15.30<br>20 தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் II |

## ICT & GIT மாணவர்களுக்கான வினாத்தாள்



# கல்வி முரசு



(AJ. Nimalrajan)

16 ஆம் பக்கத் தொடர்ச்சி.....

26. ஒரு கணினிச் செயல்நூலில் பயன்படுத்தப்படும் மாறிகள் தொடர்பாகப் பின்வரும் கூற்றுக்களில் பிழையானது எது?
I. மாறி ஒரு பெயர் அடையாளக்காணியை ( Identifier) உடையது.
II. மாறி ஒரு அல்லது பல நினைவக இருப்பிடங்களை குறிப்பிடகின்றது.
III. மாறி தரவு வகையை உடையது
IV. மாறியின் பெறுமானம் மாறாமல் இருக்கின்றது.

27. இடமிருந்து வலமாக எண்கணித செயலிகளின் (Arithmatic Operators) முன்னிகழ்வின் (Procedence) சரியான வரிசைகளை பின்வருவனவற்றில் எது சரியாக வகைகுறிக்கின்றது.
I. +,*,= II. +,*,- III. *,+,/ IV. *,/,+

28. பின்வரும் போலிக் குறிமுறையைக் கருதுக ( Pseudo code)
Start set required Read current is C>R?
Display cold Display Hot End Y N
பாய்ச்சல் கோட்டுப் படத்தில் சில ஆங்கில பிரயோகங்களுக்கான தமிழ் பதங்கள் set required temperatature ® to 26 0C தேவையான வெப்ப நிலை ® 26 0C எனக்கொள்க.
Read current temperatature (c) நடைமுறைவெப்பநிலை C எனக்கொள்க பின்வருவனவற்றில் எது மேற்குறித்த போலிக் குறிமுறையின் ஓர் இயல்தகு வருவிளைவாகும்
I.4,12,3 II.5,2,10 III.5,10,2 IV.4,8,2

29. முறைமை அபிவிருத்தி ஆயள் வட்டத்தை (SDLC) பயன்படுத்தி ஓர் தகவல் முறைமையை விருத்தி செய்யும் போது (Information System) பின்வருவனவற்றில் எது இடமிருந்து வலமாகச் செயற்பாடுகளின் (Activiteis) சரியான தொடரியாகும்(Sequence)?
I. சாத்தியக்கூற்றுக் கற்கை (Feasibility Study) முறைமை வடிவமைப்பு (System Design) முறைமை பகுப்பாய்வு (System Analysis) முறைமையை நடைமுறைப்படுத்தல்
II. முறைமை பகுப்பாய்வு (System Analysis) முறைமையை நடைமுறைப் படுத்தல் முறைமை வடிவமைப்பு (Sysytem Design) சாத்தியக்கூற்றுக் கற்கை
III. சாத்தியக்கூற்றுக் கற்கை முறைமை வடிவமைப்பு முறைமையை நடைமுறைப்படுத்தல் முறைமை பகுப்பாய்வு
IV. சாத்தியக்கூற்றுக் கற்கை முறைமை பகுப்பாய்வு முறைமை வடிவமைப்பு முறைமையை நடைமுறைப்படுத்தல்

30. கணினிப்படுத்தலுக்கு பின்வருவனவற்றுள் எது உகந்ததன்று
I. ஒரு பாடசாலையில் மாணவர் அனுமதிகள்
II. பாடசாலை நூலகம்
III. ஒரு பரீட்சையில் கட்டுரை வகை வினாக்களுக்கு புள்ளி வழங்கள்
IV. விடைத்தாள்களுக்கு புள்ளி வழங்கிய பின்னர் மாணவர் சராசரிகளையும் தரங்களையும் கணித்தல்

31. பின்வரும் செயற்பாடுகளை கருதுக.
A – நூலகத்துக்கு பொறுப்பான ஆசிரியரைப் பேட்டி காணல்
B – நூலகத்தின் வரலாற்றையும் அது 20 ஆண்டுகளுக்கு முன்னர் தாபிக்கப்பட்ட விதத்தையும் விவரிக்கும் ஒரு சஞ்சிகைக் கட்டுரை (ஆவணம்)
C – நூலகம் மாணவர்களினால் எங்கனம் பயன்படுத்தப்படுகின்றது என்பதை அவதானித்தல்
ஒரு பாடசாலைக்கான நூலக முகாமை விருத்தி செய்வதில் உள்ள தேவைகளை சேகரிப்பதற்கு மேலுள்ளவற்றில் எதனை / எவற்றைப் பயன்படுத்தலாம்.
I. A மாத்திரம் II. C மாத்திரம் III. A,C மாத்திரம் IV. மாத்திரம்

32. இணையம், உலகளாவிய வலை (WWW) என்பன தொடர்பான மிகப் பொருத்தமான கூற்றை இனங்காண்க
I. இணையம் (WWW) இன் ஒரு சேவையாகும்
II. இணையத்திற்கும் (WWW) இக்குமிடையே தொடர்பு எதுவுமில்லை
III. இணையமும் (WWW) உம் ஒரே மாதிரியானவை
IV. (WWW) இணையத்தின் ஒரு சேவையாகும்.

33. உரையாடுதல் (chatting) ஒளித்தோற்ற உரையாடல் (Video Chatting) ஒளித்தோற்ற மானாடு (Video Conferencing) ஆகியவற்றுக்கு ஓர் அமர்வை தாபிக்கும் போது பின்வருவனவற்றுள் எது அத்தியாவசியமாகும்?
I. வலைக்காம் (Webcam) II.மின்னஞ்சல் முகவரி( E-mailAddress)
III. இணையத்துக்கான தொடுப்பு IV.ஆள்களப் பெயர் (Domain Name)

34. பின்வருவனவற்றை கருதுக
A – எதிரொலியை சேர்த்தல் B – செவிப்புலதடத்தின் கதியை மாற்றுதல்
C – ஒளித்தோற்ற கிளிப்புக்களை பதிப்பித்தல் (Editing)
மேற்குறித்த விளைவுகளில் எவை பல்லூடகப் பிரயோகங்களில் பயன்படுத்தப்படம் விசேடமாக்கிய செவிப்புல / ஓலிப்பதிப்பித்தல் கருவியில் கிடைக்கத்தக்கன?
I. A,B ஆகியன மாத்தரம் II. A,C ஆகியன மாத்திரம்
III. B,C ஆகியன மாத்திரம் IV. A,B,C ஆகியன எல்லாம்

35. பின்வருவனவற்றை கருதுக
A –வலை மேலோடி (Web Browser) B –வலைச்சேவையகம் (Web Server)
C – IP முகவரி (IP Address) D- வலை கடப்பிட உள்ளடக்கம் (Website content)
மேலுள்ளவற்றில் எவை வலைக்கடப்பிடத்துக்கு இடமளிப்பதற்கு அத்தியாவசியமானவை?
I. A,B,C ஆகியன மாத்திரம் II. B,C,D ஆகியன மாத்திரம்
III. A,B,D ஆகியன மாத்திரம் IV. A,B,C,D ஆகியன எல்லாம்

36. பின்னணி நிறத்தை மஞ்சலாக மாற்றுவதற்கு சரியான HTML குறிமுறை (Code) யாது?
I. <body background-'yellow'>
II. <background>yellow</background>
III. < bodybackground = "yellow">
IV. <body style = "background –color:yellow">

37. ஒரு மீயினையை (Hyperlink) உருவாக்குவதற்குரிய சரியான HTML குறிமுறை (Code) யாது?
I. <a url=http://DOEweb.com >DOEweb</a>
II. <a>http:DOEweb.com</a>
III. A Href = "http://DOEweb.com">DOEweb</a>
IV. <a name = "http://DOEweb.com">DOEweb</a>

38. HTML ,y; <br> Tag இன் வருவிளைவு யாது?
I. வரிமுறிப்பை செருகுதல் (Line Breaking)
II. பக்க முறிப்பை செருகுதல் (Page Break)
III. அடைப்புக் குறியை செருகுதல் (Bracket)
IV. பிரிவு முறிப்பை செருகுதல்


39. பிறழ்பொருள் (Malware) பற்றிய பின்வரும் கூற்றுக்களை கருதுக
A – முதல் பார்வையில் Trojan horse பயன்படும் மென்பொருளாக தோன்றுகின்ற போதிலும் ஒரு தடவை நிறுவப்பட்டதும் அல்லது கணினியில் ஓடவிடப்பட்டதும் உண்மைச் சேதத்தை ஏற்படுத்தும்
B – ஒரு புழு (Worm) வலையமைப்பில் தானாக பெருகி மனிதச் செயற்பாடு எதுவுமின்றிச் செல்லும் ஆற்றல் உடையது.
C – கணினி நச்சு நிரல் ( Virus ) ஒரு செய்நிரலுடன் அல்லது கோப்புடன் தானாக இணைந்து ஒரு கணினியிலிருந்து வேறொரு கணினிக்கு பரந்து சென்று, செல்லும் போது தொற்றுக்களை விட்டுவிடும்.
மேற்குறித்தவற்றில் சரியானது / சரியானவை?
I. A மாத்திரம் II. B மாத்தரம் III. A,B மாத்தரம் IV. A,B,C ஆகியன மாத்திரம்

40. பின்வருவனவற்றை கருதுக
A – உத்தரவுச் சீட்டின்றி மென்பொருளை பயன்படுத்துபவர்
B – வேறொருவரின் உடன்பதி (Login) விவரங்களை பயன்படுத்துபவர்
C – வாடிக்கையாளரின் தகவல்களை வாடிக்கையாளரின் சம்மதமின்றி ஏனையோர்க்கு வழங்குபவர்
D – நச்சு நிரல்களை உருவாக்கி ஏனையோரின் கணினிகளுக்கு பரப்புபவர்
மேற்குறித்தவற்றில் எவை ஒழுக்கமற்றவையாக கருதப்படலாம்
I. A,B ஆகியன மாத்திரம் II. A,B,D ஆகியன மாத்திரம்
III. B,C,D ஆகியன மாத்திரம் IV. A,B,C,D ஆகியன எல்லாம்


## பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. a) i. கணினியின் தோற்றம் பற்றி கணிணி தலைமுறை தொடர்பாகவும். அவற்றின் தொழில்நுட்பமாற்றம் தொடர்பாகவும் விளக்குக.
ii. கணினியின் தோற்றத்திற்கும் அவற்றினால் கிடைக்கும் அனுகூலங்களிற்கும் transistor கண்டுபிடிப்பு எவ்வாறு பங்களித்தது என்பதை விளக்குக.
b) பின்வரும் வரிப்படம் Von Neumann இன் கட்டமைப்பை காட்டுகின்றது. A,B,C,D என குறிப்பிடப்படும் பகுதிகளை பெயரிட்டு அவற்றின் தொழிற்பாடுகள் ஒவ்வொன்றையும் விளக்குக.





c) i. பின்வரும் தர்க்க சுற்றுக்குரிய உண்மை அட்டவணையை (truth table) P, Q, R உள்ளீடுகளின் உதவியுடன் வரைக.
ii. உண்மை அட்டவணையை பயன்படுத்தி வெளியீடு Z ஐக் காண்க




2. வர்த்தகம், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் எனும் நான்கு பாடங்களுக்கு அமிலா, கபிலா, பாதிமா, ராஜ் என்ற நான்கு மாணவர்கள் பெற்ற புள்ளிகள் உரு 5இல் உள்ள மாதிரி விரிதாளில் (Spreadsheet) காணப்படுகின்றன.
(I). அமிலா பெற்ற மொத்தப் புள்ளிகளை கணிப்பதற்கு செயல்களை (Function) பயன்படுத்தாமல் களம் C8 இக்குத் தேவையான சூத்திரத்தை எழுதுக.
(II). அமிலாவின் மொத்தப் புள்ளிகளை கணிப்பதற்கு C8 இல் பதியப்படும் சூத்திரமானது D8 இல் கபிலாவின் மொத்தப் புள்ளிகளைக் கணிப்பதற்கு பிரதி செய்யப்படுமெனின், சூத்திரம் D8 இல் எவ்வாறு தோன்றும்?
(III).கலம் F8 இல் செயல் "SUM" ஐ பயன்படுத்துவதன் மூலம் ராஜ் பெற்ற மொத்தப் புள்ளிகளை கணிப்பதற்கான சூத்திரத்தை எழுதுக.
(IV).விரிதாள் மென்பொருளில் கிடைக்கத்தக்க செயல்களை பயன்படுத்துவதன் மூலம் கலம் G4 இல் வர்த்தகத்திற்காக மாணவர்கள் பெற்ற சராசரிப் புள்ளிகளை கணிப்பதற்கான சூத்திரத்தை எழுதுக
(V). வகுப்பாசிரியர் நான்கு பாடங்களில் இரு மாணவர்களின் வினையாற்றலை ஒரு தனி வரைபடத்தில் (Chart) ஒப்பிட விரும்புகிறார். இந்நோக்கத்துக்காக விரிதாள் மென்பொருளில் கிடைக்கத்தக்க இரு வரைபட வகைகளை தருக.

3) I) கணினி இடத்தியல் வலையமைப்பு (Types of Network topology) வகைகள் பட்டியற்படுத்துக?
II) அவற்றின் இரண்டினை படத்துடன் விளக்குக?
III) வலையமைப்பின் பிரதான வகைகள் (Types of networks) எவை?
IV) வலையமைப்பினால் (Network) நாம் பெறும் நன்மை 3 தருக?

## ICT & GIT மாணவர்களுக்கான வினாத்தாள்



# கல்வி முரசு

(AJ. Nimalrajan)




1. வெற்றுக் குழாய்கள் திரான்ஸிஸ்டர்களினால் பதிலிடப்பட்டும் பின்னர் திரான்ஸிஸ்டர் நுண்முறை வழியாக்கிகளினால் பதிலிடப்பட்டும் இருந்த மையால் கணினிகளின் .......... A .......... குறைந்துள்ளது. பின்வரும் பதங்களில் A இற்கு பொருத்தமானது?
I.ஆற்றல் II.பருமன் IIIநம்பகத்தகவு IV.வினைதிறன்

2. .......... B ..........ஆனது தகவல் முறைமைகளினால் .......... C .......... ஆக முறைவழியாக்கப்பட்டுள்ளது. பின்வரும் பதச்சோடிகளில் எது BC ஆகியவற்றுக்கு பொருத்தமானது?
I.தகவல், தரவு II.தரவு, தகவல்
III.தரவு, அறிவுறுத்தல்கள் IV.அறிவுறுத்தல்கள், தரவு

3. பின்வரும் கணினிச் சாதனங்களை கருதுக
A.விசைப்பலகை B.வருடி C.அச்சுப் பொறி D.ஒலிபெருக்கி
மேற்குறித்தவற்றில் எவை கணினியின் உள்ளீட்டுச் சாதனங்களாக பயன்படுத்தலாம்?
I. A, B ஆகியன II. A, C ஆகியன III. C, D ஆகியன IV. A, B, C, D ஆகிய எல்லாம்

4. பின்வரும் கூற்றுக்களை கருதுக
A. தற்போக்கு பெறுவழி நினைவகம் அழிதகு நினைவகமாகும்
B. வன்வட்டு துணைத்தேக்க சாதனமாகும்
C. நெகிழ்வட்டு இருவட்டிலும் பார்க்க கூடுதலான தரவுகளை தேக்கி வைக்கின்றது.மேற்குறித்தவற்றில் சரியானது / சரியானவை
I. A மாத்திரம் II. B மாத்திரம் III. A,B ஆகியன IV. B,C ஆகியன

5. உரு 1இல் இருந்து A, B, C ஆகியவற்றை இனங்காண்க



I. A = வலுக்குதை B = PS/2 துறை C = USB துறை
II. A = வலுக்குதை B = தொடர்துறை C = PS/2 துறை
III. A = வலுக்குதை B = சமாந்தரத்துறை C = தொடர்துறை
IV. A = சமாந்தரத்துறை B = தொடர்துறை C = USB துறை

6. நினைவகத்தின் 2GB எதற்குச் சமனானது
I. 2048 KB II. 211MB III. 210MB IV. 1024MB

7. துவிதம் 11001 இன் எண்மச் சமவலு யாது?
I. 21 II. 31 III. 37 IV. 41

8. பின்வருவனவற்றில் மிகப் பெரியது யாது?
I. 10011002 II. 10010102 III. 10101012 IV. 11000002

9. ASCII குறிமுறையில் (Code) வரியுரு "C" ஆனது 10000112 என வகைக் குறிக்கப்படுமெனின் வரியுரு "A" இக்கு சமனான ASCII குறிமுறை யாது?
I. 10000012 II. 10000102 III. 10000002 IV. 10001002

10. ஓர் ஆசிரியர் விசைப்பலகையை பயப்படுத்தி வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை 35 என பதிவு செய்கின்றார்.இவ்வெண் தற்போது கணினியின் பெறுவழி நினைவகத்தில் துவித வடிவில் சேமிக்கப்படுகின்றது. RAM இல் தேக்கி வைக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை?
I.1000102 II.1001102 III.1001112 IV.1000112

11. உரு 2இல் தரப்பட்ட தருக்கச் சுற்றின் வருவிளைவு எனின் A, B ஆகியவற்றின் பெருமானங்கள் முறையே
I. 0,0 II. 1,0 III. 0,1 IV. 1,1

12. ஒரு மாணவன் தனது காலை உணவிற்காக பருப்புக் கறியுடன் இடியப்பத்தையோ பாணையோ தெரிந்தெடுக்கலாம். இக்காட்சியை பின்வரும் தருக்கச் செய்பணிகளில் எது சரியாக வகைகுறிக்கின்றது.
I. AND ஐப் பின்தொடர்ந்து OR II. OR ஐப் பின்தொடர்ந்து AND
III. OR ஐப் பின்தொடர்ந்து OR IV. AND ஐப் பின்தொடர்ந்து AND

13. பின்வரும் கொள்பணிகளை கருதுக
A – நச்சுநிரல்களில் இருந்து கணினிகளை பாதுகாத்தல்
B – தேக்கச் சாதனங்களில் கோப்புக்களினதும் அடைவுகளினதும் தடத்தை (உறைகள்) வைத்திருத்தல்
C – வட்டு இயக்கிகள், அச்சுப் பொறிகள் போன்ற புறவட்டச் சாதனங்களை கட்டுப்படுத்தல்
D – வரைவியல் வடிவமைப்புக்கு வசதிகளை ஏற்படுத்தல்
மேற்குறித்தவற்றில் எவை பணிசெய்முறையின் கொள்பணிகளாகும்
I. A,B ஆகியன II. B,C ஆகியன
III. A,B,C ஆகியன IV. A,B,C,D ஆகியன எல்லாம்

14. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருள் பற்றிய பின்வரும் கூற்றுக்களை கருதுக
A – அது வரியுருக்களை வெவ்வேறு பருமன்களிலும் நிறங்களிலும் வடிவமைப்பதை அனுமதிக்கின்றது.
B – அது ஓர் ஆவணத்தில் வடிவங்களையும் வரிப்படங்களையும் வரைவதற்கு அனுமதிக்கின்றது.
C – அது இலக்க ஒளித்தோற்ற செவிப்புல கோப்புக்களை பதிப்பிப்பதற்கு அனுமதிக்கின்றது.
மேற்குறித்தவற்றில் சரியானவை / சரியானது
I.A மாத்திரம் II.A,B ஆகியன III.A,B,C ஆகியன IV.மேற்குறித்த எதுவுமன்று

15. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருள் பற்றிய பின்வரும் கூற்றுக்களை கருதுக
A – அது உள்ள ஆவணத்தின் Ceylon எனும் சொல்லின் எல்லா நிகழ்வுகளையும் Sri lanka எனும் இருசொற்களில் பதிலிடலாம்
B – அது ஓர் ஆவணத்தின் வலது ஓரத்தின் வழியே வாசகத்தை நேரப்படுத்தலாம்
C – அது ஓர் ஆவணத்தின் அடியில் பக்க எண்களை மாத்திரம் புகுத்தலாம்
மேற்குறித்தவற்றில் சரியானவை / சரியானது
I.A மாத்திரம் II.B மாத்திரம் III.A,B மாத்திரம் IV. A,B,C ஆகியன

16. பின்வருவனவற்றை கருதுக
A – E$5$ B - $E$5 C- $5E$ D – E$5
மேற்குறித்தவற்றில் எவை ஒரு விரிதாளில் உள்ள கல முகவரிகளின் சரியான வடிவம் வடிவங்கள்
I. B மாத்திரம் II. A,C ஆகியன
III. B,D ஆகியன IV. மேற்குறித்தவற்றில் எதுவுமன்று

17. விரிதாளின் ஒரு நிரையினதும் ஒரு நிரலினதும் இடைவெட்டுக்கு வழங்கும் பெயர்
I. பணித்தாள் II. அடையாள முகப்பு III. கலம் IV. சூத்திரம்

18. உரு 3 இல் கலம் D2 இல் உள்ள சூத்திரம் =$B$2+C2 ஆக அமைந்தும் அது களம் D3 யினுள்ளே பிரதி செய்யப்பட்டும் இருப்பின் வருவிளைவு யாது?
I.9 II.10 III.11 IV.12

19. இலங்கை தொடர்பாக நீர் ஒரு நிகழ்த்துகையை (Presentation) தயார் செய்கிறீர் எனக் கற்பனை செய்க நிகழ்த்துகை மென்பொருளை பயன்படுத்தி நீர் செய்யும் நிகழ்த்துகையில் பின்வருவனவற்றில் எவற்றை உள்ளடக்கலாம்.
A - இலங்கையின் படம்
B – தேசிய கீதத்தின் செவிப்புல கிளிப்
C – பயனர்களை www.gov.lk க்கு வழிப்படுத்தும் மீயினை (Hyperlink)
I. A,B ஆகியன
II. B,C ஆகியன
III. A,B,C ஆகியன
IV. மேற்குறிப்பிட்டவற்றில் எதுவுமன்று

20. ஒரு தரவுத்தளம் பாடசாலை ஒன்றில் உள்ள மாணவர்கள் பற்றிய தரவுகளை கொண்டுள்ள ஓர் அட்டவணையை உடையது. அட்டவணையில் ஒரு மாணவன் தொடர்பான தரவு
I. புலம் (Field)ஆகும் II. பதிவு (Record) ஆகும்
III. படிவம் (Form)ஆகும் IV. வினவல் (quary) ஆகும்

21. மாணவர்கள் பற்றிய தரவுகளை தேக்கி வைப்பதில் ஒரு தரவுத்தள அட்டவணையில் முதன்மைச்சாவியாக பின்வருவனவற்றில் எது பயன்படுத்தப்படலாம்?
I. பிறந்த திகதி II.பெயர் (Surname)
III. வகுப்பு IV.மாணவர் அனுமதி எண்

22. தொடர்புத் தரவுத் தளங்கள் பற்றிய பின்வரும் கூற்றுக்களை கருதுக.
A - இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தரவுத்தளங்களுக்கிடையே உள்ள சேர்மானம் தொடர்புடையதாகும்
B – தொடர்புத் தளத்தில் உள்ள தொடர்புடைமைகளின் வகைகளில் ஒன்றுக்கொன்றான ஒன்றுக்குப்பலவான பலவுக்குப் பலவான எனும் தொடர்பமைவுகள் காணப்படும்.
C – ஒரு தொடர்புத் தரவுத்தளம் மடங்கு அட்டவணைகளை கொண்டிருக்கலாம்.
மேலுள்ளவற்றில் சரியானது / சரியானவை
I. A மாத்திரம் II.C மாத்திரம்
III. B,C ஆகியன IV. A,B,C ஆகிய எல்லாம்


23. உரு 4இல் உள்ள பாய்ச்சல் கோட்டுப் படத்தை பயன்படுத்தி 23 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு விடை தருக முறையே 280C, 270C, 260C ஆகியன நடைமுறை வெப்பநிலைகளாக தரப்பட்டிருக்குமெனின் பாய்ச்சல் கோட்டுப் படத்தின் வரும் விளைவுகள் யாவை?
I. குளிர்,குளிர்,குளிர் II. வெப்பம்,குளிர்,குளிர்
III வெப்பம், வெப்பம்,குளிர் IV. வெப்பம், வெப்பம், வெப்பம்,

24. பாய்ச்சற்கோட்டுப் படத்தை கணினி செய்நிரலாக மாற்றுவதற்கு பின்வரும் கட்டுப்பாட்டுக்கட்டமைப்புக்களை எவை தேவைப்படும்
A – if-then construct B- if then – else constuct
C – for loop D – Do-while loop
I. A மாத்திரம் II. B மாத்திரம்
III. A,C ஆகியன IV. B,D ஆகிய எல்லாம்

25. தரப்பட்டுள்ள கோட்டுப்படத்தில் C,R எனும் மாறிகளுக்குப் பின்வரும் தரவு வகைகளில் எது உகந்தது?
I. இழை II. மெய் III. பூல IV. நாணயம்

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை

## அப்துல் கலாம் அறிவிப்பு



13 ஆவது ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிட விரும்பவில்லை என்று முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாகஅவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தற்போதையஅரசியல் சூழ் நிலைகளின் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தமது மனச்சாட்சி இடம் கொடுக்கவில்லை என்று கூறி யுள்ளார்.

மேலும் தாம் போட்டியிட விருப்பம் தெரிவித்த அனை வருக்கும் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் கலாம் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அப்துல்கலாம் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்று பாஜக மூத்த தலைவர் அத்வானி கலாமிடம் முன்று முறை தொலை பேசியில் பேசியிருந்தார். மமதா பானர்ஜியும் தொலைபேசியில் தொடர்பு கொண்டிருந்தார். பாஜகவின் குல்கர்னி நேரில் சென்று கலாமை சந்தித்துப் பேசினார்.

இருப்பினும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒருமித்து கலாமை ஆதரிக்காததே அவர் போட்டியிடாமல் இருக்கக் காரணம் என்று கூறப்படுகிறது

இதேவேளை ஜனாதபதி தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று அப்துல் கலாம் அறிவித்துள்ளது வருத் தமளிக்கிறது என்று திரிணமூல் காங்கிரஸ் தலைவரும், மேற்கு வங்க முதல்வருமான மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

# 5 செ.மீற்றரில் திருக்குறள் புத்தகம் தமிழக இளைஞர் எழுதி சாதனை



கின்னஸ் சாதனை முயற்சிக்காக கண்ணாடி பிம்ப எழுத் துக்களால் 5 செ.மீ அளவில் திருக்குறள் புத்தகத்தை தமிழக வாலிபர் ஒருவர் எழுதியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு தண்டரை கால்வாய் வீதியைச் சேர்ந்த பி.ஜெயபிரகாஷ் (வயது - 38) பைனான்ஸ் நிறுவனம் நடத்தி வருகிறார். படித்த பட்ட தாரியான இவர், ஓவி யங்கள் வரைவதில் ஆர்வமுள்ளவர். கின்னஸ் சாதனைக்காக பல்வேறு முயற்சிகளை செய்து வருகிறார்.


1,330 திருக்குறள்களையும் 5 செ.மீ உயரம், 4 செ.மீ அகலம் கொண்ட சிறிய புத்தகத்தில் கண்ணாடி பிம்ப எழுத்துக்களால் எழுதியுள்ளார். லென்ஸ் கண்ணாடி மூலம் மட்டுமே பார்க்கக் கூடிய மிகச்சிறிய அளவில் எழுத்துக்கள் அமைந்துள்ளன.

இது குறித்து ஜெயபிரகாஷ் கூறுகையில், கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெறுவதற்காக, பல்வேறு முயற்சிகளை தொடர்ந்து செய்து வருகிறேன். எழுத்துக்கள் கண்ணாடியில் எவ்வாறு தலைகீழாக பிரதிபலிக்குமோ, அதைப்போல நான் நேரடியாக எழுதிப் பழகினேன்.

தற்போது, சரளமாக தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கண்ணாடி பிம்ப எழுத்துக்களை எழுத முடிகிறது. 3 மாத முயற்சியில் மிகச்சிறிய திருக்குறள் புத்தகத்தை உருவாக்கி உள்ளேன். இதைத்தொடர்ந்து, ஆங்கிலத்தில் திருக்குறள் புத்தகத்தை கண்ணாடி பிம்ப எழுத்துக்களில் எழுத இருக்கிறேன் என்றார்.

இந்தியச் செய்திகள்

# ஊழல் குற்றச்சாட்டுக்கள் தவறு என்கின்றார் பிரணாப்



இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே சர் கிரீக் எல்லை பகிர்வு தொடர்பான 12ஆவது சுற்று பேச்சுவார்த்தை தலைநகர் டில்லியில் நடைபெற்றது. இதில் இந்தியா சார்பில் ஜெனரல் சுப்பா ராவ் தலைமையிலான அதிகாரிகளும் பாகிஸ்தான் சார்பில் ரியர் அட்மிரல் பருக் அகமது தலைமையி லான அதிகாரிகளும் கலந்து கொண்டதைக் காணலாம்.

தனக்கெதிரான ஊழல் குற்றச்சாட்டு தவறானது, நியாயமற்றது, சுயலாபம் தேடும் செயல் உள்நோக்கம் கொண்டது என்று, இந்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்..

அன்னா ஹசாரே அணியின் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு, பதில் அளித்த அவர் எழுதியுள்ள கடித விவரத்திலேயே இந்தவிடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தீய நோக்கத்துடன், எனக்கெதிராக, தவறான குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன. இதன் மூலம், உண்மைகள் மறைக்கப்படுகின்றன. இதுபோன்ற குற்றச்சாட்டுகளை தெரிவித்ததன் மூலம், அன்னா ஹசாரே அணியினர், ஒழுக்க பண்புகளை மீறியுள்ளார்கள் என்றும் பிரணாப் முகர்ஜி குற்றம்சுமத்தியுள்ளார்.

தனக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பாக, சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

குறித்த விசாரணையில், முறைகேடுகள் எதுவும் இடம்பெறவில்லை என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்படை இரகசியங்கள் கசிந்த வழக்கில், வான்படை அதிகாரி ஒருவரும், கடற்படை அதிகாரிகள் மூன்று பேரும், பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பாக, அப்போது இராணுவ அமைச்சராக இருந்த தான், சி.பி.ஐ., விசாரணைக்கும் . உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்..

# வீரபாண்டி ஆறுமுகம் மீது பாய்ந்தது குண்டர் சட்டம்



சேலம் மாவட்டத் தி.மு.க செயலாளரும் முன்னாள் அமைச்சருமான வீரபாண்டி ஆறுமுகம் மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

· சேலம் அங்கம்மாள் கொலனியில் உள்ள குடிசைகளுக்கு தீ வைத்ததாக தி.மு.க முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் கைது செய்யப்பட்டு இருந்த நிலையில் அவர் மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காவல்துறை வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன

இதேவேளை வீரபாண்டி ஆறுமுகம் மீது குண்டர் சட்டம் பாய்ந்ததை அடுத்து திமுக ஜூன் 22 இல் அவசர செயற்குழுவைக் கூட்டி விவாதிக்க உள்ளது.

# பிணைவழங்க இலஞ்சம் சி.பி.ஐ நீதிபதி கைது



கர்நாடக முன்னாள் அமைச்சர் ஜனார்த்தன ரெட்டிக்கு பிணை வழங்க ரூபா 6 கோடி இலஞ்சம் பெற்ற வழக்கில் சி.பி.ஐ. நீதிமன்ற நீதிபதி பட்டாபி ராமராவை பொலிஸார் நேற்று கைது செய்தனர்.

சுரங்க முறைகேடு தொடர்பாக பா.ஜ.க.வைச் சேர்ந்த கர்நாடக முன்னாள் அமைச்சர் ஜனார்த்தன ரெட்டி கைது செய்யப்பட்டு சிறையில் அடக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு ஹைதராபாத் சி.பி.ஐ நீதிமன்றத்தில் நீதிபதி பட்டாபி ராமராவ் முன்னிலையில் நடந்து வந்தது. இந்த நிலையில் தன்னை பிணையில் விடுவிக்க கோரி ஜனார்த்தன ரெட்டி, நீதிபதி பட்டாபிக்கு ரூபா6 கோடி இலஞ்சம் கொடுத்துள்ளார்.

இது தொடர்பான புகாரின் பேரில் நீதிபதி பட்டாபி ராமராவ் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டார். இந்தநிலையில், நீதிபதி பட்டாபியை பொலிசார் நேற்று கைது செய்தனர்

# மத்திய அமைச்சரவையிலிருந்து திரிணாமுல் காங்கிரஸ் விலகும்?

(புதுடில்லி)

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் காங்கிரஸ் கட்சியுடன் மேற்குவங்க கட்சியான திரிணாமுல் காங்கிரஸ் கட்சியும் அங்கம் வகித்து வருகிறது. ஜனாதிபதி தேர்தலில் இரு கட்சிகளுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, மத்திய அமைச்சரவையில் இருந்து இராஜினாமா செய்ய தயாராக இருப்பதாக திரிணமுல் காங்கிரஸ் கட்சி கூறியுள்ளது.

இது குறித்து அக்கட்சி சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், அது போன்ற சூழ்நிலை ஏற்பட்டால், அப்போதுஅதுபற்றிபரிசீலனைசெய்வோம். மத்திய அரசை கவிழச்செய்யும் நடவடிக்கையில் ஈடுபடவில்லை. ஜனாதிபதி பதவிக்கு அப்துல் கலாம்தான் மிகவும் பொருத்தமானவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த மத்திய அமைச்சர்களும், எம்.பி.க்களும் தங்களது இராஜினாமா கடிதத்தை கட்சி தலைவர் மம்தாவிடம் கொடுத்ததாக தகவல் வெளி யானது.

இதனையடுத்து ஆளும் காங்கிரஸ் கூட்டணியிலிருந்து திரிணாமுல் காங்கிரஸ் கட்சி விலகும் என பரபரப்பாக பேசப்பட்டது. ஆனால் இதனை திரிணாமுல் காங்கிரஸ் கட்சி மறுத்துள்ளது.

## தோல்வியே...

05 ஆம் பக்க தொடர்ச்சி....

அரசாங்கத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் இது நெருக்கடியைக் கொடுத்துமிருக்கும்.

மாறாக, இங்கே கோபத்தையும் வெறுப்பையும் வெளிக்காட்டுவதைத் தவிர, அதற்கப்பாலான அரசியல் விளைவுகள் அதிகம் ஏற்படவில்லை. கோபத்தையும் வெறுப்பையும் உமிழ்வதால் மட்டும் நன்மைகள் விளைந்து விடப்போவதில்லை என்பதை மீண்டும் குறிப்பிட வேண்டியுள்ளது.

உணர்ச்சிகரமான அரசியலில் கட்டப்படும் எத்தகைய பிரமாண்டமான எழுச்சியையும் அறிவுபூர்வமான அணுகுமுறை எளிதில் உடைத்துத் தகர்த்து விடும்.

உணர்ச்சிகரமான அரசியல் எழுச்சிகள் பொறிமுறைகளைப் பற்றிச் சிந்திப்பது குறைவு. அவற்றின் அடித்தளம் எப்போதும் அறிவுசார் நடவடிக்கைக்கு எதிர்ப்புறத்தில், வெகுளித்தனமும் அறியாமையும் நிறைந்ததாகவே உள்ளது. விவேகம், சாதுரியம், நிதானம், அறம்பற்றிய விழிப்புணர்வு, ஜனநாயக விழுமியங்கள், உலகப் போக்கு, நீடித்த வெற்றி, யதார்த்தம் போன்றவற்றைப் பற்றி உணர்ச்சி மையத்தில் இயங்குவோர் சிந்திப்பது குறைவு., உணர்ச்சியின் திரைகள் இவற்றை மறைத்து விடுகின்றன.

இதை எத்தனை தடவைதான் படித்தாலும் தமிழரின் சிந்தனைக்கு இந்த ஒளி புலப்படுவதேயில்லை.

# சிரியாவில் இடம்பெற்றுவரும் வன்முறைகளை நிறுத்த வேண்டும்

## - அமெரிக்கா, ரஷ்யா அறிவிப்பு



(பிரேசில்)

சிரியாவில் இடம்பெற்று வரும் வன்முறைகள் நிறுத் தப்பட வேண்டுமெனஅமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் கூட்டாக கோரிக்கை விடுத்துள் ளன.

அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமா மற்றும் ரஷ்ய ஜனாதி பதி விளாடிமிர்புடின் ஆகியோ ருக்கு இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது சிரிய விவ காரம் குறித்து கவனம்செலுத்தப் பட்டுள்ளது.

சிரிய மக்கள் தமது எதிர் காலத்தை தீர்மானிக்க வேண்டு மென இரு நாட்டுத்தலைவர் களும் தெரிவித்துள்ளனர்.

ஜீ20 மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கள் இவ் வாறு சந்தித்துபேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இரு நாடுகளினதும் தலைவர களும் கூட்டாக இணைந்து வெளியிட்டுள்ள ஊடகஅறிக் கையில் இந்த விடயம் குறிப் பிடப்பட்டுள்ளது.

சிரியாவிற்கு எதிராக ஐக் கிய நாடுகள் பாதுகாப்புப் பேர வையில்அமெரிக்கா நிறை வேற்ற முயற்சித்த தீர்மானங் களை ரஷ்யாவும், சீனாவும் தடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அண்மையில் சிரியாவில் இடம்பெற்ற வன் முறைச் சம்பவங்களில் 52 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் சிரியாவில் இடம்பெற்று வரும் வன்முறை களை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இரு நாட்டுத் தலைவர்களும் வலியு றுத்தியுள்ளனர்.

# தேவாலயங்கள் மீதான தாக்குதல்கள் அதிகரிப்பு



நைஜீரியாவில் தேவாலயங்கள் மீதான தீவிரவாதிகளின் தாக்கு தல்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது.

கடுனா, சரியா போன்ற பகுதிகளில் அமைந்துள்ள 3தேவால யங்கள மீது சிறிய இடைவெளிகளில் அடுத்தடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 50 பேர் பலியானதுடன் 120 பேர் வரை படுகாயம் அடைந்துள்ளதாக சார்வ தேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது

போகோ ஹரம் என்னும் இஸ்லாமிய தீவிரவாத இயக்கம் இத்தாக் குதல்களுக்குப் பொறுப்பேற்றுள்ளது.

தனி இஸ்லாமிய மாநிலம் கோரி போகோ ஹரம் இயக்கத்தினர் நைஜீரியாவின் பொது இடங்களிலும், தேவாலயங்களிலும் அண்மைக் காலமாக தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

தனி மாநிலம் ஏற்படுத்தித் தராத காரணத்துக்காக பல அரசியல் வாதிகள் மற்றும் முஸ்லிம் மதத்தலைவர்களை போகோ ஹரம் இயக் கத்தினர் கொன்று வருகின்றனர்.

மொத்தம் 160 மில்லியன் மக்கள் வாழும் நைஜீரியாவின் வடபகுதியில் முஸ்லிம்களும், தென்பகுதியில் கிறிஸ்தவர்களும் அதிகமாக வாழ்ந்து வருவதால் அவர்களிடையே பிளவு ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# வெற்றிகரமாக ஆய்வு கூடத்தை சென்றடைந்த சீன விண்கலம்



பூமியில் இருந்து 343 கி.மீ தொலைவில் பறந்து கொண்டிருக்கும் டியான்காங் 1 என்ற ஆய்வு கூடத்திற்கு சீனா அனுப்பிய விண் கலம் வெற்றிகரமாக சென்றடைந்தது.

இந்த விண்கலத்தில் .லியூ யாங் என்ற பெண் உட்பட 3 விஞ் ஞானிகள் சென்றனர். விண்வெளிக்குச் சென்றுள்ள முதல் சீன பெண்மணி என்ற பெருமையை லியூ பெற்றுள்ளார்.

அமெரிக்கா மற்றும் ரஷ்யாவைப் போன்று விண்வெளியில் ஆய்வு மையம் அமைக்கும் பணியில் சீனா ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில் அந்த ஆய்வு மையத்தில் சில சோதனை மேற் கொள்ள லியூ யாங்(வயது 33) என்ற பெண் விஞ்ஞானி, ஜிங் ஹைபெங்(வயது 45) மற்றும் லியூ வாங்(வயது 43) ஆகிய 3 விஞ்ஞானிகள் அடங்கிய விண்கலமான ஷென்ஷு 9 வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

அது பூமியில் இருந்து 343 கிமீ தொலைவில் பறந்து கொண் டிருக்கும் டியான்காங் 1 என்ற ஆய்வு மையத்தை சென்றடைந்தது

உலகச் செய்திகள்

# நான்கு இலட்சம் டொலருக்கு நெப்போலியன் கடிதம் விற்பனை

(பாரிஸ்)

உலகின் புகழ்பெற்ற போர் வீரரும், சக்கரவர்த்தியுமான நெப்போலியன் ஆங்கில மொழி யில் எழுதிய கடிதமொன்று ஏலத் தில் விற்பனை செய்யப்பட்டுள் ளது.

400,000 அமெரிக்க டொலர் களுக்கு இந்தக்கடிதம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.


எதிர்பார்க்கப்பட்ட விலையை விடவும் ஐந்து மடங்கு அதிக மாக, கடிதம் விற்பனை செய்யப் பட்டதாக பாரிஸின் Osenat என்ற ஏலவிற்பனை நிலையம் தெரி வித்துள்ளது.

1816 ஆம் ஆண்டில் நெப் போலியன் இந்தக் கடிதத்தை எழுதியுள்ளார்.

தென் அத்திலாந்திக் தீவான Saint Helenaவில் தலைமறை வாகியிருந்த காலத்தில் ஆங்கி லம் கற்றுக்கொண்ட நெப்போலி யன், இந்தக் கடிதத்தை எழுதி யுள்ளார்.

1815ஆம் ஆண்டு Waterloo போரில் தோல்வியடைந்த தனைத் தொடர்ந்து நெப்போலி யன் தலைமறைவாக வாழ்ந்து வந்தார்.

ஒரு பக்கக் கடிதம் 1816 மார்ச் 09 என திகதியிடப்பட்



டுள்ளது.

இந்தக் கடிதத்தில் பல்வேறு இலக்கண வழுக்கள் காணப்படு கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஏழு நாட்களில் கப்பல் ந[illegible] கூரமிடும் என்பதற்கு ஏழு நாட் களில் அவர் இங்கு இறங்கு வார் என நெப்போலியன் ஆங் கிலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# காஸா பகுதியிலுள்ள நீர் பருகுவதற்கு உகந்ததல்ல



காஸா பிராந்திய நீர் பருகு வதற்கு பொருத்தமானதல்ல என புதிய ஆய்வுகள் தெரி விக்கின்றன.

இரசாயனப்பொருட்கள், மனித கழிவு போன்றன காஸா பிராந் திய நீர் நிலைகளில் கலந்திருப் பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்த நீரைப் பருகு வது பாரிய சுகாதாரக் கேடு களை ஏற்படுத்தக் கூடுமென சுட்டிக்காட்டப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் பிரதேசத்தில் வயிற்றோட்டம் ஏற்பட்ட சிறுவர் சிறுமியரின் எண் ணிக்கை இரட்டிப்பாக உயர் வடைந்துள்ளதாக தன்னார்வ தொண்டு நிறுவனமொன்று சுட் டிக்காட்டியுள்ளது.

பலஸ்தீன இஸ்ரேல் முறுகல் நிலைமையினால் சில முக்கிய சுகாதார வசதிகளை ஏற்படுத் திக் கொள்வதில் காஸா பகுதி மக்கள் நெருக்கடிகளை எதிர் நோக்கி வருகின்றனர்.

பிரதான நீர் நிலைகளில் நைட்ரைட் என்னும் இரசாயனத் தின் செறிவு மிகவும் அதிகமாகக் காணப்படுவதாக தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை,காஸா நிலப் பரப்பிற்கு பொருட்களை எடுத் துச் செல்வது தொடர்பிலான தடை களை தளர்த்தியுள்ளதாக இஸ் ரேல் அறிவித்துள்ளது.

எனினும், இந்தத் தளர்வு போது மானதல்ல என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

காஸா நிலப்பரப்பு மக்கள் பல்வேறு அடிப்படை தேவை களின்றி அவதியுறுவதாகவும், பூரணமாக தடைகள் தளர்த்தப் பட்டால் பொருட்களை சீராக விநி யோகம் செய்ய முடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்

# சவுதி இளவரசராக சல்மான் நியமனம்




(றியாத்)

சவுதி அரேபியாவின் இளவரசர் நயிப்பின் அப்துல் ஆசிஸ் கடந்த 16ஆம் திகதி மரண மடைந்தார்.

இதனையடுத்து சவுதி யின் பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்த சல் மான் பின் அப்துல் அஜிஸ்(வயது 76) புதிய இளவரசராக பட்டம் சூட்டப்பட்டுள்ளார்.

இது குறித்து அவரது பெயர் நேற்று முன்தினம் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதுமட்டுமல்லாமல் சல்மான் துணை பிரதமராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்

# சீனித் தொழிற்சாலை அபிவிருத்தி ஒரு இலட்சம் மக்கள் வெளியேற்றம்



எதியோப்பியாவில் பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் வலுக்கட்டாயமாக தமது பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படு வதாக மனித உரிமை அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

அரசாங்கத்துக்குச் சொந்தமான சீனித் தொழிற்சாலை ஒன்றின் அபிவிருத்திப் பணிகளுக்காக இவர்கள் குறித்த பகுதியிலிருந்து வெளியேற்றப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை இந்தத் திட்டத்தினால் புதிய வேலைவாய்ப்புக்கள் உருவாகும் என்றும், இடம்பெயர்ந்தவர்களுக்கு வேறு இடத்தில் காணிகள் வழங்கப்படும் என்றும் அரசாங்கம் கூறியுள்ளது.

இதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன், தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிராந்தியம் உலக மரபுரிமைகளுள் ஒன்றாக அமையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

# தீவகம் செழிப்புற்று விளங்க புலம்பெயர்ந்த மக்களுக்கு அழைப்பு



(தீவகம்)

புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள தீவக மக்கள் தமது வர்த்தக வியாபாரத்தினை மீண்டும் எமது தீவகத்தில் நவீன முறையில் மேற்கொள்ள வேண்டுமெனவும் அப்போது தான் தீவகம் செழிப்பு மிக்க பூமி ஆகும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) கேட்டுக்கொண்டார்.

வேலணை அல்லைப்பிட்டி பிரதேசத்தில் நேற்று முன்தினம் தனியார் வியாபார நிறுவனமான சுப்பர் சேஷா நிறுவனத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். அங்கு மேலும் உரையாற்றும் போது பின்தங்கியுள்ள தீவகப் பிரதேசத்தில் இது போன்ற புதிய வியாபார முயற்சிகளுக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஈ.பி.டி.பி தொடர்ந்து ஆதரவு வழங்குமெனவும் தெரிவித்தார். இந்நிகழ்வில் வேலணை பிரதேசசபை தவிசாளர் சின்னையா சிவராசா (போல்) கலந்து கொண்டு சிறப்பித்தார்.

# உண்ணாவிரதப் போராட்டம்

(வவுனியா)

வவுனியா - கெலேபோகஸ் வெவ கிராமத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். நேற்று முன்தினம் தொடக்கம் இந்த உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்தக் கிராமத்தில் 168 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப் பட்டுள்ளன இவர்களுக்கு இதுவரை நிரந்தர வீடு, மின்சார வசதி இன்மை உள்ளிட்ட 17 கோரிக்கைகளை முன் வைத்து மீள்குடியேற்றப்பட்ட மக்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளனர்.

உரிய அரச அதிகாரிகள் தமது கெலேபோகஸ்வெவ கிராமத்திற்கு வந்து கோரிக்கைகளை நிறைவேற்றும்வரை உண்ணாவிரதத்தை கைவிடப் போவதில்லை என மக்கள் தெரிவித்துள்ளனர். 1955 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட கெலேபோகஸ் வெவ கிராமம் 1985 ஆம் ஆண்டு தீவிரவாத தாக்குதலுக்கு இலக்கானது.

# விழிப்புணர்வு ஊர்வலம்

(வவுனியா)

சிறுவர்களை தொழிலுக்கு நியமித்தல் மற்றும் உழைப்புக்கு எதிர்ப்பு தொவித்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வவுனியா மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் வவுனியாவில் விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல கரிச்சந்திரவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த விழிப்புணர்வு ஊர்வலத்தில் பாடசாலை மாணவர்கள் அரச, அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், பாடசாலை ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது சிறுவர்களை தொழிலுக்கு நியமிக்காதே, சிறுவர்களின் உரிமையை மீறாதே என்ற கோசங்களை எழுப்பியவாறும் சிறுவர் உரிமை தொடர்பிலான விழிப்புண்ர்வு துண்டுப்பிரசுரங்களை வழங்கியவாறும் ஊர்வலத்தில் கலந்துகொண்டோர் வீதியால் சென்றிருந்தனர்.வவுனியா மாவட்ட செயலகத்தின் முன்றலில் ஆரம்பமான ஊர்வலம் நகர மணிக்கூட்டுக்கோபுர சந்திவரை சென்று முடிவடைந்தது.

(160)

## சிங்கள மொழிப் பயிற்சி வடக்கில் ஆரம்பம்

வடபகுதி மக்களுக்கு சிங்கள மொழியை கற்பிக்கும் வேலைத் திட்டமொன்றை தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு ஆரம்பித்துள்ளது. அரச ஊழியர்களுக்கும், பொது மக்களுக்கும் சிங்கள மொழியை கற்பித்தல் இந்த வேலைத்திட்டத்தின் நோக்கம் என தேசிய மொழிகள் மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கோபிநாத் கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

# ரயிலின் முன் பாய்ந்து இருவர் தற்கொலை

குருநாகல் - வெல்லவ பகுதியில் ரயிலில் பாய்ந்து இருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு ஒன்பது மணியளவில் இடம்பெற் றுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த ஆண் ஒருவரும், பெண் ஒருவரும், இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த ரயிலிலேயே இவர்கள் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டுள்ளார். 43 மற்றும் 36 வயது மதிக்கத்தக்க திருமணமான இருவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன குறிப்பிட்டார்.

## காணி சுவீகரிப்பு...

மக்களது காணிகளைச் சுவீகரித்து வருவதாக ஊடகங் களில் பரவலாக செய்திகள் வெளிவந்திருந்தன. இதனையடுத்து இந்தவிடயத்தை ஆராய்ந்து கொள்வதற்காக குறித்த பகுதி பிரதேச செயலர்கள், பிரதேச சபையினர், யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் மற்றும் திணைக்களத் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

இங்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கையில், படையினர் தமது தேவைக்காக சில பகுதிகளில் காணிகளைத் தருமாறு கோரியிருக்கின்றனர். அந்தப் பட்டியலின் படி அதற்குள் பொதுமக்களது காணிகள் ஏதாவது உள்ளடக்கப்பட்டிருக்கின்றதா என்பது குறித்து பிரதேச செயலர்கள் விரிவாக ஆராய்ந்து தமக்கு விரைவாக அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இதன்போது படையினரால் கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் பொதுமக்களது காணிகள் எதுவும் சுவீகரிக்கப்படவில்லை. காரைநகர் மற்றும் தெல்லிப்பளைப் பிரதேச செயலர் பிரிவுகளில் சில காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்தன. அதற்கான இழப்பீடுகள் காணி உரிமையாளர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்.,கிளிநொச்சி மாவட்டங்களில் மக்கள் மீள்குடியமர்ந்த பகுதிகளிலும் மக்களது அடிப்படைத் தேவைகளை இனம்கண்டு பிரதேச செயலர்கள் தமக்குத் தெளிவான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறும் அதன் மூலம் மீள்குடியேற்றப்பட்ட மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## பணிப்பாளரை...

நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட காலத்தில் இருந்து பல்வேறு ஊழல் சம்பவங்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றிருக்கின்றது. இவ் ஊழல் சம்பவங்கள் வெளிவராமல் முடக்கி வைக்கப்பட்டுள்ளது. புதிய அரச மருத்துவ சங்கத் தலைவர் நியமிக்கப்பட்ட பின்னரும், அண்மையில் இடம்பெற்ற இரும்புக் கேடர்கள் மற்றும் மின் பிறப்பாக்கி வைத்தியசாலைக்கு வெளியே கொண்டு செல்லப்பட்டதும், அதை மீண்டும் மீளப்பெற்றுள்ளதாகவும் பணிப்பாளர் அறிக்கை வெளியிட்டார்.

அந்த அறிக்கையின் பிரகாரம் சுகாதார அமைச்சினால் யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் பல்வேறுபட்ட விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில், சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையின் பிரகாரமும், யாழ்.போதனா வைத்தியசாலை யில் இடம்பெற்ற ஊழல் சம்பவங்களில் பணிப்பாளர் உடந்தையாக இருக்கும் பட்சத்தில் பணி நீக்கம் செய்யப்பட வேண்டுமென அரச மருத்துவ சங்கத்தினர் மட்டுமன்றி பல்வேறு தரப்பினரும் கோரிக்கை முன் வைத்துள்ளனர்.

அத்துடன் மருத்துவ சங்கத்தின் பல ஊழல் சம்பவங்கள் குறித்து சுகாதார அமைச்சுக்கு தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அந்தவகையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் நலன் கருதியும், நோயாளர்களின் நலன் கருதியும் பணிப்பாளர் நீக்கப்பட்டு புதிய பணிப்பாளர் நியமிக்கப்பட வேண்டுமென சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அரச மருத்துவ சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எஸ்)

## மீள்குடியமர்வில்...

காணிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. இவ் வளவு காணிகளை இராணுவம் பிடித்து வைப்பதிருப்பதற்கு காரணம் எதுவுமில்லை என அவர் கூறினார்.

ஒரு வருடத்தினுள் மீள்குடி யமர்த்தலை பூரணப்படுத்து வதாக அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபைக்கு கூறியது. பின்னர், சில மாதங்களில் பூரணப்படுத்துவதாக பொது மக்களுக்கு தெரிவித்தனர். ஆனால் அவை எதுவும் இதுவரை நடக்கவில்லை என ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இராணுவம் நிலத்தை கையகப்படுத்தி வைத்திருப்பதற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை நிறுத்த பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையை ஆதாரம் காட்டிய பிரேமச்சந்திரன், அரசாங்கம் எந்த வடிவத்திலான எதிர்ப்பையும் சகிப்பதில்லை. இது ஜனநாயக விரோரதமான செயற்பாடு என்றார்.

## எங்களை...

சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர்.

பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாதகல் மக்களை யாழ்.செயலகத்தில் விசேட கூட்டமொன்றில் கலந்து கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட்டம் முடிவடைந்ததைத் தொடர்ந்து அம்மக்களைச் சந்தித்து அவர்களது கோர்ரிக்கைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

இதன்பின்னர் மக்களுக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஜனாதிபதியுடன் கதைத்து மாதகல் மேற்குப் பகுதி மக்களைத் துரிதமாக மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

தொடர்ந்து அமைச்சர் ஊடாக ஜனாதிபதிக்கு நான்கு கோரிக்கை அடங்கிய மகஜரை யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கையளித்த மக்கள் அங்கிருந்து அகன்றனர். (பா)

## சர்வதேச...

கூட்டத் தொடரில், நிறை வேற்றபட்ட இலங்கை தொடர்பிலான தீர்மானம், அவசியமற்றதும் - தேவையற்றதொன்றென தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானம் உள்நாட்டில் அர்த்தமற்றதாக உள்ளதெனவும் அவர் தெரிவித்தார். மேலும், இலங்கையின் உள்ளக விவகாரங்களில், சர்வதேசத்தின் தேவையற்ற தலையீடாக இதனை மக்கள் கருதுகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் உரையில், 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் இடம்பெயர்ந்த 290,000 மக்களில், 6022 பேர் மட்டுமே முகாம்களில் இருக்கின்றனர் என தெரிவித்த மனிசா குணசேகர, ஏனையோர் மீளக்குடியமர்த் தப்பட்டு விட்டனர். 124 சதுர ஏக்கர் நிலப்பரப்பில், இன்னும் நிலக்கண்ணி வெடிகள் அகற்றும் பணிகள் தொடர்ந்து இடம்பெறு கின்ற தென தெரிவித்தார்.

12 ஆயிரம் முன்னாள் போராளிகளில், 10949 பேர் விடுதலை செய்யப்பட்டு விட்டனர் எனத் தெரிவித்த அவர், அதில் 594 சிறார் போராளிகள், சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கில் இருந்து இராணுவத்தினர் படிப்படியாக குறைக்கப்பட்டு வருவதாக தெரிவித்த மனிசா குணசேகர, இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மாதாந்தக் கூட்டம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் முச்சக்கர வண்டி சேவையில் ஈடுபடும் அனைத்து முச்சக்கர வண்டி உரிமையாளர்க ளுக்கான மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும் என சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இடம்பெறும் இக்கூட்டத்திற்கு அனைத்து முச்சக்கர வண்டி உரிமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். (138)

## வலி.வடக்கில்...

சிவஞானம், என்.வித்தியாதரன் மற்றும் பிரதேச சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் எனப்பலரும் ஆலய முன்றலில் கூடி இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்த முற்பட்டார்கள்.

வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 250 பேர் வரையான மக்கள் கலந்து கொண்டார்கள்.

தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்தில் பூசை வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக தெல்லிப்பளை பிரதேச செயலகத்துக்குள் மகஜர் கொடுக்கச்சென்ற ஊர்வலத்தை பொலிஸார் ஆலய வாசலில் மறித்து முன்னே செல்லவிடாது தடை செய்தனர்.

இதனைத் தொடர்ந்து ஊர்வலத்தில் கலந்துகொண்ட மாவை சேனாதிராஜாவும் காங்கேசன் துறை பொலிஸ் அத்தியட்சகரும் இணக்கப்பாட்டுக்கு வந்ததன் அடிப்படையில் மட்டுப்படுத்தியவர்களுடன் சென்று மகஜரை உதவிப் பிரதேச செயலர் கே. பிரபாகர மூர்த்தியிடம் கையளித்தார்கள்.

# யாழ். மாநகர மரபுரிமைக் கழகம் நேற்று அங்குரார்ப்பணம்



யாழ். மாநரகர சபைக்குட்பட்ட மரபுரிமைச் சொத்துக்களைப பாதுகாக்கும் நோக்குடன் "யாழ். மாநகர மரபுரிமைக் கழகம்" ஒன்று அமைக்கப்பட்டு அதற்கான அங்குரார்ப்பண வைபவம் நேற்று நடைபெற்றது.

யாழ். மாநகர முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நேற்று மாலை 4.30 மணிக்கு யாழ். மாநகர மரபுரிமைக் கழக அங்குரார்ப்பண ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தின் மரபுரிமைச் சொத்துக்களான யமுனா ஏரி, மந்திரிமனை, அகழிகள் போன்ற பண்டைய மரபுரிமைச் சின்னங்கள் அழிந்து போகின்றன. மூவாயிரம் ஆண்டுகால எமது சின்னங்களும், வரலாறுகளும், அவற்றின் சான்றுப் பொருட்களும், எமது இளம் சந்ததியினர் பாதுகாக்க வேண்டும். அவற்றை அறிந்தும், பார்த்தும் தெரிந்துகொள்ள வேண்டும். வடபகுதியின் அழகை தொல்பொருள் சின்னங்கள் மிளிர வைக்க வேண்டும் என்பதற்காகவும் 22 பேரைக்கொண்ட யாழ். மாநகர மரபுரிமைக் கழகம் நிறுவப்பட்டுள்ளது.

இதில் யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தலைவராகவும், உபதலைவர், செயலாளர், பொருளாளர், தொலபொருள் சின்ன போசகர்களாக யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் எஸ்.சண்முகதாஸ் மற்றும் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் புஸ்பரட்ணம் ஆகியோர் உட்பட 15 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எஸ்,02)

# முசலி பாலம் பாவனையில்



மன்னார் மாவட்டத்தின் முசலிப் பகுதியில் அருவியாறு ஊடாக அமைக்கப்பட்டுள்ள புதிய பாலம் யாழ்ப்பாணம் மன்னார் புத்தளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு பெரிதும் வசதியாக அமைந்துள்ளது.

450 மில்லியன் ரூபா செலவிலான இப்பாலத்தின் நிர்மானப் பணிகள் ஒருவருட காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தற்போது இதனூடாக மக்கள் பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பாலம் ஊடாக மன்னார் புத்தளத்துக்கான பயணத்தின் தூரம் 100 கிலோ மீற்றரால் சுருங்குவதுடன் இதனூடான யாழ். புத்தளத்துக்கான பயணத்தின் தூரம் 150 கிலோமீற்றரால் குறைவடைகிறது. இப்பாலம் அமைந்துள்ள வீதியை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை தற்போது அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.


# அம்பாந்தோட்டை சூட்டுச் சம்பவம்; தேடப்பட்டவர் நீதிமன்றில் சரண்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை கட்டுவனவிவில் இடம்பெற்ற கொலை மற்றும் ஏனைய பல சம்பவங்கள் தொடர்பாக தேடப்பட்டு வந்த ஜூலாம்பிட்டிய அமரே என்பவர் தங்காலை மேல் நீதிமன்றில் சரணடைந்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித ரோஹண தெரிவித்தார்.

முன்னர் இடம்பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பாகவே அவர் நீதிமன்றில் சரணடைந்துள்ளார் எனவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

2002 ஆம் ஆண்டு அவர் சிறையிலிருந்து தப்பிச் சென்றிருந்தார் எனவும் மித்தெனியவில் இடம்பெற்ற கொலை தொடர்பாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது எனவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.



1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் திகதி சென்னையில் உள்ள கோடம்பாக்கத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபாவும் அவரது தோழர்களும் புலிகள் இயக்கத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர். அத்துயரச் சம்பவத்தின் 22 ஆவது நினைவுதினம் தோழர் நக்கீரன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட பிரமுகர்களையும், சட்டத்தரணி தேவராஜன் ரங்கன் நினைவுச்சுடர் ஏற்றுவதனையும், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரட்ணம் நினைவுரையாற்றுவதையும் காணலாம்.

# முன்னாள் அமைச்சர் காலமானார்

முன்னாள் அமைச்சரான மகிந்த ரத்னதிலக கொழும்பு தனியார் வைத்தியசாலையில் நேற்றுக் காலை காலமானார். ஒரு மாத காலமாக கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இவர் மரணமானதாக உறவினர்கள் அறிவித்துள்ளனர்.

64 வயதுடைய மகிந்த ரத்னதிலகவின் உடல் அவரது இரத்தினபுரி இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

# கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் அமைந்துள்ள ஆசிரியவள நிலையத்தில் நடைபெறவுள்ளது. அதிபர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுவதுடன் பிரதிநிதிகளை அனுப்பி வைக்கவேண்டும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிபபாளர் அறிவித்துள்ளார். (109)

# தமிழினி விரும்பினால் புனர்வாழ்வு

(கொழும்பு)

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு மகளிர் தலைவி என கருதப்படும் தமிழினி (சுப்பிரமணியம் சிவகாமி), விரும்பினால் அவருக்கு புனர்வாழ்வளிக்க ஆட்சேபனை இல்லை என சட்ட மா அதிபர் இரகசிய பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். தமிழினி தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இரகசிய பொலிஸார் சட்ட மா அதிபர் தமக்கு வழங்கிய ஆலோசனையை கொழும்பு நீதவான் நீதிமன்றில் அறிவித்தனர்.

கடந்த 15 ஆம் திகதி சட்ட மா அதிபர் தமக்கு இந்த ஆலோசனையை வழங்கியதாக இரகசிய பொலிஸார் விசேட அறிக்கை ஒன்றை சமர்பித்து நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். மேலும் தமிழினி பல காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் எதிர வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் அவரிடம் விருபபம் கேட்டு நீதிமன்றிற்கு அறிவிக்கும்படி நீதவான் இரகசிய பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# கிளிநொச்சி மீன் வியாபாரிகளின் அவலநிலை



கிளிநொச்சி அம்பாள்குளம் பொதுச்சந்தை மீன் வியாபாரிகள் பெரும் அவலத்திற்கு மத்தியில் மீன் வியாபாரம் செய்துவருகின்றனர். தற்போது கடும் வெயில் காலம் என்பதால் சந்தைக்கு கொண்டுவரும் மீன்களை ஒரு சில மணித்தியாலயங்களே வைத்து விற்பனை செய்ய முடிவதாகவும் அதன் பின் வெயிலின் தாக்கத்தால் அவை கருவாடாக மாறிவிடுவதாகவும் வியாபாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை மழைக்காலங்களில் மழையில் நனைந்தபடி மீன் வியாபாரம் செய்வதாகவும் தாங்கள் பல முறை கரைச்சி பிரதேச சபைக்கு தெரியப்படுத்தி அவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் குறிப்பிடும் சந்தை மீன் வியாபாரிகள், மாறாக நாளாந்தம் கரைச்சி பிரதேச சபையினர் தங்களிடம் வரி எடுப்பதனை மறக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.


## மரண அறிவித்தல்

### ஸ்ரீமுருகன் அருள் மார்க்கண்டு சுவாமிகள்

மானிப்பாய் லோட்டன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மார்க்கண்டு சுவாமிகள் (முன்னாள் மானிப்பாய் பிரதேச சபை உப தலைவரும் சமாதான நீதவானும்) 17.06.2012 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா)
ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச
அமைப்பாளர், வலி. தென்மேற்கு பிரதேச
சபையின் எதிர்க்கட்சித் தலைவர்.

(C/175)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூன் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.